Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஜூலை 16-22, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 365

## புலிகளின் நிராகரிப்பினால் கேள்விக்குறியாகும் அரசியல் தீர்வு



# முரசம்

## இந்தியாவின் திட்டம்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

இந்தியா இப்போது
இலங்கையின்
இனப்பிரச்சனைக்குத்
தன்னிடம் ஒரு
தீர்வுத் திட்டம் உள்ளதாக
அறிவித்துள்ளது.
தக்க சமயத்தில்
அதனை வெளியிடுவதாகவும்
கூறியுள்ளது.

இதே வேளை
இனப்பிரச்சனைத் தீர்வுக்கான
பேச்சுவார்த்தைகளில்
கலந்துகொள்ள
தான் தயாரெனவும்
அது தெரிவித்துள்ளது.
அத்தோடு இவ்வறிப்பையடுத்து
இலங்கையின் அமைச்சர்
லக்ஷ்மன் ஜெயகொடியும்
ஜனாதிபதியின் செயலாளர்
பாலபட்டபந்தியும்
ஜனாதிபதியின் கடிதத்தோடு
அவசரமாக இந்தியா சென்றதும்
முக்கியத்துவம் வாய்ந்த
ஓர் அரசியல் நிகழ்வாகவே
தென்படுகிறது.

அதுவும்,
இலங்கை அரசாங்கம்
தீர்வுத் திட்டமொன்றை
முன்வைத்து
எதிர்க்கட்சியுடன்
பேச்சுவார்தை நடத்தி
இணக்கம் காணும் இறுதிக்
கட்டத்தில்
நிற்கின்ற தருணத்தில்,
புலிகள் அதனை
முற்றாக நிராகரித்திருக்கின்ற
வேளையில்,
இந்தியா தன்னிடம்
தீர்வு ஒன்று உள்ளதெனக்
கூறியுள்ளது,
புதிய பரிமாணத்துக்கு
இட்டுச் செல்வதாய் உள்ளது.

இலங்கை அரசாங்கத்தின்
தீர்வு ஆலோசனைகளில்
எதிர்க்கட்சியுடனான
பேச்சுவார்த்தைகளில்
தமிழ்த் தரப்பினருக்கு
திருப்தியில்லாத முடிவுகள்
ஈட்டப்படுவதாக
வெளிவந்த செய்திகளுக்கு
மத்தியில்,
இந்தத் தீர்வுத் திட்டம் பற்றி
எந்தக் கருத்தையும் கூறாமல்,
புதியதொரு தீர்வுபற்றி
இந்தியா அறிவித்துள்ளமை
ஒரு சாதுரியமான
இராஜதந்திரமாக அமைந்துள்ளது.

தேர்தல் நிகழவுள்ள கட்டத்தில்
அவசரமாக முடிவுகாண முயலும்
அரசாங்கத்தின் செயற்பாடுகள்
இனப்பிரச்சனைக்கான தீர்வில்
திருப்திகரமான ஒரு
நிரந்தரத் தீர்வுக்கு
வழிகாணுமா என்ற
ஐயங்கள் ஏற்கெனவே
தலைதூக்கியிருந்தன.
ஏனெனில் இந்தப்
பேச்சுவார்த்தைகளில்
இனப்பிரச்சனையின் பிரதான
பாத்திரவாளியான
தமிழ்த் தரப்பின்
பிரதிநிதித்துவத்துக்கு
பலஹீனமான இடமே
வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தரப்பின்
பலமான பேரம் பேசும் சக்தி
கொண்ட
விடுதலைப்புலிகள்
பங்குபற்றாத நிலையில்
ஏனைய தமிழ்க்கட்சிகளின்
கருத்துக்கள்
கூடசெல்வாக்கிழந்தவையாக
உதாசீனப் படுத்தப்படும்
போக்கையே
அவதானிக்க முடிகிறது.

சிங்கள நலனிலும், முஸ்லிம்
நலனிலும்
அக்கறை செலுத்துவதுபோல்
தமிழ் மக்களின்
அபிலாஷைகளை
முன்னிறுத்தக்கூடிய
பலமான சக்திகள்
தீர்வினை வகுப்பதில்
ஈடுபடுத்தப் படவில்லை.

பதிலாக,
வகுக்கப்படும் தீர்வில்
முடிந்தவரை தம்மைத்
தற்காத்துக் கொள்ளும்
மறுதரப்பினராகவே
தமிழ்த் தரப்பினர்
ஆக்கப்பட்டுள்ளனர்.

அதாவது,
சமைப்பதில் பங்குபற்றாது,
சாப்பாடு திருப்தியாவென்று
சம்மதம் தெரிவிக்கும்
பாத்திரமொன்றே
வழங்கப்பட்டுள்ளது.

பசியின் அகோரத்தைப்
பொறுத்துத்
தருவதைத் தின்னும் நிலைக்குத்
தள்ளப்பட்டவர்களாகத்
தமிழர்கள் கருதப்படுகிறார்கள்.

இனப்பிரச்சனைக்குத்
தீர்வுள்ளதெனத் தெரிவித்துள்ள
இந்தியா,
இந்த நிலையைக்
கருத்திற்கொண்டு
தமிழ்த் தரப்பினரையும்
உரிய கௌரவத்துடன்
தீர்வின் பங்காளியாக்குவதற்கு
வழியமைக்க வேண்டும்.

ஒருவர் தர,
ஒருவர் வாங்குவதாக அல்லாமல்
இருவருமே சேர்ந்து
ஒன்றை உருவாக்குவதே
அர்த்தமுள்ள தீர்வாக அமையும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை **என்றென்றும் அன்புடன்.**
**ஆசிரியர்.**

# ஆன்மீகம்



## பேராசை தவிர்த்து நேராக வாழ்வோம்

இன்று நமது தேசம் புனிதத் தன்மையில் குறைந்து வருவதைக் காண்கின்றோம். இதற்கெல்லாம் அடிப்படை அகந்தையும், மதநம்பிக்கையில் முழுமையான ஈடுபாடு இல்லாமையும்-மனம்அசுத்தமானதும் தான்!

மனம் நிம்மதியின்றித் தவிப்பதற்குக் காரணம் மண்,பொன், பெண், புகழ் இவைகளின் மேல் கொண்ட பேராசைகளே. மனதனுக்கு ஆசையிருக்கத்தான் வேண்டும். அது அளவோடு வளமுள்ளதாக இருக்க வேண்டும். அசுத்தமான உணவும் தவிர்க்கப்பட வேண்டும். எந்த நேரமும் இறையன்பு நிறைவாக செலுத்த வேண்டும். ஆண்டவனால் படைக்கப்பட்ட அனைத்து ஜீவன்களும் இப்பூமியில் வாழ்கின்றன. இவற்றுக்கெல்லாம் அவ்வப்போது தேவைப்படும் உயிர்வாழ்வுக்கான சகல தேவைகளையும், படைக்கப்பட்ட அந்தப் பரமாத்மாவாலேயே கொடுக்கப்படுகிறது. கல்லினுட் தேரைக்கும் உணவு கொடுக்கும் இறைவனுக்கு ஏனையவைகளைப் பற்றித் தெரியாதா? என்ன!

எனவே எண்ணம் நல்லதாகவும், எமது அன்றாடவாழ்வு அமைதியாகவும் ஏற்பட மத அனுஷ்டானத்தோடு கூடிய நேர்வாழ்வில் காலடி எடுத்து வைப்போமானால் நமது பூமியில் புரையோடிப்போன பயங்கர தொற்று நோய் பரவாது தவிர்க்கலாம். எல்லாம் வல்ல இறைவனை வேண்டி 'நிம்மதி'யுடன் வாழ்வோமாக!

அ.அரசரெத்தினம்-சேனையூர் 06.

## அல்லாஹ்வின் கட்டளை

உலகில் உள்ள சகல படைப்புகளை விடவும் அதி மேன்மையான படைப்பாக அல்லாஹ் மனிதனைப் படைத்துள்ளான்.

பிறப்பினாலே மனிதன் உயர்வும் கண்ணியமும் பெற்று விட்டான். இதில் நாம் ஒருவரை ஒருவர் ஒடுக்கவோ இழிவு படுத்தவோ முனையக் கூடாது.

அனைவரும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டோம்! இறுதியில் அவனிடமே சென்றடைவோம்! அனைவரையும் விசாரித்து தீர்ப்பு வழங்கும் சக்தியும் அவனிடமே உண்டு என்ற உள்ளுணர்வு எம்மிடத்தில் வரவேண்டும்.

மனிதன் மிக அழகான நேர்த்தியான அமைப்பில் அல்லாஹ்வால் படைக்கப்பட்டதன் நோக்கம் சதாவும் அவன் நன்மை செய்து வாழ வேண்டுமென்பதுதான்.

பகுத்தறிவு அவனுக்கு வழங்கப்பட்டதன் காரணம் நன்மை, தீமைகளை பிரித்தறிந்து நன்மைகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுவதற்கே.

ஆகவே நாம் தீமைகளைத் தவிர்த்து நன்மைகளை செய்வோம், இதுவே அல்லாஹ்வின் கட்டளை.

எம்.சி.கலீல்-கல்முனை 05.

## முன்மாதிரியான இயேசு கிறிஸ்து

"காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்!"

மத்தேயு 6:28

நாங்கள் சாதாரணமாகப் பார்ப்பதற்கும் கவனித்துப் பார்ப்பதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. மேலோட்டமாய் பார்க்கும்போது ஒரு மலரின் தோற்றமும் நிறமும் தான் எம் கண்களுக்குத் தெரியும். ஆனால் கவனித்துப் பார்க்கும் போது அதில் எத்தனை இதழ்கள் இருக்கின்றன, என்ன வாசனை வீசுகிறது, மகரந்த தூள் எங்கே இருக்கிறது என்பதை எல்லாம் நாம் அறிந்து கொள்கிறோம்.

கர்த்தராகிய இயேசுவைக் கவனித்துப் பாருங்கள், அவரின் அன்பு, கிருபை, வல்லமை எம்மை நிரப்பி ஆட்கொள்ளும், இயேசுவைக் கவனித்துப் பார்த்தால், எந்தப்பிரச்சனைக்கும் தீர்வு அவரிடத்தில் மாத்திரமே உண்டு. எந்த போராட்டத்திற்கும் அவரிடத்தில் முடிவு உண்டு. எந்த வியாதிக்கும் ஆரோக்கியம் உண்டு, அவரே எம் முன்மாதிரியான பரிகாரியான கர்த்தராக இருக்கிறார்.

சகோதரரே, ஆகாயத்துப் பறவைகளையும், புஷ்பங்களையும் மட்டும் கவனித்துக் கொண்டிருக்க முடியாது. அவைகளின் சிருஷ்டிகராகிய நமக்கு முன்மாதிரியாக இருக்கிற இயேசுவையும் கவனித்துப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

எம். வேதமாணிக்கம்-கொழும்பு 05.

## கவிதைப் போட்டி இல.365



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.07.2000

கவிதைப் போட்டி இல.365
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.362

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**

### பரிசுக்குரிய கவிதை

### வாழிய மலரே.....

போர் கொண்ட பூமியில்
வேர் விட்ட சிறுமலரே-நீ
நாதியற்றுப் போகவில்லை...
ஆதரவுக் கரமுண்டு-என்றும்
மகிழ்வோடு வாழ்ந்துவிடு

**தி. கலைவாணி-வவுனியா.**

### மறைந்தனவே!

மகளே! உன் புன் சிரிப்பு
மலர்ந்த முகத்தை என் கரம்
தொட்ட நேரந் தொட்டு,
என் கவலைகள் எல்லாம்
கணப் பொழுதில் மறைந்தனவே!

அருள்சாமி-இராஜவெல்ல

### கண்ணுக்குள் நிலவு

பொட்டு வைத்த-என்
வட்ட நிலவே,
தமிழனாய்ப் பிறந்ததால்-உன்
தந்தை சிறைவாசம் செல்கின்றேன்.
கலங்காதே கண்ணே,
தமிழன் தலைநிமிரும் நாள்
தொலைவில் இல்லை!
காத்திரு கண்ணே,
அந்நாளுக்காய்
கண்ணுக்குள் நிலவாக...!

எல். வசந்தமலர்-மாத்தளை.



### தே(பா)சம்

தேசம் விட்டுப் போனாலும்-நம்
பாசம் விட்டுப் போகாதப்பா!
நேசக் கரம் நீட்டி ஆதரிக்க
நீங்களின்றி யாரப்பா எங்களுக்கு?

வளர்மதி-நமுனுகுல.

### சிரிப்பு

சிரி,
நன்றாக வாய்விட்டுச்
சிரி!
இந்தச் சிரிப்பு
இன்று
உனக்குச் சொந்தம்!
ஆனால்
நாளை அது...?

பி. லோகதாஸ்-தலவாக்கலை.

### அதிசயம்

கொழும்புக்குப் போன
அம்மாவும் அப்பாவும்
உயிரோடு வந்து
சேர்ந்து விட்ட
அதிசயத்தை எண்ணி
பூரிப்படைகிறாளா
இவள்?

ஆர். பாலகிருஷ்ணன்-
மாத்தளை.

### சிரிப்பு

உன்னைப் போல்
சிரிப்பதற்கு இம்
மண்ணில் உள்ள
மக்கள்
நினைக்கிறார்கள்
ஆனால்
முடியவில்லையே...!

ப. ஜினே-
மட்டக்களப்பு.



### காலை நேரப் பூ

வையகத்திலும், வானுலகத்திலும்,
சார்ந்திருக்கும்
இன்பமெலாம் ஒருருவமாய்ச்
சமைந்த சூறையமுதே
ஈரமுள்ள இதயம்
ஒன்று,
இரக்கமுடன் உன்
சாந்த வதனம்
வருட
எளிமையாய் இன்முகம்
காட்டும் நீ,
ஏழை வீட்டில்
பூத்த
காலை நேரப் பூவோ?

த. வசந்தி-மாவத்தகம.

### இழந்தாய்....!

குழந்தையே,
தாயை இழந்தாய்;
தந்தையை இழந்தாய்;
சகோதரரை இழந்தாய்;
உன்னை இழக்க
நாம் வீடோம்!

வ. திருமால்-கொழும்பு-13.

### தேன் நாள்...

அர்த்தமற்றிருக்கும்
அநாதை வாழ்வில்
எவ்வர்த்தத்தினை,
எதிர் நோக்க-இப்
புன் சிரிப்பு...?

மொஹமட் அனீத்-புதிய
காத்தான்குடி-03.

# வாசக(ர்)சாலை

தினமுரசுக்கு,

முரசில் வந்த தகவல் பெட்டியில் விழுங்கும் மீனை பார்த்தவுடன் பயந்து விட்டேன். இப்படியும் பிள்ளையை விழுங்குகிறதா, இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பெற்றோர்கள். எனக்கு இதை பார்த்தவுடன் அதிர்ச்சி! பின் படித்து விட்டு பார்க்கும் போது உண்மை புரிந்தது. டொரண்டோவில் முட்டுப் பட்ட கார் சாரதிக்கு காயம் இல்லை என்பது அதிசயம். சர்தார்ஜி ஜோக்ஸ் மிகவும் மிகவும் சூப்பர். "விசிறியை எடுத்துவா என்பதும் மிக மிக நன்றாக" இருந்தது. பாப்பா முரசில் இடம்பெற்று இருந்த பூசனிக் காய் முயலார் திறம். பூசனிக் காய் முயலாரை செய்து பல நாட்களுக்கு வைக்க முடியாது.

ரி.அரவிந்-தப்போவ.

முத்தமிழ் முரசே! தமிழ் அமுதம் புகட்டி பல்லாயிரம் தமிழ் இதயங்களை திகட்டாது பருகவைக்கும் முரசே! 2534 நாட்களுக்குப் பழையவன் நீ இன்னும் பூத்து குலுங்குகிறாய். நேற்று வந்த புதியவர்கள் எல்லாம் வந்த வழி தெரியாமல் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

முரசே உன்னிடம் எனக்கு பெயர் எடுக்க வேண்டும் என்று நான் உன்னைப் புகழவில்லை. வாகனத்திலும் ஆற்றங்கரைகளிலும் முச்சந்திகளிலும் வாசகர்கள் உன்னை புகழ்கின்றனர். நான் மட்டுமா? உலக தமிழ் மக்கள் மத்தியில் உனக்குத் தான் மவுசாம். உனது வெற்றி இன்னமும் கொடிகட்டிப் பறக்க வாழ்த்தும் தமிழ் மகன்.

ஆ. வர்ணானந்தன்-போவே எஸ்டேட்.

அன்பின் முரசே!

வியாழக்கிழமையில் உன்னை ஆவலோடு எதிர்பார்ப்பவர்களின் நானும் ஒருவன். உன் படைப்புகள் அனைத்தும் வியக்கவைக் கின்றன. அதிலும் இராஜகுமாரனின் 'மன்னாதி மன்னன்' 'இராஜதந்திரி'யின் அலசல் 'சிந்தியாவின் பதில்கள்' மேலும் உனக்கு அழகு சேர்க்கின்றன. வாழ்க உன் பணி.

ம. கிறேசன்-நாவற்காடு.

என் இனிய... முத்தான முரசுக்கு பல கோடி வந்தனங்கள்.

உன் முகமும், அகமும் முழுமை பெற்ற சிறப்பம்சங்களைச் சுமந்து வருவது குறிப்பிடத்தக்கது.

உன் ஆயிரக் கணக்கான இரசிகர்களில் நானும் ஒருவன். நீ சுமந்து வருபவைகள் அனைத்தும் சிறப்பானவையே! குறிப்பாக 'முரசம்', 'ஸ்பெஷல் ரிப்போர்ட்', 'நில்-கவனி-முன்னேறு', 'தேன் கிண்ணம்' என்பவை என் நெஞ்சில் நிறைந்தவை.

'தேன் கிண்ணம்' பகுதியில் வளர்ந்து வரும் இளம் கவிஞர்களுக்கு வாய்ப்பளிப்பது போற்றத்தக்கது. இதில் நானும் ஒருவன். மென்மேலும் முத்தான வார மலரின் பணி தொடர வாழ்த்துக்கள்.

எம்.ஐ. சஹப்தீன்-காங்கேயனோடை.

தித்திக்கும் தினமுரசே...! தெவிட்டிடாமல் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சூப்பரோ... சூப்பர். வியாழன் தோறும் என் கரம்தனிலே தவழ்ந்து முகம்தனை மலரச் செய்து, உள்ளத்தைப் பூரிக்கவைக்கும் உன்னதமான உன் சேவைக்கு நிகரான சேவை நீ மட்டுமே... உன் நிகரற்ற பணி மென்மேலும் தழைத்தோங்க வேண்டுமென வாழ்த்துமிவன்.

சி. நந்தகுமார்-ஆரையம்பதி-02.

### 'சொக்கவைக்கும் முரசு'

இனிய முரசே,

வாரம் ஞாயிறு நாளைச் சுமந்து முன்கூட்டியே, வியாழன் நாளில் எங்கள் கரங்களில் வந்து தவழ்கின்ற உன்வரவு நல்வரவே எங்களுக்கு! மர்மக் கதை மன்னனின் 'சிம்லா வித் சுசீலா' சும்மா சொல்லக்கூடாது, ஆரம்பமே அசத்தல். அடுத்தது என்னவென்று எதிர்பார்க்க வைக்கும் எடுப்பான தொடர் புஸ்பாதங்கத் துரையின் 'நடந்த கதை' கொலையாளி யார்? பலே கதைதான். பக்கம் இருபதும் வாசகர்களை சொக்கவைக்கும் என்பதில் ஐயமில்லை! நிச்சயம் முரசு கச்சிதம்! தெள்ளுத்தமிழ் துள்ளுநடையில் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் 'இலக்கிய நயம்' கலக்கிவருகிறது. கவிதை தரும் 'தேன் துளிகள் இதய கிண்ணத்தில்' நிரம்பி வழிகின்றது.

கவிக்குயிலன்-சேனையூர்-06

அன்பின் முரசிற்கு! உனது சூட்டுக்கும் சுவைக்கும் வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? முரசில் 'முரசம்' எனக்குக் காட்டிய இருள் கூட்டினை விட்; உண்மைகளை இருளுக்குள் தேடத்தான் வேண்டுமா? எப்போதும் அவை இருளுக்குள் கிடப்பதில்லையே. இதே போல் தான் தமிழர் நாம் வாழ்விலும் 'வெளிச்சம் வருமா?' விடிவெள்ளிக்கு முன்தான் இருட்டு அதிகமாம்! நாசுக்காக தெரிவித்த என் இனிய முரசே! உன் பணி மேலும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

கௌரி-செங்கலடி.

'தினமுர'சின் ஜனன நாள் தொட்டே அதன் தீவிர ப்ரியனான நான் 'முர'சைப் பிரித்தால் முதலில் என் விழிகள் பாய்வது 'சிந்தியா பதில்'களில்தான்.

அதிலும் நமது அணி முதலிரண்டு டெஸ்ட்டிலும் தோற்றது பற்றிய ஒரு வாசகரின் கேள்விக்கு 'சிந்தியா' வழங்கிய பதில் செம அசத்தல் போங்கள்! என்னை மறந்து சிரித்து விட்டேன்.

கமால்-மாத்தளை.

வாசகர் சாலைக்கு!

கடந்த ஜூலை 2 இல் 'முரசில்' வெளிவந்த அநுராதபுரம்-ஸப்ரியின் 'அம்மா' சிறுகதை படித்தேன்.

மிக நேர்த்தியான சொல் வீச்சுக்களைக் கொண்டதோடு, தற்கால வாழ்வியலுக்கு ஏற்றவாறு புனையப் பட்டிருந்தது. ஸப்ரியின் சிறுகதைகள் தொடர வேண்டு மெனக் கூறி நல்லதொரு படைப்பாளியை வாழ்த்துகிறேன் என்று திருப்தியுடன் விடை பெறும்.

கனகசபை தேவகடாட்சம்-
மூதூர்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# புதிய அரசியல் யாப்பு நிறைவேறுவதற்கு

# தாண்டப்பட வேண்டிய மூன்று முட்டுக் கட்டைகள்

**ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாவதற்கு பச்சைக்கொடி காட்டியமை இந்நாட்டின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இருப்பினும் இந்த அரசியல் யாப்பு பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு மூன்று முக்கியமான முட்டுக்கட்டைகளைத் தாண்டவேண்டிய நிலை உருவாகியுள்ளது.**

இலங்கையின் கடந்த கால வரலாற்றில் என்றுமே நடைபெறாத ஓர் அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. இந்த சுதந்திரமடைந்து இந்த 52 ஆண்டுகளில் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சி பீடம் ஏறியிருந்தன. இருப்பினும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரே கருத்துடன் செயற்பட்டது கிடையாது.

இந்த நாட்டில் கடந்த பல வருடங்களாக இடம் பெற்று வரும் இனப்பூசல்களை அடிப்படையாகக் கொண்ட பாரிய யுத்தத்தினால் ஏற்பட்டுவரும் அநர்த்தங்களை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆளுங் கட்சியும் எதிர்க்கட்சியும் ஓர் ஒருமைப்பாட்டை எட்டியுள்ளன.

இந்த நாட்டை வாட்டும் தலையாய பிரச்சனைக்குத் தீர்வு காண புதியதொரு அரசியல் யாப்பினை உருவாக்குவதற்கே இவ்விரு கட்சிகளும் உடன்பாட்டுக்கு வந்துள்ளன. உலகமே இதனைப் பாராட்டுகின்றது. ஆனால் இத்துடன் எல்லாமே முடிந்து விட்டது என்று முடிவுகட்டி விட முடியுமா?

இனிமேல் தான் பெரும் பிரச்சனைகளே பூதாகரமாக வெடிக்கப் போகின்றன, என்று அவதானிகள் கருதுகின்றனர்.

இன்றுள்ள நிலையில் இந்த நாட்டின் நிரந்தரமான அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் போர் முனையில் அரசாங்கப் படைகளுடன் மும்முரமாக மோதிக் கொண்டிருக்கும் விடுதலைப் புலிகளின் ஒப்புதல் மிக முக்கியமான தொன்றாகும்.

இன்றுவரை அரசாங்கம் எதிர்க்கட்சியினருடன் பேசித் தீர்வு காணப்பட்டதாகக் கூறப்படும் தீர்வுத் திட்டத்தையே எந்தவிதமான பரிசீலனைக்கும் உட்படுத்தாமல் விடுதலைப் புலிகள் முற்று முழுதாக நிராகரித்து விட்டனர். புலிகளின் நிலைப்பாட்டை அடியொற்றியே தமிழர் விடுதலைக் கூட்டணியும் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென அறிவித்துவிட்டது. இருப்பினும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் இத் தீர்வுத் திட்டத்திற்கு ஓரளவு சார்பு நிலை கொண்டவையாகக் கருதப்படுகின்றன.

"எது எவ்வாறானாலும் இந்த அரசியல் யாப்பினை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளைப் பெற்று நிறைவேற்றியே தீருவேன்!" என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க சபதமெடுத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய உரிமையையும் வழங்குவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று மார்த்தட்டிக் கொண்டிருக்கும் சிங்களப் பேரினவாத இயக்கங்களுடனும் கிட்டத்தட்ட, இப் பேரினவாத சக்திகளின் கருத்தையே பிரதிபலிக்கும் மகா சங்கத்தினருடனும் ஜனாதிபதி தீர்வுத் திட்டத்தில் அனுகூலங்கள் பற்றி விரிவாக உரையாடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதுவரை நடைபெற்ற நடவடிக்கைகள் ஓரளவு சுமூகமாக நடைபெற்று முடிந்திருப்பினும் மகா சங்கத்தினருடனும் பேரினவாத இயக்கங்களுடனும் பேசி ஒரு நல்ல முடிவை எட்டுவது பகீரதப் பிரயத்தனமாகவே அமையப் போகிறது. இந்தப் பிரயத்தனத்திலும் ஓரளவாவது ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு வெற்றி கிட்டுமானாலும், விடாப்பிடியாக நிற்கப் போகும் விடுதலைப் புலிகளை இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வருவது மிக மிகச் சிரமமான ஒருகாரியமாகவே அமையப் போகின்றது, என்பது திண்ணம்.

இப்படியான ஒரு நெருக்கடி நிலையில் இருந்து மீண்டு உண்மையான அமைதி நிலைநாட்டப்பட வேண்டுமானால் நடு நிலை நின்று மத்தியஸ்தம் வழங்க நிச்சயமாக மற்றுமொரு வலிமை வாய்ந்த நாட்டின் தலையீடு அவசியமாகும். அப்போது தான் நல்லதொரு தீர்வு கிட்டும் என்று அவதானிகள் நம்புகின்றனர். ■

## தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்!

## தமிழ் மகாசங்கம் கோரிக்கை!

சகல தமிழ்க்கட்சிகளும் ஒரு அணியின் கீழ் ஒன்றிணைந்து போட்டியிட்டால் மட்டுமே அம்பாறை மாவட்டத் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்ற முடியும். எனவே ஒன்றிணையும் நடவடிக்கைக்கு ஒத்துழைக்குமாறு சகலதமிழக் கட்சிகளும் கேட்டுக் கொள்ளப் படவிருக்கின்றன.

மேற்படி தீர்மானம் கடந்த ஞாயிறன்று காரைதீவில் நடைபெற்ற அம்பாறைமாவட்ட தமிழர் மகாசங்க மத்திய குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

காரைதீவு இ.கி.மிஷன் ஆண்கள் பாடசாலையில் சங்கத்தலைவர் கே.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சுமார் 40 மத்தியகுழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ●

## இஸ்லாம் பாட நூலில் இந்து சமயப் பாடம்?

இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிட்டுள்ள பாட நூலொன்றின் தலைப்பு இஸ்லாம் என்றுள்ளது. ஆனால் உள்ளடக்கத்தில் அரைப் பகுதி இந்துசமயபாடமாகவிருந்தது.

இதனைக் காட்டியபோது உலகவங்கி தலைமையக குழுத்தலைவர் கலாநிதி வின்சன்ற் கிறீனி அதிர்ச்சியும் அதிருப்தியும் அடைந்தார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடனான 2 மணி நேர கலந்துரையாடலொன்று உலகவங்கி கொள்ளுப்பிட்டி தலைமையகத்தில் புதனன்று நடைபெற்றது.

சங்கம் சார்பில் பொதுச் செயலர் த.மகாசிவம், நிருவாகச் செயலாளர் எஸ். சரவணபவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி ஹர்சா அத்திருப்பானவும் கலந்து கொண்டார்.

பாடநூல் எழுதுபவருக்கும், படம் வரைபவருக்கும் தொடர்பில்லாதபடியினால் பாடநூல்களின் தலைப்புக்கும் படத்துக்கும் சம்பந்த மில்லாமல் காணப்படுவதை பல உதாரணங்களுடன் குழு எடுத்துக்காட்டியது.

5 வருடம் பாவிக்கும் என்று வெளியிடப் பட்ட புதிய பாட நூல்களின் கட்டு(Binding) இப்போதே குலைய ஆரம்பித்துள்ளதையும் சுட்டிக்காட்டப்பட்டது.

தமிழ்ப்பாட நூல்கள் சிலவற்றில் முன் பக்கமும் பின்பக்கமும் தமிழ்த் தலைப்புகள் எழுதப்பட்டுள்ள போதிலும், முதுகுபக்கத்தில் (சுட்டும் பக்கம்) தலைப்புக்கள் சிங்களத்தில் எழுதப்பட்டுள்ளமை அநீதியானது என ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறப்பட்டது.

## படையினரின் சுவரொட்டிகள்!

சாதாரண குடிமக்களை எல்.ரீ.ரீ.ஈ. யினர் பல்வேறு வழிகளில் துன்புறுத்துவது போன்று காட்சியளிக்கும் அனேக சுவரொட்டிகளைப் பாதுகாப்புப் படையினர் ஒட்டியுள்ளனர்.

சகல மதங்களையும் புலிகள் நசுக்குவதாகவும், அப்பாவி மக்களைக் கொன்று குவிப்பதாகவும் சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்து யுத்தக் கொடுமைகளுக்குள் இழுத்து விடுவதாகவும் அந்தச் சுவரொட்டிகளில் உள்ள காட்சிகள் சித்தரிக்கின்றன. ■

## மேஜர், கப்டன் தர புலிகள் 6 பேர்

## வெடிவிபத்தில் பலி!

ஆயுதப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த சமயம் தவறுதலாக ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் தமது உறுப்பினர்கள் ஆறு பேர் பலியானார்கள் என்ற விவரத்தைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

மேஜர், கப்டன் தரத்திலான ஆறு புலி உறுப்பினர்களே பலியாகியுள்ளார்கள். இச் சம்பவம் முல்லைத்தீவில் இடம் பெற்றுள்ளது.

மேஜர்களான கரும்புலி எஸ்.சாந்தி (ஸ்ரீவாணி) மட்டக்களப்பு, கே.ஆர்.ராஜேஸ்வரன்(அருட்சந்திரன்) யாழ்ப்பாணம், கே.ஆனந்தராஜா(சம்பத்குமார்) யாழ்ப்பாணம், கே. சசிக்குமார் (செங்கண்ணன்) யாழ்ப்பாணம், கப்டன்களான ஏ.பிரகாஷ் (இளங்குமரன்) யாழ்ப்பாணம், எம்.ஜெகதீஸ்வரன் (குட்டிக்கண்ணன்) யாழ்ப்பாணம் ஆகியோரே கொல்லப்பட்டோராவர். ●

## கற்பிட்டியில் தேடுதல்!

கற்பிட்டி பகுதியில் கடந்த 2.07.2000 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை இராணுவத்தினரும் பொலிஸாரும் நடத்திய பாரிய தேடுதலின் போது மூவினத்தையும் சேர்ந்த சுமார் 500 பேர் அளவில் தடுத்து வைக்கப் பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

இதனால் காலையில் வீதியில் இடம் பெற்ற விசாரணைகளினால் போக்குவரத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.

இத் தேடுதலின் போது சந்தேகத்திற்கிடமானோர் எனக் கருதப்படுவோர் கைது செய்யப்பட்டு கற்பிட்டி நகர்ப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் துறையடி, முகத்துவாரம் பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அங்கு தொழில் புரிபவர்களும் ஆவர்.

இவ்வாறு ஆண்கள், பெண்கள் என சுமார் 500க்கு மேற்பட்டோர் தடுத்து வைக்கப் பட்டு தீவிர விசாரணைகளின் பின்னர் சுமார் 300 பேர் மாலை அளவில் விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்கள் மறுநாள் வரை கற்பிட்டி பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களில் 50 பேர் மாலையளவில் விடுவிக்கப்பட்டனர். மிகுதி 150 பேரும் மேலதிக விசாரணைகளுக்காக, சிலாபம், நீர்கொழும்பு, மாதம்பை, மாரவில, புத்தளம், ஆனமடுவ, குருநாகல், வனாத்துவில்லு போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு தடுத்து வைக்கப் பட்டனர். இவர்களிலும் பெரும்பாலானோர் தமிழர்களாவர். ■

## விளாங்காய் வெள்ளைக்கறியும் கருவேப்பிலைச் சுண்டலும்

## கதிர்காம யாத்திரீகருக்குப் புதிய அனுபவம்

(காரைதீவு நிருபர்)

விளாங்காய் வெள்ளைக்றியும், கருவேப்பிலைச் சுண்டலும் உண்ண வேண்டிய நிலைமை இம்முறை கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு கிடைத்தது.

உகந்தைவழியாக கிழக்கிலிருந்து கால் நடையில் சென்ற கதிர்காம யாத்திரீகர்களுக்கே இப் புது அனுபவம் ஏற்பட்டது. யால இராணுவமுகாமில் கதிர்காம பாதயாத்திரீகர்களை தடுத்து வைத்த வேளையில் இவ்வுணவு பரிமாறப்பட்டதாம். யாத்திரீகர் ஒருவர் மேலும் இதுபற்றிச் சொன்னதாவது:

"நாம் கதிர்காமத்திற்குச் செல்வதற்காக உகந்தை வழியாக கால்நடையாகச் சென்றோம். ஆறுநாட்கள் பயணத்திற்கான உணவுப் பொருட்களையே கொண்டு சென்றோம். ஐந்தாம் நாள் முடிவில் இன்னும் கதிர்காமத்திற்கு 16 மைல் இருக்கும் என்ற வேளையில் யால இராணுவமுகாமைச் சென்றடைந்தோம்.

அங்கு எம்மை மேற்கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. பிரிகேடியரின் அனுமதிகிடைத்தும், 300 பேர் சேர்ந்ததும் அனுமதிப்போம் என்று முகாம் பொறுப்பதிகாரி கூறினார்.

நாம் கொண்டு சென்ற உணவும் தீர்ந்து விட்டது. சிலரை நான்கு நாட்கள் தடுத்து வைத்திருந்தனர். எம்மை இரண்டு நாள் தடுத்துவைத்திருந்தனர். எமக்கு உரிய உணவு இல்லை. விளாங்காய் வெள்ளைக் கறியும், கருவேப்பிலைச் சுண்டலும் தந்தார்கள்.

தெய்வத்தைத் தரிசிக்கச் சென்ற எமக்கு இப்படியொரு தடங்கலை ஏற்படுத்தியிருக்கக்கூடாது. இனிமேல் காட்டினூடாக நடந்து வரவேண்டாமென்று கூறும் மறைமுக அறிவித்தலோ என்று எண்ண வேண்டியுள்ளது."

வரலாற்றில் இம்முறைதான் அந்த முகாம் இராணுவத்தினர் இவ்வாறுநடந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. ■

## கஞுவாஞ்சிக்குடியில் 2 பொலிஸார் பலி!

மட்டக்களப்பு-களுவாஞ்சிக்குடி பொதுச் சந்தையின் பின்புறமாக காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது புலிகள் மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இச்சம்பவத்தில் பொலிஸார் இருவர் அந்த இடத்திலேயே பலியானார்கள்.

10ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. இதில் பொதுமகன் ஒருவரும் கடும் காயங்களுக்கு உள்ளானார்.

பட்டிருப்புப் பாலத்தின் முன்புறமாக மறைந்து இருந்தே புலிகள் தாக்குதல் நடத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

களுவாஞ்சிக்குடி சந்தைப் பகுதியில் முன்னரும் பலமுறை இவ்வாறான தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. மக்கள் கூடுமிடங்களில் நடக்கும் இத்தகைய சம்பவங்களின் விளைவாக பொதுமக்களுக்கு பலத்த கெடுபிடிகள் ஏற்படுகின்றன. ■

## தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய

## ஒருநாள் போராட்டம் வெற்றி

தொழிற் சங்கமொன்று முதன் முறையாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை முதன்மைப்படுத்தி வடக்கு-கிழக்குப் பகுதியெங்கும் வேலை நிறுத்தப் போராட்டமொன்றை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆறு அம்சக் கோரிக்கைகளை அரசின் முன் வைத்து கடந்த ஜூலை முதல் வாரத்தில் ஒரு நாள் சுகவீன லீவுப் போராட்டத்தை நடாத்தியது.

"சமாதானத்திற்கான யுத்தம் அல்லது பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் எனும் அரசின் பிரகடனத்தை வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

போரை நிறுத்தி நோர்வே மற்றும் இந்திய அரசுகளின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளோடு பேசி புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்."

மேற்படி கோரிக்கை உட்பட ஆறு அம்சங்களை முன்வைத்து தமிழர் ஆசிரியர் சங்கம் ஒருநாள் போராட்டத்தை நடாத்தியுள்ளது.

இதற்கு அரசு செவிசாய்க்காவிட்டால் ஜூலை 21ஆம் திகதி தொடக்கம் தொடர்ச்சியான வேலைநிறுத்தம் இடம் பெறும் என்றும் அச்சங்கம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சுகவீன லீவுப் போராட்டத்தினால் சுமார் 1350 தமிழ் பாடசாலைகளும் 300 முஸ்லிம் பாடசாலைகளும் மூடிக் கிடந்தன. ஐந்தரை இலட்சம் மாணவர்களும் இருபதாயிரம் ஆசிரியர்களும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பள்ளிக்கூடங்களுக்கு வரவில்லை.

இதனிடையே மேற்படி நடந்த போராட்டத்தில் இலங்கைச் சுயாதீன ஆசிரியர் சங்கம், வடக்கு-கிழக்கு மாகாண பொது ஆசிரியர் சங்கம், திருக்கோணமலை மாவட்டப் பட்டதாரிகள் சங்கம் என்பன பங்கு பற்றவில்லை என வ.கி.பொ.ஆ.ச. நிருவாகச் செயலாளர் ஆர்.ஜெறோம் தெரிவித்துள்ளார்.

"ஆசிரியர்களின் பல முக்கியமான பிரச்சினைகள் ஆறு அம்சக் கோரிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை. இப்போராட்டம் பற்றி உரிய காலத்திற்குமுன் எமக்கு அறிவிக்கவும் இல்லை. இது மாணவர்களின் பரீட்சைக் காலமாக இருப்பதால் அவர்களது கல்வி நடவடிக்கைகளை இது பாதிக்கும். இதே கோரிக்கைகளை முன்வைத்து நாம் போராட்டம் நடத்தியபோது அவர்கள் எமக்கு ஆதரவு தரவில்லை. அதை ஏற்றுக் கொள்ளவுமில்லை. ஆகையினாலேயே இவர்களது போராட்டத்தில் நாம் கலந்துகொள்வில்லை." என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

எது எவ்வாறாயினும் உள் முரண்பாடுகளையும் தனிப்பட்ட பேதங்களையும் மறந்து ஒட்டுமொத்தமாக மக்கள் செத்துமடியும் யுத்தத்திற்கெதிராக ஒருமித்த குரலை எழுப்புவது நல்லதென்று பொது மக்கள் தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான போராட்டத்திற்கு பல தரப்பிலும் பேராதரவு இருக்கும் என்று கருதப்படுகிறது. ●

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகள்

மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னி நிலப்பரப்பில் போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு 1999ல் மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய விபரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

9,336 பேரடங்கிய 1905 குடும்பங்களுக்கு வீடமைப்பு உபகரண உதவிகளும் 5,586 குடும்பங்களைச் சேர்ந்த 26,772 பேருக்கு உணவல்லாத வேறு அவசியப் பொருட்களும் வழங்கியுள்ள ஐ.சி.ஆர்.சியினர் 12 மீள் குடியிருப்புப் பிரதேசங்களுக்கு ஒவ்வொரு குடும்பத்தினருக்கு மண்வெட்டி கோடரி, அலவாங்கு, சாந்தகப்பை, செங்கல் அச்சு, கப்பி, வாளி, கத்தி, 12 மீற்றர் நைலோன் அடங்கிய பொருட்களையும் விதை பொருட்களும் வழங்கியுள்ளனர்.

ஐந்து குழாய்க்கிணறுகள் அமைக்கப் பட்டும் 49 குழாய்க் கிணறுகள் திருத்தப்பட்டும் ஏழு சாதாரண கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் 2137 குடும்பங்கள் நன்மையடைந்துள்ளன.

மருத்துவ உதவிகளைப் பொறுத்த மட்டில் இடம்பெயர் மருத்துவ அணியினரால் மூன்று லட்சம் மக்கள் நன்மையடைந்துள்ளனர். 3860 வீடுகளுக்கு அணித் தொண்டர்கள் விஜயம் செய்து உதவியிருக்கிறார்கள்.

குடும்பத்தலைவனை இழந்த அல்லது அங்கவீனமுற்ற நிலையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த பதினாறு வயதுக்குட்பட்ட 8039 சிறுவர்களுக்கு உடைகள் வழங்கியதாகவும் இவ்வுடைகள் போர்ச் சூழலினால் விதவையான அல்லது அங்கவீனமான பெண்களைக்கொண்ட நிலையங்களில் தைக்கப்பட்டன என்றும் தனது விபர அறிக்கையில் ஐ.சி.ஆர்.சி. தெரிவு படுத்தியுள்ளது. ■

## வெலிஓயா மோதலில் மட்டக்களப்பு புலிகள் பலி!

## மேஜர்,கப்டன்,லெப்டினனட் தர பெண்கள் 10 பேர்!

திருக்கோணமலை-வெலி ஓயாவில் கடந்த 30ம் திகதி இடம் பெற்ற தாக்குதலில் தமது தரப்பில் பலியான 16 புலி இயக்க உறுப்பினர்களின் விவரங்கள் வெளியிடப் பட்டுள்ளன. பலியான புலிகள் அனைவரும் மட்டக் களப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களில் 10 பேர் மேஜர் கப்டன், லெப்டினனட் தரத்திலுள்ள பெண்களாகும்.

மேஜர் பி.சகுந்தலா(தர்ஷினி), மேஜர் எஸ்.பௌன்ஸ்ரவதி(தமிழ்ச்செல்வி), கப்டன் எஸ்.இன்பமலர்(பரிமளா), லெப்டினனட் கே. சுஜாத்தா (வருணப் பிரியா) லெப்டினனட் கே.தியாகராணி (சந்திரா) லெப்டினனட் ச.தர்ஷினி(நகுலேஸ்), லெப்டினனட் கே.சுஜாதா(இலக்கியா) 2ம் லெப்டினனட்களான ஏ.சாரதாதேவி(சிந்துஜா) கே.குகனேஸ்வரி (மிருணாளினி) ஆகிய பெண் புலிப் போராளிகள் 10 பேரும்;

ஆண் புலிப் போராளிகளான கப்டன் வி.செந்தூரராஜா(ரமணீதரன்) லெப்டினனட்களான பி.சித்திரவேல்(மதுரகன்) பி.கந்தப் போடி(உதயதாரன்) 2ம் லெப்டினனட்களான தே.சண்டேஸ்வரன் (உயிர்மணி) ரீ.அருமைநாயகம் (சீராளசிங்கம்) முல்லைத்தீவைச் சேர்ந்த என் புவனராசா (சுபோ) ஆகியோரும் கொல்லப்பட்ட விவரங்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.

புலிகள் அமைத்துள்ள முன்னரங்க நிலைகளுக்குள் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது இடம் பெற்றமோதலிலேயே மேற்படி இழப்புகள் ஏற்பட்டுள்ளன. ■

## பிரதேச செயலகங்களில் ஆலோசனைக்குழுக்கள்!

அந்தந்தப் பிரதேச மக்களின் சுமுகமான வாழ்வுக்காக ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலும் பொது மக்கள் ஆலோசனைச் சபைகளை அமைக்குமாறு உள்நாட்டு அலுவல்கள் பொது நிருவாக அமைச்சு பணித்துள்ளது.

அந்தப் பிரதேசத்தில் வதியும் சமூக நல அக்கறை கொண்ட 30 பேர் சகல சமூகங்கலிருந்தும் தெரிவு செய்யப்படுவார்கள்.

இந்த ஆலோசனைக்குழு அப்பிரதேச மக்களின் பாதுகாப்பைப் பேணுதல், பொது மக்களின் சொத்துக்களைப் பாதுகாத்தல், பொய்யான கட்டுக்கதைகளைப் பரப்புவதன் மூலம் பொதுமக்களுக்குரிய அனுமதியின்மை தடுத்தல், பொதுவான ஒழுங்கைப் பேணுதல், அத்தியாவசிய வழங்கல்களையும், சேவைகளையும் பேணுவதோடு மக்களின் சுமுகமான வாழ்வுக்காப் பாடுபடுதல் வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. ■

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

* காய்ச்சல்
* தலைவலி
* தலைச்சுற்று
* தலைப்பாரம்
* ஜலதோஷம்
* இருமல்
* மூக்கடைப்பு
* பல்வலி
* காதுவலி
* வயிற்றுவலி
* வாதத்தால் வரும் வலிகள்
* உணர்ச்சியற்ற பாகங்கள்
* சுளுக்கு
* தசை வலிகள்
* பூச்சிக் கடிகள்
* பிரயாணக் களைப்பு
* மதுவால் ஏற்படும் பிரச்சினை



கோடாலித்தைலம்

Rs. 20/= Only (3. ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD.**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.. Tel : 888214 Fax : 682984.

## மாணிக்கவாசகர் சிறுவர் பராமரிப்பு இல்லம்

MANIKKAVASAGAR BOYS HOME, SANTHIVELI, MUROKKOTTANCHENAI, E.P., SRI LANKA. Regd No KP/DS/SS/03



யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களைப் பராமரிப்பதற்காக நிதியுதவி கோரல்

எம் அருமை தமிழ்ச் சகோதரர்களே! கருணை உள்ளங்களே! இவ் இல்லம் கிழக்கு மாகாணத்தில், யுத்தக் கெடுபிடியிலகப்பட்டு பெற்றோரை இழந்து நிர்க்கதியான அனாதைச் சிறுவர்களைப் புகலிடம் கொடுத்து அரவணைத்து பேணிக்காத்து வருகின்றது. நாளுக்குநாள் அதிகரித்துவரும் இவர்களது உணவு, உடை, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகட்கான செலவுகளை ஈடுசெய்வதில் பெரும் தளம்பல் நிலை ஏற்படுகிறது. எனவே இக்குழந்தைகளின வளர்ச்சிக்கும் அவர்களது எதிர்கால மேம்பாட்டிற்கும் தயாள சிந்தை கொண்டவர்கள து உதவியை வேண்டுகிறோம்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற அன்பர்கள், கனவான்கள், அறவாளர்கள் இக்குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தங்களால் இயன்ற நிதியுதவிகளை கீழேயுள்ள எமது நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பி, எமது பணி தளப்பமில்லாது தொடர்வதற்கு உதவுமாறு மிக பணிவுடன் வேண்டுகிறோம்.

இங்குள்ள பிள்ளைகளின் ஒருநாள் உணவுக்கான செலவு ரூ.600 ஆகும். இறந்தோரின் நினைவாக சிராத்த தினத்தன்றோ அல்லது உங்கள் அன்புக் குழந்தைகளின் பிறந்த நாட்களிலோ ஒருநாள் உணவை வழங்கலாம்.

இக் குழந்தைகளின் மனநிறைவில் உங்கள் வாழ்வு சிறக்கும். உதவிபுரிய விரும்பி நீங்கள் அனுப்பி வைக்கும் பணத்துக்கு நன்றியுடன் பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

நன்றியுடன்
திரு.க. நாகலிங்கம் J.P. (இல்லத் தலைவர்)

MANIKKAVASAGAR BOYS HOME
AC.NO. 1955
PEOPLES BANK, CHENKALADI.

## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் ஜூலை 23 முதல் 28 திகதி வரை**

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் ஆகஸ்ட் 05. 06ம் திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஜூலை 15, 16 திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.**

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக தெய்வீக சேவை
NTSF-CHARITY REG. NO.HA04BT219

கிரகப்பகை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம் காதல், கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித்தடை, கணவன்-மனைவி குடும்பவாழ்க்கையில் சந்தோஷமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்லமுடியாத வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை, மருந்தீடு, போன்ற தீமைகள் ஏற்படுகின்றது. இது போன்ற வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் காண்டம் கூறும் சோதிடத்தினால் பிரச்சனைக்குரிய காரணத்தைக் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம்.

ஆயுர்வேத மருத்துவர் "பாலு சோதிடர் (SAMP)" காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை. நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால், அல்லது பக்ஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, கடல் கடந்து உடன் பயன்தரும் தெய்வீக மருந்துப்பொருட்களை தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

தெய்வீகம் ஸ்ரீ லங்கா
கல்லடி அரசவிடுதி வீதி,
மட்டக்களப்பு.

வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு: T.PHONE/FAX: 0094 65 24825

THEIVEEGAM SRI LANKA
HEAD OFFICE
BATTICALOA-SRI LANKA
T.PHONE/FAX: 065-24825

வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS INLIFE AND LET LIGHT SHINE"

# STUDY IN LONDON
# STUDENT VISA

ஜூலை, செப்டம்பர், ஒக்டோபர்,
கற்கை நெறிகள்.

Bachelor of Business Administration (BBA), Master of Business Administration (MBA), Hotel Management, BSC Computer Science, Advanced Diploma In Business Studies Engineering Etc.

*Recognised us efficient by the Britisi AccreditationCouncil (BAC)*

மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**MS Lanka
Recruitment & Travels.**

385 2/3, (2nd Floor)
Galle Road,Wellawatta,
Colombo 06. (Near Hotel Sappire)
Tel: 074- 517836, 077- 374314

S.K. Ads col 06.



## மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரிக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTDஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரவம் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்டருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகளாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரீகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ, தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571,466620.466820 431137, 470615, 342463, 344831, இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Prof.Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.

## பிறந்தநாள் வாழ்த்து



செல்வி. திவ்யா / 05.07.2000

தண்ணீரூற்றைச் சேர்ந்த திரு.திருமதி.சிவநாதன்-இந்திரநாயகி தம்பதியரின் செல்வப்புதல்வி செல்வி.திவ்யா தனது முதலாவது பிறந்த தினத்தை வவுனியா நெளுக்குளத்தில் தனது இல்லத்தில் விமர்சையாகக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அம்மப்பா, அத்தை, மாமாமார், சித்திமார், அண்ணன், மச்சாள், பெரியம்மா, பெரியப்பா, அண்ணன்மார், அக்கா மற்றும் உற்றார் உறவினர் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல் : சசி மாமா, "தேனுகா" தொலைத்தொடர்பு, நெளுக்குளம்.*

## COMPUTER CLASSES

வத்தளைச் சந்தியில் தமிழ் விளக்கத்துடனான Computer வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. Microsoft Office 2000. Page Maker 6.5, Corel DRAW 9.0, Internet & E-mail, Hardware. Children Course, English & Tamil தட்டெழுத்து வகுப்புக்கள் மற்றும் Colour& Black and White Typesetting செய்து கொடுக்கப்படும். Software Developments. Computer Assembling & Sales. Trouble Shooting & Services. அத்துடன் Spoken English Classes நடாத்தப்படுகின்றன.

**D.S. COMPUTER STUDIES**

Internet & E-mail dsocm@mail.visual. com
No.6A, Hekitta Road, Wattala. 075-349247.

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

## "வெகு விரைவில் ரூபவாஹினியில் அரலிய தரும் அரங்கேற்றவேளை"

நம் நாட்டில் இலைமறை காயாக உள்ள கலைஞர்களுக்கு அரிய சந்தர்ப்பம், இசையோட பாடலை பாடி முதலாவது இடத்தைப் பெறும் அதிஷ்டசாலி வருட இறுதியில் நடைபெறும் மாபெறும் போட்டியில், சிறந்த பாடகராகவும் இந்திய இசைக்கலைஞர்களுடன் பாடுகின்ற சந்தர்ப்பத்தை வழங்கவுள்ளார்கள். பார்த்து ரசிப்போர், பங்குபற்றுவோர் தரத்தேர்வுக்கு உடனடியாக விண்ணப்பிக்கவும்.

வாரந்தோறும் ரூபவாஹினி தொலைக்காட்சியை பாரத்து ரசிக்கும் உங்களுக்கு பெறுமதியான பரிசுகளை வழங்க காத்திருக்கிறார்கள்.

அத்துடன் நான்கு அரலிய டின்மீன் லேபல்களை அனுப்பி மாதந்தோறும் பரிசுகளை வெல்லுங்கள். அனுப்பவேண்டிய முகவரி

*அரலியவின் தொலைக்காட்சி நிகழ்ச்சி,
அரலிய இம்பெக்ஸ் (PVT),
இல.69, பழைய சோனகத்தெரு,
கொழும்பு -12.*

நிகழ்ச்சியைஅறிவிப்பாளர் திரு B.H அப்துல் ஹமீட் வழங்கவுள்ளார்.

நிகழ்ச்சித் தொகுப்பு ஸ்வாதிஸ் அட்வடைஸிங் நிறுவனத்தார்

## கவலை வேண்டாம்

உங்கள் சங்கடம் எதுவாயினும் உடன் வெற்றி காண்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்; தொழில் விருத்தி; பாலியல் குறைபாடுகள்; திருமண-பிரயாணத்தடங்கல்; முதலானவற்றை விசேடமாய் தீர்வுகாணும்; மட்டுநகர்-மலையாள மணிமாந்திரீகச் சித்தர் "கலாநிதி-சக்தி சரவணா" உங்களை நிச்சயம் வெற்றி பெற வைப்பார். மற்றும், எண்சோதிடம், நினைத்தகாரியம், ஜாதகபலன் முதலான சோதிட அருள் வாக்கும் பெற்று பூரண பலன் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரித சேவை உண்டு. (வியாழன் விடுமுறை) நேரில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

தொடர்பு: **"DR.SHAKTHY SARAVANA"**

வியாழன் விடுமுறை.

48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA. T.P 723646

தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :
MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.
தொலைபேசி-0142552036

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளின் நிராகரிப்பினால் கேள்விக்குறியாகும் அரசியல் தீர்வு!

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு தற்போது உச்சக் கட்டத்தை அடைந்துள்ள அரசியல் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள், எவ்வளவு தூரம் பயனளிக்கப் போகின்றன என்ற பாரிய கேள்வி அப் பேச்சுவார்த்தையின் இறுதி முடிவுகள் வெளியாகு முன்னரே தோன்றி விட்டது.

ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வரசியற் தீர்வை நிராகரித்து விட்டார்கள். அவர்கள் இத் தீர்வுத்திட்டத்தின் இறுதி முடிவுகள் வெளிவருமுன்பே இத் தீர்வை நிராகரித்து விட்டனர். அவ்வாறு நிராகரித்தது ஏன் என்று ஆராய்பவர்களுக்கு அதிலுள்ள இராஜதந்திரம் புலப்படலாம்.

அதாவது இத் தீர்வுத் திட்டம் இனப்பிரச்சனைக்கு முடிவுகட்டி சமாதானத்தை உருவாக்குவதற்கான முயற்சியாகக் காட்டப்பட்டாலும் மறுபுறத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு மிகப்பெரிய சவாலாக மாறிவிட்ட விடுதலைப் புலிகளை வெற்றிகொள்வதற்கான இராஜதந்திர வியூகமாகவும் இது அமைந்துள்ளது. இதைத் தெளிவாகக் கண்டுகொண்ட விடுதலைப் புலிகள், இவ் வியூகம் தங்களைப் பொறிக்குள் மாட்டுவதற்கு முன்னரே உடைத்தெறியப் படவேண்டும் என்பதை உணர்ந்தனர். அதன் விளைவு தான் இந்த முற்கூட்டிய அறிவிப்பு.

இவ்வாறு புலிகள் இதை முற்கூட்டியே நிராகரித்துள்ளதானது, இந்த இராஜதந்திர யுத்தத்தில் சில சாதகங்களைப் புலிகள் தரப்புக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தத் தீர்வுத் திட்டமானது புலிகளுக்கெதிரான பலமானதொரு அரசியல் ஆயுதமாக எவ்வாறு வடிவமைகிறது என்பதைப் புரிந்து கொள்வது இவ் விடயத்தை ஆராய்பவர்களுக்கு அவசியம்.

புலிகள் யுத்தத்தால் எதிர்கொள்வதற்கான எண்ணங்கள் அண்மைக்காலப் புலிகளின் வெற்றிகளோடு ஆட்டம் கண்டுபோயின.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்பத்தில் பேச்சுவார்த்தை தொடர்பாக எடுத்த முயற்சிகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து. அதி முனைப்புடன் முன்னெடுக்கப்பட்ட யுத்த முன்னெடுப்புகள் ஈட்டிக் கொடுத்த ஆரம்ப வெற்றிகள் அரசாங்கத்தரப்பை மேலும் மேலும் யுத்தத்தால் புலிகளைத்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடலாமென்ற எண்ணத்துக்குள்ளாகச் செய்தது.

அதில் பிரதானமாக யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதானது அரசாங்கத்துக்குப் பாரிய அரசியல், இராணுவ வெற்றியாகக் கொள்ளப்பட்டது. எனினும் அப்போது இத் தோல்வி இராணுவரீதியான தோல்வியானாலும் அரசியல் ரீதியான வெற்றியேயெனப் புலிகள் தரப்பால் கூறப்பட்டது. அதாவது அரச படைகள் யாழ்குடா நாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும் குடா நாட்டு மக்களைப் புலிகள் தம்மோடு அழைத்துச் சென்றுவிட்டனர். அதனால் 'மக்கள் எம் பக்கம்', என்று புலிகளால் கூறிக் கொள்ள முடிந்தது.

ஆயினும் நாளடைவில் ஒரு பகுதி மக்கள் குடா நாட்டுக்குத் திரும்பி வருவதை புலிகளால் தடுக்க முடியவில்லை.

இந்த இராணுவ நடவடிக்கையானது அரசாங்கத் தரப்பிற்கு பெரும் சாதகங்களை ஈட்டிக் கொடுத்திருந்தது. இராணுவ ரீதியாக, மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் பெரும் சாதகங்களை ஈட்டிக் கொடுத்தது.

யாழ்ப்பாணம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த காலத்தில் புலிகள் அதனை ஒரு பிரகடனப் படுத்தப்படாத தனி நாடு என்ற அளவுக்கு இட்டுச் சென்றுகொண்டிருந்தனர்.

அங்கு அவர்கள் ஒரு நிழல் அமைச்சரவையையே நடத்தி வந்தனர். சட்டம் ஒழுங்கு முதல் சகல நிர்வாகங்களையும் தமது கரத்தில் வைத்திருந்தனர். விநியோகத்திற்கும், அரச திணைக்களச் செயற்பாடுகளுக்கும் சம்பளத்திற்கும் அரசாங்கத்திடம் மக்கள் தங்கியிருக்க நேர்ந்தாலும் அவற்றைக் கூட புலிகளின் அனுமதியுடனேயே நடத்தக் கூடியதாக இருந்தது.

இதேவேளையில் யாழ் குடாநாட்டில் தமது இராணுவ பலத்தை மேலும் வலுப்படுத்தி அங்கிருந்த அரச படைகளைத் தமது முற்றுகைக்குள்ளாக்கிச் சரணடைய வைக்கும் நிலையை நோக்கி நகர்ந்த வண்ணம் இருந்தனர். அவ்வாறான முயற்சியை ஏற்கனவே ஒருதடவை ஆனையிறவு இராணுவ முகாம் மீது மேற்கொண்டும் இருந்தனர்.

இதனால் அரசாங்கம் மிகுந்த இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. எனவேதான், இதிலிருந்து விடுபடவேண்டிய ஒரு பாரிய இராணுவ நடவடிக்கையாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதேவேளை தோல்வியுற்ற பேச்சுவார்த்தையின் பின் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தக் கூடிய ஏதாவதொரு நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்ற நிர்ப்பந்தமும் இருந்தது.

எனவேதான் சேதாரங்களையும், பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களையும் கூடப் பொருட்படுத்தாமல் யாழ் குடா நாட்டைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியது.

ஆனாலும் அத்தகைய, பாரிய இராணுவ நடவடிக்கையை எதிர்த்து அதிகம் போரிடாமல், மக்களுக்கும், தமது போராளிகளுக்கும், ஆயுதங்களுக்கும் சேதம் ஏற்படாவண்ணம் புலிகள் தந்திரோபாயப் பின்வாங்கலை மேற்கொண்டு வன்னிக்குப் புலம் பெயர்ந்தனர்.

இத்தகைய புலம் பெயர்வு புலிகளின் இராணுவ மையத்தை மாற்றியமைத்திருந்ததேயன்றி இராணுவ வல்லமையைச் சிறிதும் பாதிக்கவில்லையென்பதை அரசாங்கத்தால் உணர முடியவில்லை.

அதைவிட, இவ் வெற்றியை அரசியல் ரீதியான பெரும் பிரச்சார லாபத்துக்குப் பயன்படுத்தவே அரசாங்கமும் முயன்றது. அதனால் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் யாழ்பாணத்தைக் கைப்பற்றிய செய்தியை பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையிடமிருந்து பேழைச்சுருள் வடிவில் ஜனாதிபதி பெற்றுக்கொள்ளும் வைபவமொன்றை மிகுந்த பிரபல்யம் கொடுத்து நடத்தினர். அது பண்டைய கால அரசர்கள் நாடுகளைக் கைப்பற்றிய வெற்றிச் செய்தியைத் தம் படைத் தளபதிகளிடமிருந்து அரசர் கையேற்கின்ற வைபவம்போல் அமைந்திருந்தது. இவ் வெற்றிப் புழகாங்கிதத்தின் உற்சாகத்துடன் அடுத்ததொரு பாரிய படை நகர்வை மேற்கொள்ளத் திட்டமிட்டனர் அரசதரப்பினர்.

அதுதான் "யாழ்ப்பாணத்துக்கான பாதை திறப்பு" என்ற கோஷத்துடன் மேற்கொள்ளப் பட்ட படை நகர்வு!

யாழ்ப்பாணத்தை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், அதற்கான தரைவழி விநியோகப் பாதை இல்லாதது பாரிய குறைபாடாக இருந்தது.

அத்தகைய ஒரு விநியோகப் பாதையைத் திறந்து விட்டால் அது புலிகளை மேலும் பெருமளவுக்கு ஓரம்கட்டிவிடுமென அரசாங்கம் எண்ணியது. அதனால் 'பாதை திறப்பை' தனது அடுத்த பாரிய இராணுவ நடவடிக்கையாக அரசாங்கம் முன்னெடுத்தது.

ஆனால் அது எத்தகைய முட்டாள்தனம் என்பது சிறிது காலத்திலேயே புலப்படலாயிற்று.

அரச படைகள் நினைத்த வேகத்தில் இப்பாதை திறப்பு படைநகர்வை மேற்கொள்ள முடியவில்லை. இடை நடுவே தரித்து நிற்க வேண்டியதாயிற்று. அத்தோடு அத் தொடர் சண்டையிலிருந்து மீள முடியாத பொறிக்குள் சிக்க வேண்டியதாயிற்று. பெருமளவு இராணுவ பலத்தை அதற்கெனவே முடக்க வேண்டியவர்களாயினர்.

யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் பின்வாங்கியமையை புலிகளின் இராணுவ வலுவிலேற்பட்ட வீழ்ச்சியாகத் தப்புக்கணக்குப் போட்டுக்கொண்டதன் விளைவை அடுத்தடுத்த நிகழ்வுகள் காட்டின.

வன்னியில் நிலைகொண்ட புலிகள் தம்மைச் சூழவிருந்த முகாம்களைத் தாக்கியழித்து அப் பிரதேசத்தைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார்கள்.

அதேவேளை இராணுவத்தின் பாதை திறப்புப் படைநகர்வை இடைமறித்து நகர முடியாது செய்ததுடன் இடைக்கிடை அப் படையணியின் பலஹீனமான முனைகளில் திடீர்த் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணம் இருந்தனர். தம்மைப் போதியளவு தயார்ப்படுத்திக் கொண்டு பின்னர் படையினரின் பாதை திறப்புக்கான நெடுங்கால நகர்வுகளை ஒரேயடியாகத் தாக்கிப் பின்வாங்க வைத்தனர்.

இவ்வேளையில் மீண்டும் இராணுவ சமபலம் மாறிச் செல்வதை யாவரும் உணர முடிந்தது. அப்போதும் அரசாங்கம், யுத்த முனைப்பினால் நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டிருந்த அரசியல் தீர்வு முயற்சிகளில் அக்கறை செலுத்த விளையவில்லை.



புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிந்ததன் பின் 1995ல் ஜனாதிபதி வெளியிட்ட ஒரு தீர்வுத்திட்ட ஆலோசனைகூட மேல்முகமாகச் செழுமைப்படுத்தப்பட்டுச் சொல்லப்படாமல் கீழ் முகமாக மலினப்படுத்தப் பட்டவாறே சொல்லப்பட்டது.

95ல் வைக்கப்பட்ட தீர்வு ஆலோசனையையே விடுதலைப்புலிகள் நிராகரித்திருந்தனர். அதனால் அதனை மலினப்படுத்திய மற்றொரு தீர்வானது புலிகளைத் திருப்தி செய்யக்கூடிய தீர்வாக ஒருபோதும் அமையப் போவதில்லையென்பது வெளிப்படை. அவ்வாறானால் அது இரண்டு நம்பிக்கைகளின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப் பட முடியும். ஒன்று, புலிகளை இராணுவ ரீதியில் அடிபணியவைத்து இந்தத் தீர்வுத் திட்டத்தை அங்கரிக்க வைக்கலாமென அரசாங்கம் நம்பியிருக்க வேண்டும். அல்லது இரண்டாவதாக, புலிகளைப் புறந்தள்ளி இவ்வரசியல் தீர்வுத் திட்டத்தினை அமுலாக்கலாமென அரசாங்கம் தீர்மானித்திருக்க வேண்டும்.

இல்லையேல் புலிகளால் நிராகரிக்கப்பட்ட ஒன்றை மேலும் மலினப்படுத்துவதில் ஈடுபடுவதில் அர்த்தமில்லை. எனினும், அரசாங்கம 1997ல் முன்னையதிலிருந்து மலினப்படுத்திய மற்றொரு தீர்வு ஆலோசனையை முன்வைத்து அதைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதாகக் கூறியது. ஆனால் பாராளுமன்றத்துக்கும் அதை முன்வைக்கவில்லை.

ஐ.தே.க.வினர் அதையும் எதிர்த்தமைதான் காரணமெனக் கூறப்பட்டது. ஐ.தே.க.வினரைத் திருப்திபடுத்தவே இம்மலினப்படுத்தலை மேற்கொண்டதாகக் கூறிய போதிலும் ஈற்றில் அதற்குக்கூட ஐ.தே.க. வின் ஆதரவை அரசாங்கத்தால் பெற முடிய வில்லை.

இத்தகைய நிலையில் ஜனாதிபதி தேர்தலையடுத்தே இவ்வரசியல் தீர்வு பற்றி மீண்டும் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது.

நீண்ட காலமாகக் கிடப்பிலிருந்து, ஆக்கபூர்வமான எந்த முன்னேற்றங்களையும் ஈட்டாது, அதற்கு முயற்சிக்காது, கைவிடப்பட்ட தோற்றப்பாட்டிலிருந்து அரசியல் தீர்வுக்கு இப்போதுதான் மீண்டும் புத்துயிர் ஏற்பட்டது.

நோர்வே நாடு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்திருந்தமையே இதற்குப் பிரதான தூண்டுகோலாக அமைந்திருந்தது. அதன் மூலம் சர்வதேச சமூகம் இப்பிரச்சனையில் அக்கறை செலுத்தும் நிலமை தோன்றியிருந்தது.

இருந்தும் நோர்வேயின் மத்தியஸ்தத்திற்கு அவசியப்படும் பிரதான இருதரப்புகளான அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவில்லை. பதிலாக எதிர்க்கட்சிக்கும் அரசாங்கத்துக்கும், தமிழ்க் கட்சிகளுக்குமிடையிலான முக்கோணப் பேச்சுவார்த்தை முடக்கிவிடப்பட்டது. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கூடிய, பொருத்தமான எந்தத் தீர்வுத்திட்டமும் அரசாங்கத்தின் கைவசம் இல்லாமையும் இப்பேச்சுவார்த்தைகள் பின்தள்ளப்பட்டிருந்ததற்கு ஒரு காரணமாக இருந்தது மறுபுறத்தில் பேச்சுவார்த்தைக்கான நிபந்தனைகளாக புலிகள் முன்வைத்த யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை.

-நரன்-

இந்நிலையில்தான் சகல நிலவரங்களையும் மாற்றியமைத்த பாரிய தாக்குதலைப் புலிகள் மேற்கொண்டனர். அதனால் ஆனையிறவு இராணுவமுகாம் வீழ்த்தப்பட்டதுடன், யாழ் குடாநாட்டின் பல தென்மாராட்சிப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. அத்தோடு, யாழ் நகருக்குள்ளும் எல்லையோர ஊடுருவலை மேற்கொண்ட புலிகள் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கைப்பற்றும் முயற்சியில் குதித்தனர்.

இது இராணுவச் சமநிலையை மட்டுமன்றி பாரிய அரசியல் மாற்றங்களுக்கும் வழியமைத்தது.

சர்வதேச நாடுகள் இலங்கை விடயத்தில் தீவிர அக்கறை செலுத்தியதுடன், நடவடிக்கைகளிலும் இறங்க வழியமைத்தது. இந்தியாவை மீண்டும் அதிக ஈடுபாடு செலுத்த முன்வர வைத்தது. அமெரிக்காவின் மறைமுகத் தலையீடுக்கும் வழிகோலுவதாய் அமைந்தது.

இவற்றின் அழுத்தங்கள் காரணமாக அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தீர்வுத் திட்டம் தொடர்பாக இணக்கம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலைதான் புலிகள் இத்தீர்வுத்திட்டத்தைத் தற்போது முன்னதாகவே நிராகரித்துள்ளனர்.

ஒருவகையில் இந்தச் செயற்போக்குகள் யாவும் இராணுவ ரீதியான பின்னடைவுகளை அரசியல் ரீதியாகச் சரிக்கட்டிக்கொள்ள மேற்கொள்ளப்படும் தந்திரோபாய வலையாகப் புலிகள் உணர்ந்தனர்.

தீர்வுத்திட்டத்தில் எதிர்க்கட்சியுடன் இணக்கம் கண்டதையே பிரதான விடயமாக்கி தமிழ்த் தரப்பு அபிலாஷைகளைப் பற்றிய கவனத்தை திசைமாற்றி சர்வதேச சமூகத்திடம் அங்கீகாரம் பெற்றுவிட அரசாங்கம் முயல்வதாக எண்ணியே புலிகள் முந்திக் கொண்டனர்.

முன்னதாகவே இதை நிராகரித்ததானது, ஏன் புலிகள் நிராகரித்தார்கள் என்ற விடயத்தைப் பிரதான கேள்வியாக எழுப்பி அதன் மூலம் தமிழ்த் தரப்பு அபிலாஷைகள் பற்றி சர்வதேச சமூகத்தை கவனம் செலுத்த வைக்கக்கூடியவாறு இது அமையும். அத்தோடு இவ் இணக்கப்பாட்டையும் ஏற்படக் கூடிய அரசியல் தீர்வையும் முற்கூட்டியே நிராகரித்துவிட்டதானது இவ் விடயம் எங்கிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற புலிகளின் கரிசனையை வெளிப்படுத்துவதாயும் உள்ளது. அதாவது எதிர்க்கட்சி, தமிழ் முஸ்லிம் கட்சிகளுடன் இணங்கிய விடயத்தை புலிகளிடம் கொண்டுவருவதல்ல முறை, புலிகளுடன் இணங்கிய விடயத்திற்கு மற்றவர்களிடம் சம்மதம் பெறுவதே முறையென்பதை அது சொல்லாமல் சொல்லுவதாயுள்ளது.

புலிகள் தமிழீழத்தை தவிர வேறு தீர்வெதையும் முன்வைக்க முன்வராததால் இதை வெறுமனே நிராகரிக்கும் செயற்பாட்டை மட்டுமே செய்பவர்களாக உள்ளனர். மாற்றுத்திட்டமொன்றை அவர்கள் முன்வைக்கும் நிலையில் இல்லை.

இந்நிலையில் ஒரு பாரிய முட்டுக்கட்டை தோன்றியுள்ளது. அரசாங்கம் எதிர்க்கட்சியுடன் இணங்கிய தீர்வைச் சட்டமாக்கினால் புலிகளின் எதிர்ப்பின் மத்தியில் அதை அமுலாக்குவது எப்படியென்பதே கேள்வி. இதற்கு ஏனைய தமிழ்க்கட்சிகள் இணங்கினாலும் சிக்கல். இணங்காவிட்டாலும் சிக்கல். என்ற நிலைக்கு உள்ளாகித் திண்டாடுகிறார்கள்.

இணங்காவிட்டால், ஒரு புறம் தீர்வுக்குத் தடைக்கல்லாக இருந்த பழியை அரசாங்கம் சுமத்தும். அத்தோடு மீண்டும் இந்தளவாவது ஒரு தீர்வுத்திட்டம் சாத்தியமாகும் நிலை தோன்றுவது தொலைதூரத்துக்குத் தள்ளிப்போய்விடும். மறுபுறம் இணங்குகின்ற கட்சிகள் இந்நிர்வாகத்தைப் பொறுப்பேற்றால் இணங்காது நிற்பவை அரசியல் ரீதியில் பின்தங்கிப் போய்விடும் நிலை ஏற்படலாம்.

மறுபுறம் இணங்கினால், இந்நிர்வாகத்தை நடத்துவதில் ஒரு புறம் அரசாங்கத்துடனான சில்லெடுப்புகள் பலவற்றைச் சந்திக்கின்ற அதேவேளை மறுபுறம் புலிகளின் பலமான எதிர்ப்பை முகம் கொடுக்க வேண்டியிருக்கும். அதேவேளை புலிகளால் சுமத்தப்படும் 'துரோகிகள்' என்ற பட்டத்தைச் சுமக்க வேண்டியிருக்கும். இதேவேளை இத்தீர்வு ஆக்கபூர்வமான எதையும் சாதிக்காமல் இறுதியில் வடக்கு கிழக்கைத் துண்டாடுவதில் முடிந்தால் அந்தப் பழிக்கும் உரியவர்களாக நேரிடும்.

இவை இரண்டுக்கும் இடையில் மாட்டுப்பட்டுக் கொண்டுள்ள தமிழ்க்கட்சிகள், புலிகளின் நிராகரிப்பையிட்டு, 'எதிர்பார்த்த ஒன்றுதான்' என்ற கருத்தையே வெளியிட்டுள்ளன. அந்த நிராகரிப்போடு ஒட்டி நிற்பார்களா? இல்லை வெட்டிச் செல்வார்களா? என்பது இனித்தான் வெளிப்படும்.

அடுத்த மாதகாலம் இனப்பிரச்சனையில் பதட்டமான காலமாகக் கடக்கப்போகின்றது என்பது வெளிப்படை. ○

## செய்திச் சிதறல்

✪ இலங்கையில் பல தடவைகள் நிதியமைச்சராக இருந்து சிறப்பான பணி புரிந்த முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் திடீரென ஒரு பெரும் புயலைக் கிளப்பி விட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு டி மெல் தான் சார்ந்த கட்சியின் முடிவுக்கு மாறாக கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகால நிலை வாக்கெடுப்பின் போது ஆளுங்கட்சிக்கு வாக்களித்தார். ஐ.தே.கா.வின் ஏனைய உறுப்பினர்கள் இப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்த போது ஆளுங்கட்சியுடன் இணைந்து பிரேரணைக்கு ஆதரவாக திரு டி மெல் வாக்களித்தார். அதுமட்டுமல்லாமல் ஐக்கிய தேசியக் கட்சியின் நடைமுறைகள் பற்றி விமர்சிக்கவும் தலைப்பட்டார். கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு இதனால் ஒரு பெரும் சிக்கலே தோன்றியுள்ளது. திரு டி மெல் அவர்களுக்கு எதிராக கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர் தெரிவித்தார்.

✪ ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பல பிரமுகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் விரைவில் கட்சி மாறி ஆளுங்கட்சியில் இணைந்துவிடப் போவதாகவும் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. ஜனாதிபதி சந்திரிக்காவின் சகோதரரும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னணித் தலைவர்களின் ஒருவருமான அநுர பண்டாரநாயக்கா அவர்களும் தான் சார்ந்த கட்சித் தலைமைக்கு சினமூட்டும் வகையில் அவர் கலந்து கொண்ட கூட்டங்களில் உரையாற்றி வருவதாகவும் தெரிய வருகிறது.

✪ இலங்கைக் கரையிலிருந்து தமிழ் நாடு இராமேஸ்வரம் கரைக்கு தினசரி இலங்கைத் தமிழ் அகதிகள் படகுகளில் போய்ச் சேர்வது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இந்த அகதிகளை இந்தியக் கரையில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக, ஏராளமான பணத்தை அவர்களிடமிருந்து வசூலித்து விட்டு, அவர்களை நடுக்கடலிலுள்ள ஏதாவதொரு மணற் திட்டில் படகோட்டிகள் இறக்கி விட்டுத் தப்பித்து விடுகின்றனர். அகதிகள் இவ்வாறு இறக்கப்பட்ட திட்டுகள் இந்தியாவுக்குச் சொந்தமான கடல் எல்லைக்குள் இருக்குமானால் நிர்கதியான இந்த அகதிகளை இந்தியக் கடற்படையினர் பாதுகாப்பாக இராமேஸ்வரம் அழைத்துச் செல்கின்றனர். இதேவேளை இலங்கைக்குச் சொந்தமான மணற்திட்டுகளில் அகதிகள் இறக்கப்பட்டால் அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வந்து சேர்க்கின்றனர். அவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்படுகின்றனர்.

✪ கடந்த 6ம் திகதியன்று திருகோணமலையிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி அகதிகளை ஏற்றிக் கொண்டு இராமேஸ்வரம் சென்ற படகில் பயணம் செய்த குமுதினி என்ற இளம் பெண்ணை படகோட்டிகள் கடத்திச் சென்றுள்ளனர். பின்னர் இவர் தனுஷ்கோடி கடற்கரையில் பிணமாக மீட்கப்பட்டார். இவருடைய கணவர் பத்மராஜன், இப்பெண்ணை அடையாளம் காட்டினார். இவர்கள் இருவரும் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள் எனத் தெரிய வருகிறது. இதனைத் தொடர்ந்து இராமேஸ்வரம் பொலிஸார் படகோட்டிகள் இருவரைக் கைது செய்துள்ளனர்.

✪ நாட்டில் நிலவும் விலைவாசி ஏற்றத்தினால் தவிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக அரச ஊழியர்களுக்கும், அரச ஓய்வூதியம் பெறுவோருக்கும் மாதாந்தக் கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். மாவின் விலையை மூன்று ரூபாவால் குறைப்பதாகவும் அறிவித்துள்ளார். தனியார் துறையினரும் தங்கள் ஊழியர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கோரிக்கைக்குச் சாதகமான பதில் எதுவும் தனியார் துறையினரிடமிருந்து கிடைக்கவில்லையெனத் தெரியவருகிறது. விலைவாசிக்கு ஏற்ற வகையில் உயர்த்தப்பட்ட கொடுப்பனவு அமையவில்லை என்று பலதரப்புக்களிலிருந்தும் ஆட்சேபனைக் குரல்கள் எழுந்துள்ளன.

# அண்டை மண்டலத்தில்....



அப்சர் கிராமத்தில் வெட்டிச் சாய்க்கப்பட்ட 11 பேரில் சிலர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதை கிராமத்தவர்கள் கூடி நின்று பார்க்கின்றனர்.


'உலக மக்கள் அனைவரும் ஓரினம்!' என்ற போதனை அன்று தொடக்கம் இன்று வரை ஓதப்பட்டுத்தான் வருகிறது. ஞானிகளும் யோகிகளும் அவதார புருஷர்களும் மனிதரிடத்திலுள்ள பேதமைகளை நீக்க எத்தனையோ பிரசாரங்களைச் செய்தார்கள்.

என்ன பயன்?

சாதிச் சண்டை, சமயச் சண்டை, இனங்களுக்கிடையிலான சண்டைகள் என்று எத்தனையோ சச்சரவுகள் எழத்தான் செய்கின்றன. இவற்றால் மனித உயிர்கள் பல்லாயிரக் கணக்கில் பலியிடப்படுகின்றன.

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் அவுரங்கபாத் மாவட்டத்திலுள்ள சியாம்பூர் மற்றும் அப்சர் ஆகிய கிராமங்களில் கடந்த மாதம் 24ம் திகதி சனிக்கிழமை இரவு மக்கள் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்த போது புகுந்த உயர்சாதி வெறியர்கள் ஏழைகளை பலதரப்பட்ட ஆயுதங்களால் தாக்கியும் வெட்டியும் குத்தியும் கொன்றுபோட்டுவிட்டுச் சென்றுள்ளனர். ஆண்கள், பெண்கள் குழந்தைகளுட்பட 35 பேரைக் கொன்று குவித்துள்ளனர். மேலும் 15 பேரைப் படுகாயங்களுக்குட்படுத்தியுள்ளனர்.

பீஹார் மாநிலத்தை ஆட்சிபுரிபவர் கள், பல குற்றச் சாட்டுகளைச் சுமந்து கொண்டிருக்கும் முன்னாள் முதல்வர் லல்லு பிரசாத்தின்



அரிசியைப் பாதுகாத்துவைக்கும் தொட்டி ஒன்றினுள் பதுங்கிருந்த இளம் பெண்ணை இழுத்தெடுத்து வெட்டிக் கொன்றுள்ளனர்.

# பீகார் மாநிலப் படுகொலைகள்



பச்சிளம் பாலகன்களை அடித்து நொருக்கிவிட்டு அநாதைகளாக்கி விட்டகன்றனர் வெறியர்கள்.

உறவினர்கள் தான். இந்தக் காட்டாட்சிக்கு காங்கிரஸ் கட்சி துணை நிற்பது தான் வேடிக்கை. லல்லு பிரசாத்தால் ஊட்டிவளர்க்கப்படும் ரண்கீர் சேனா என்ற அமைப்பினரே இந்தக் கொலைகளுக்குக் காரணம் என்று தெரிந்தும் சட்டம் தன் பங்கைச் செலுத்தத் தயக்கம் காட்டி வருவதாகத் தான் கூறப்படுகிறது.

இப்படுகொலைகளைக் கண்டித்து பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் கம்யூனிஸ்ட் கட்சியினர் பேரணி நடத்தினர். இக்கண்டனப் பேரணிக்கு வந்திருந்த கம்யூனிஸ்ட் தொண்டர்களை அடித்து விரட்டிய பொலிஸார் படுகொலைகளைப் பற்றிக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய இந்தப் பேரணியில் படுகொலைக்குக் காரணமான ரண்வீர் சேனா என்ற கும்பலை உடனடியாக தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

இவையெல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல்' திரைமறைவில் ஆட்சிநடத்தும் லல்லுவின் காதில் விழுந்ததாய்த் தெரியவில்லை.



பெற்றெடுத்துப் பாராட்டி வளர்த்த பிள்ளைகளைப் படுக்கையிலேயே பறி கொடுத்த தாய்மார் பதறி அழுகின்றனர்.

**வெளி நாடுகளுக்குச் சென்றவர்கள், அங்கு அவர்களுடைய தஞ்சம் கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதும் அவர்கள் இலங்கைக்கு திருப்பியனுப்படுகின்றனர். அவ்வாறு இங்கு வருபவர்கள் படும் துயரம் தொடர்பாக மனித கௌரவத்துக்கான அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் முதல் இரு பகுதிகளையும் கடந்த வாரங்களில் இங்கு தந்திருந்தோம். அதன் தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது.**

## மேற்கு நாடுகளில் தஞ்சம் மறுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவோர் இங்குபடும் துயரங்கள் 05

ஏழாலை, குப்பிளானைச் சேர்ந்த திரு.கந்தையா மதிவண்ணன் (36) என்பவர், குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் கீழ் 9-10-1999ல் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அன்றைய தினமே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரை நீர்கொழும்புச் சிறையில் அடைத்தனர். இவர் பொய்யான பயண ஆவணங்கள் வைத்திருந்தார் என்பதே இவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டாகும். இவர் 15 வருடங்கள் ஜெர்மனியிலிருந்துவிட்டு வந்தார்.

நீர்கொழும்பு நீதிவான் திரு.சமன் விக்கிரமாராச்சி அவர்கள் முன்னிலையில் திரு.மதிவண்ணன் ஆஜர்படுத்தப்பட்டபோது அவருக்காக வாதாடிய மூத்த சட்டத்தரணி திரு.எஸ்.தவராசா அவர்கள் தனது கட்சிக்காரர், 1984ல் ஜெர்மன் சென்றதாகவும் அங்கு 15 வருடங்கள் வாழ்ந்ததாகவும் தெரிவித்தார். அவரை அந்நாடு நாடுகடத்திய போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். இதனால் மனம் பேதலித்த நிலையில் அவர் இருப்பதாகச் சுட்டிக்காட்டிய சட்டத்தரணி, அவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேன்மை தங்கிய நீதிபதி திரு.சமன் விக்கிரமாராச்சி திரு.மதிவண்ணனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறு கூறி வழக்கை 1999 நவம்பர் 16ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

* ஒல்லாந்திலிருந்து 14.02.1999ல் நாடு கடத்தப்பட்ட மாங்குளம்-வரணிக்குளம்-சிவபுரத்தைச் சேர்ந்த வீரையா பத்மநாதன் தொடர்பாக மகேஸ்வரி வேலாயுதம் அவர்கள், நெதர்லாந்தின் வெளியுறவுத்துறை, தென் ஆசியப்பிரிவைச் சேர்ந்த திருமதி லோயிஸ் ஏ.இ.ஹைபன்ஸ் அவர்களுக்கு 26.02.1999 அன்று எழுதிய கடிதத்தின் பிரதியையும் வீரையா பத்மநாதனின் சத்திய கடதாசியின் பிரதியையும் இங்கு தருகிறோம்.

பெப்ரவரி 26, 1999,

திருமதி லோயிஸ் ஏ.இ.ஹைபன்ஸ் அவர்களுக்கு,

சிறீ லங்காவிலிருந்து சென்ற ஒரு தமிழ் அகதியை மீண்டும் இந்நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதால் அந்த அகதி எதிர் நோக்கும் சிக்கல்கள்.

அண்மையில் இடம்பெற்ற சம்பவம் இது. வீரையா பத்மநாதன் என்பவர் 14.02.1999 ஒல்லாந்திலிருந்து நாடு கடத்தப்பட்டார். அவர் 16.02.1999 காலை 6.00 மணிக்கு விமான நிலையத்தில் வைத்து குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். பின்னர் அவர் குற்றப்புலனாய்வுத்துறையினரிடம் விமான நிலையத்தில் வைத்தே கையளிக்கப்பட்டார். அவர்கள் விசாரித்தபின் தடுத்துவைக்கப்பட்டார். நாடு கடத்தப்பட்ட அவர் வத்தளை நீதிபதியின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டு ரூ 50,000 பிணையில் செல்லவும் 23.03.1999 அன்று நீர்கொழும்பு நீதிபதி முன்னால் தெரிபடவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டார். அவருடைய எதிர்காலம் என்னவாகப் போகிறது என்ற அச்சத்தினால், அவரால் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலையில் இருக்கிறார்.

அவர் நெதர்லாந்து தூதரகத்துடன் தொடர்புகொள்ள எடுத்த முயற்சிகள் பலிதமாகவில்லை. அந்நாடுகடத்தப்பட்டவர் அளித்த வாக்குமூலத்தை இங்கு தருகிறேன்.

நன்றி

ஒப்பம் : மகேஸ்வரி வேலாயுதம்,
செயலாளர்.

நான் 1995ல் ஒல்லாந்துக்குச் சென்றேன். இதற்கு முன்னர் வவுனிக்குளத்தில் விவசாயம் செய்துகொண்டிருந்தேன். திருமணமாகி 3 பிள்ளைகளுமுண்டு. அவர்கள் அனைவரும் இப்பொழுது வவுனிக்குளத்தில் வசிக்கின்றனர். நான் இப்போது இங்கு வந்திருப்பது அவர்களுக்குத் தெரியாது.

ஒரு பயண முகவர் மூலம் நான் 1995ல் முதலில் மொஸ்கோ சென்றேன். அங்கிருந்து 28.11.1995 அன்று ஒல்லாந்தைச் சென்றடைந்தேன். பயணமுகவருக்கு ரூபா.4 இலட்சம் கொடுத்தேன். ஒல்லாந்தில் விமான நிலையத்தில் இறங்கியதும் பொலிசாரிடம் சரணடைந்தேன். சிறீ லங்காவில் இனமோதல்களை அடுத்து அகதியாக அங்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவித்தேன்.

பின்னர் ஒரு முகாமுக்கு அனுப்பப்பட்டேன் அங்கு அகதியாகப் பதியப்பட்டு நாடுகடத்தப்படும்வரை அந்த முகமிலேயே இருந்தேன்.

என் வழக்கு விசாரிக்கப்பட்டு இறுதியாக 10.02.1999 எனது அகதி கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. வழமை போல் அன்று பதிவுக்காக நான் சென்ற போது, என்னை சிறைச்சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு நான்கு நாட்கள் அங்கு வைக்கப்பட்டேன். 14.02.1999 அன்று ஃபிராங்க் ஃபோட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கிருந்து 16.02.1999ல் கொழும்புக்கு அனுப்பப்பட்டேன்.

விமானத்திலிருந்து சகல பயணிகள் இறங்கிச்சென்றபின் மற்றுமொரு நாடு கடத்தப்பட்ட பெண்ணையும் என்னையும் கட்டுநாயக்க விமானநிலையத்திலுள்ள குடிவரவு குடியகல்வு அதிகாரிகளிடம் அழைத்துச் சென்றனர். தொடர்ந்து குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களுடைய விசாரணையின் பின்னர், 17.02.1999 அன்று ஜா எல நீதிபதிமுன்னர் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டேன். நீர்கொழும்பு நீதிபதி முன்னால் 23.03.1999 அன்று ஆஜராகும்படி தெரிவிக்கப்பட்டது.

எனக்கு ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் கொழும்பிலுள்ள நெதர்லாந்து தூதரகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று ஒல்லாந்தில் பொலிஸார் என்னிடம் கூறியிருந்தனர். நான் தங்கியுள்ள விடுதியின் உரிமையாளர் எனது பொலிஸ் பதிவினை என்னிடம் தர மறுத்துவருகிறார். கொட்டாஞ்சேனை பொலிசார், பொலிஸ் பதிவை விடுதியில் வசிப்பவர்களிடம் கொடுக்கலாகாதெனக் கூறியுள்ளதாகச் சொல்கிறார். பொலிஸ் பதிவு கையில் இல்லாமல் நான் வெளியில் வர அச்சப்படுகிறேன்.

இன்று எனது நிலையினை எடுத்துக் கூறுவதற்காக மனித கௌரவத் துக்கான அமைப்புக்கு மற்றுமொரு முதியவரின் உதவியுடன் வந்து சேர்ந்தேன்.

ஒப்பம் : வீரையா பத்மநாதன்.

(மேலும் வரும்)

அலசுவது -இராஜதந்திரி

# வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு
# தீர்வுகாணமுடியாத அரசு-ஐ.தே.க உடன்பாடு

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் அரசியலமைப்புச் சீர்திருத்தம், மற்றும் வடக்கு கிழக்குப் பிரச்சனைத்தீர்வு ஆகியவை தொடர்பாக உடன்பாடுகளை எட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச்மாதம் முதல் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே கருத்தொருமிப்புத் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன. சுமார் பதினைந்து தடவைகள் இருதரப்பும் சந்திப்புக்களை நடத்தியிருந்தன.

இறுதியாகத் தற்போது அரசியலமைப்புச் சீர்திருத்தம் மற்றும் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாகச் சாதகமான முறையில் உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாக ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் தெரிவித்துள்ளன.

எதிர்க்கட்சியை விட ஆளுங்கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணியே உடன்பாடுகள் குறித்து தனது கட்டுப்பாட்டிலுள்ள பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலமாக பெரிதும் அறியத்தந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை எடுத்து நோக்கும் போது ஆளுங்கட்சியும், எதிர்க்கட்சியும் பேச்சுக்களை நடத்தி உடன்பாடுகளை எட்டியிருப்பதென்பது புதியதோர் விடயமாகவே இருக்கின்றது.

கடந்த காலங்களில் எந்தவொரு அரசியல் விடயம் குறித்தும் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கவில்லை. ஒன்றையொன்று வேட்டு வைத்தவையாகவே பிரதான கட்சிகள் எப்போதும் இருந்து வந்துள்ளன.

ஆனால் தற்போது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியன கடந்த மூன்று மாதங்கள் வரை தத்தமது முக்கிய அரசியல் வாதிகள் சகிதம் பேச்சுவார்த்தைகளை நடத்தி உடன்பாடுகளை எட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவை முரண்டுபிடிக்கும் போக்கிலிருந்தும் விலகிப் பேச்சுக்களை நடத்த முன்வந்தமைக்கு வடக்கு-கிழக்குப்பிரதேசத்தில் நீடித்துச் செல்லும் யுத்தமும், அதனால் நாடு எதிர்நோக்கியுள்ள பாதிப்புக்களுமே முக்கிய காரணமாக இருக்கின்றது.

முன்பு வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சனை தொடர்பாக அரசியல் ரீதியான அணுகுமுறைகள் மேற்கொள்ளப்பட்டபோது ஆளுங்கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ தம்மிடையே உடன்பாடுகளை எட்ட முன்வரவில்லை.

இதுதவிர தமிழ் அரசியல் வாதிகளுடனும் நேர்மையான முறையில் எவ்வித உடன்பாட்டுக்கும் வருவதற்குப் பிரதான கட்சிகள் தவறியிருந்தன.

1977ம் ஆண்டு ஐக்கியதேசியக் கட்சி பெரும் பலத்துடன் இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகஞ்செய்து பதவிக்கு வந்தது.

முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஜே.ஆர்.ஜயவர்த்தன கூட ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மட்டுமே தம்மால் மாற்றியமைக்க முடியாதே தவிர, ஏனைய அனைத்தையும் தமது அதிகாரம் மூலம் சாதிக்க முடியுமென்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவர் ஜனாதிபதியாகப் பதவியிலிருந்த சுமார் பத்துவருடகாலத்தில் எத்தகைய சர்வ அதிகாரங்களைக் கொண்டிருந்தபோதிலும் வடக்கு-கிழக்குப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் தோல்வியையே ஜே.ஆர்.ஜயவர்த்தன தழுவியிருந்தார்.

காலஞ்சென்ற ஜே.ஆர்.ஜயவர்த்தன ஜனாதிபதியாகப் பதவிக்குவந்ததும் மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்ற தீர்வுத்திட்டத்தை வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக முன்வைக்க முனைந்தார்.

ஆனால் இத்தீர்வு முயற்சிகூட தோல்வியைத் தழுவியதோடு வடக்கே மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தலின்போதே பெறுமதி மிக்க யாழ்ப்பாணப் பொது சன நூலகமும் தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருந்தது. 1981ம் ஆண்டு இச்சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இதனையடுத்து இனப்பிரச்சனையை மேலும் மோசமானதாக்கிவிடும் இனக்கலவரம் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆட்சியில் 1983ம் ஆண்டு ஆடிமாதத்தில் வெடித்திருந்தது.

இக்கலவரத்தையடுத்தே வடக்கு-கிழக்குப்பிரச்சனை ஓர் அரசியல் போராட்டமாக மட்டுமல்லாது, ஆயுதப்போராட்டமாகவும் மாற்றமடைந்திருந்தது.

இந்நிலையில் ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் தோற்றம் பெற்று வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சனை புதிய பரிமாணங்களைப் பெறலாயிற்று.

இதனையடுத்து தமிழ் தீவிரவாத அமைப்புகள், மற்றும் மிதவாத அமைப்புக்களுடன் பூட்டான் தேசத்தின் தலைநகரமான திம்புவில் இந்திய அரசின் அனுசரணையோடு ஜே.ஆர். அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தது. 1984ம் ஆண்டு இப்பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப்பேச்சுக்களின்போதே வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சனைத்தீர்வுக்கு அடிப்படையாக இருக்கவேண்டிய அம்சங்கள் மிதவாத மற்றும் தீவிரவாத அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட்டிருந்தன.

இலங்கைத்தமிழர்களின் தேசியத்தை அங்கீகரிப்பது, வடக்கு-கிழக்குப் பிரதேசத்தை தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமியாக உறுதிசெய்வது, வடக்கு-கிழக்குத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது, இவற்றுடன் மலையகத்தமிழ் மக்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்குவது ஆகியவையே திம்பு பேச்சுக்களின்போது முன்வைக்கப்பட்ட பிரதானகோரிக்கைகளாகும்.

ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசாங்கம் சார்பாக ஜே.ஆரின் இளைய சகோதரர்களின் ஒருவரும், பிரசித்திபெற்ற வழக்கறிஞருமாக விளங்கிய காலஞ்சென்ற எச்.டபிள்யு. ஜயவர்த்தன திம்பு பேச்சுக்களில் பங்கு பற்றியிருந்தார்.

தமிழ் மிதவாத, மற்றும் தீவிரவாத அரசியல் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து முதல் தடவையாக இலங்கையின் ஆட்சியாளர்களுடன் நடத்திய திம்புப் பேச்சு எவ்விதமுன்னேற்றத்தையும் காணாது தோல்வியில் முடிவடைந்தது.

இதனையடுத்து 1987ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு மாகாணசபைகளை மையமாகக் கொண்ட தீர்வுத்திட்டம் ஜே.ஆர். அரசினால் முன்வைக்கப்பட்டது.

ஆனால் அத்தீர்வுத்திட்டம் கூட திம்பு பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை முழு அளவில் பூர்த்தி செய்வதாக இருக்கவில்லை. இதனால் வடக்கு-கிழக்கில் மாகாணசபையை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப்பரவலாக்கம் தோல்வியைத் தழுவியது.

பதினேழு வருடகாலம் ஐ.தே.க.வின் மூன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் 1977ம் ஆண்டிலிருந்து 1994ம் ஆண்டுவரை ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருந்தனர். ஆனால் அவர்கள் எவராலுமே வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு உருப்படியாக ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கமுடியவில்லை.

இதன் பின்னர் 1994ம் ஆண்டு பதவிக்கு வந்த சந்திரிகா அரசு வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வு காணும் விடயத்தில் கடந்த ஆறு வருடகாலத்தில் தமிழ் அரசியல் தரப்புடன் காத்திரமாகப் பேச்சுக்களை நடத்தி ஆக்கபூர்வமான தீர்வை எட்டத் தவறியதாகவே இருக்கின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக தமிழ் அரசியல்கட்சிகளுடன் பேசி உடன்பாடுகளை எட்ட வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

ஆனால் பிரச்சனைக்குரியவர்கள், மற்றும் ஒரு தீர்வுத் திட்டத்தை எதிர்பார்ப்பவர்களுடன் பேசி உடன்பாடுகளை எட்டாமல் எதிர்க்கட்சியுடன் பேசி வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தை தயாரிக்க ஆளுங்கட்சி முன்வந்திருப்பது ஒரு விநோதமான நடவடிக்கையாகவே இருக்கின்றது.

ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே காணப்பட்டுள்ள உடன்பாடுகள் தமிழ் அரசியல் கட்சிகளிடமும் தெரிவிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் ஊடாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவை இணங்கிக்கொண்ட விடயங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் தெரிவிக்கப்படுமென ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பரந்துபட்ட விரிவான அரசியல் பேச்சுக்கள் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக இடம்பெற வேண்டுமென்றே எதிர்பாக்கின்றனர்.

அப்பேச்சுவார்த்தைகள் கூட ஒரு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் நடத்தப்படவேண்டுமென்பதே அவர்களது முக்கிய கோரிக்கையாகவும் இருக்கின்றது.

இதனடிப்படையிலேயே அவர்கள் நோர்வேயின் மத்தியஸ்தத்தையும் இலங்கை இனப்பிரச்சனை தொடர்பாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

ஆனால் தற்போது நிலைமைமுற்றிலும் மாற்றமடைந்து ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே எட்டப்பட்ட உடன்பாடுகளே ஒரு தீர்வுத் திட்டம் என்ற ரீதியில் அபிப்பிராயங்கள் கட்டியெழுப்படுவதையே அவதானிக்கமுடிகின்றது.

ஆளுங்கட்சி சார்பில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரட்ண கூட தமிழீழ விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உடன்பாடுகள் அனுப்பிவைக்கப்படுமெனவும் அவர்கள் அந்த உடன்பாடுகளை



ஏற்றுக்கொண்டாலென்ன, ஏற்காவிட்டாலென்ன தாம் அதுபற்றி கரிசனை கொள்ளப்போவதில்லை என்று கூறியுள்ளார்.

இக்கட்டத்திலேயே நோர்வேயின் மத்தியஸ்தம், மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் போன்றவற்றுக்கு நேர்ந்த கதி என்ன? என்ற கேள்வி எழுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல் ஹெய்ம் ஊடாக ஆளுந்தரப்புக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே எட்டப்பட்ட உடன்பாடுகள் அனுப்பிவைக்கப்படும் என்று திரு.டி.எம்.ஜயரட்ன அறிவித்துள்ளார். அதனைப்பார்க்கும் போது நோர்வே ஒரு மத்தியஸ்த்தர் என்ற நிலையிலிருந்து 'தபால்காரன்' என்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதோ எனவும் எண்ணந்தோன்றுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் 1987ம் ஆண்டு வடக்கு-கிழக்கில் கொண்டுவரப்பட்ட மாகாணசபை நிர்வாகத்தை ஏற்கமறுத்ததிலிருந்து, இன்று வரை தமது எதிர்பார்ப்புகளுக்கு ஒத்துவராத தீர்வுத்திட்டங்களை முறியடிப்பதிலேயே முனைப்பாக இருந்து வருகின்றனர்.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் கொண்டு வரப்பட்ட தீர்வுதிட்டங்கள் தோல்வியைத்தழுவியதையும் இதன் காரணமாக பாரிய இழப்புக்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததையும் தமிழ் அரசியல் கட்சிகள் நன்கறிந்தேயுள்ளன.

இதன் காரணமாக தமிழர் விடுதலைக்கூட்டணி உட்பட வடக்கு-கிழக்கைச் சேர்ந்த பெரும்பாலான அரசியல் கட்சிகள் விரிவான அரசியல் தீர்வுத்திட்டத்தை எதிர்பார்ப்பதுடன் ஆயுத ரீதியான மோதல்களைத் தவிர்க்கும் விதத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கின்றன.

தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல. ஆளுங்கட்சியுடன், உடன் பாடுகளை எட்டியிருப்பதாகக் கூறப்படும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி கூட தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டுமென்பதையே வலியுறுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடியான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாத வரை வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு உறுதியான தீர்வெதனையும் காணமுடியாத சூழ்நிலையே ஏற்படும்.

எனவே ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடுகள், அவற்றிடையேயான முரண்பாடுகளைத் தீர்க்க உதவலாமே தவிர, வடக்கு கிழக்குப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு பரந்துபட்ட தீர்வை எதிர்பார்க்கும் தமிழ் அரசியல் தரப்புக்களுடன் பேச்சுகள் நடத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகின்றது.

நோர்வே தலையிட்டு சமரசம் செய்து வைத்த இஸ்ரேலிய, பாலஸ்தீனப் பிரச்சனை கூட ஓர் இறுதித் தீர்வைக் காணமுடியாத நிலையில் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் அடுத்த ஆண்டு ஜனவரிமாதம் தமது பதவிக்காலம் முடியுமுன்னர் இஸ்ரேலிய-பாலஸ்தீனப் பிரச்சனைக்கு இறுதியும் முடிமான தீர்வு காணப்பட வேண்டுமென்பதில் தற்போது ஆர்வங்காட்டியிருக்கின்றார்.

இனரீதியான பிரச்சனைகள் எவ்வளவு சிக்கலானவை; அதில் அடங்குகின்ற ஒவ்வொரு விடயங்களும் அழுத்தம் திருத்தமாகவே ஆராயப்படவேண்டுமென்பதற்கு இஸ்ரேலிய-பாலஸ்தீனப்பிரச்சனை நல்லதோர் முன்னுதாரணமாக விளங்குகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கும் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடுகள் வேண்டுமானால் அவர்களது முரண்பாடுகளைத் தீர்க்க உதவலாம்.

ஆனால் வடக்கு-கிழக்குத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறை இந்த உடன்பாட்டுச் சமாச்சாரத்திலிருந்து வேறுபட்டதாக இருக்கவேண்டியதே அவசியமானதாக இருக்கின்றது.

## அதிரடி அய்யாத்துரை



***அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம்*** உயிர் வாழ்ந்த காலத்தில் வாதாடிய வழக்குகள் பலவற்றுக்கு அனுசரணையாக அவரது புதல்வர் குமார் பொன்னம்பலமும் ஆஜராகியிருந்தார். ஆனால் தற்போது குமாரின் கொலை வழக்கு விசாரணைகளில் நீதிமன்றில் தோன்றி வாதாட வேண்டிய நிர்ப்பந்தம் அவரது புதல்வர் பாரிஸ்டர் கஜேந்திரகுமாருக்கு ஏற்பட்டுள்ளது. தந்தையின் மரண விசாரணையில் மகன் தோன்றி வழக்கு நடத்த வேண்டிய நிலை சட்டத்துறை வரலாற்றில் ஓர் அபூர்வமான நிகழ்வாகவே இருக்கிறது.

***குமாரின் மறைவையொட்டி*** நினைவஞ்சலி நூல்கள் அச்சிட தமிழ் அச்சகக்காரர்கள் பின் வாங்கினர். பயந்தான் பிரதான காரணம். ஆனால் இப்ப பெரும்பான்மை இன அச்சகக் காரர் ஒருவர் அவற்றை அச்சிட்டுக் கொடுக்க முன்வந்துள்ளாராம். குமார் ஒரு தமிழ் அரசியல் வாதியாக இருந்திருக்கலாம். ஆனால் அவரை மதிக்கும் சிங்கள நண்பர்கள் ஏராளமாகவே இருக்கிறார்கள்.

***உலகப் பிரசித்திபெற்ற*** விம்பிள்டன் டென்னிஸ் வெற்றிக் கிண்ணத்தை 40 வருடங்களின் பின்னர் ஒரு கறுப்பினப் பெண் வென்றுள்ளார். 20 வயதான வீனஸ் வில்லியம் என்ற அமெரிக்கப் பெண்ணே இத்தடவை பெண்கள் விம்பிள்டன் சாம்பியன். அரை இறுதிப்போட்டியில் இவர் தமது உடன் பிறந்த சகோதரியுடனேயே போட்டியிட்டு இறுதிப் போட்டிக்கு வந்திருந்தார். தமது வெற்றி கறுப்பின மக்களின் பெருமையை உயர்த்தும் என்கிறார் சாம்பியன் வீனஸ் வில்லியம்.

***தமிழோசை ஆனந்தி அக்காவின்*** குரலை நீண்ட நாட்கள் கேட்க முடியவில்லை. விசாரித்துப்பார்த்த போது அவருக்கு இருதய சத்திரசிகிச்சை என்று தெரிய வந்தது. தற்போது தேறிவருகிறார். விரைவில் மீண்டும் தமிழோசையில் அவர் குரல் கம்பீரமாக உலாவர இறைவன் துணைபுரிய வேண்டும்.

***வறுமையின் நிறம் சிவப்பு.*** இலங்கையிலும் சிவப்பு வெளிச்சங்கள் நிறையவே மின்னத் தொடங்கிவிட்டன. கிராமப் புறப்பெண்களெல்லாம் நகர்ப்புறம் கொண்டுவரப்பட்டு சிவப்பு விளக்கு சமாச்சாரம் விரிவடைந்து வருகின்றது. போகிற போக்கில் அயல் நாட்டில் இருப்பது போன்று விரைவில் இந்த சிவப்பு விளக்குகளுக்கு நம்நாட்டில் லைசன்ஸ் கிடைத்தாலும் ஆச்சரியமில்லை.

***பாகிஸ்தான் வீரர்கள்*** தமது மதத்தை மதிப்பவர்கள். கெத்தாரம அரங்கில் அவர்கள் ஆடிக் கொண்டிருந்தபோது அருகிலிருந்த பள்ளிவாசலில் இருந்து பாங்கு சொல்லப்பட்ட போது ஆட்டத்தை நிறுத்தி வழிபாடு செய்தனர். உலகையே ஆட்டுவிப்பவனை ஆட்டத்தின் நடுவேயும் தொழுது கொண்டமை அரங்கில் சில நிமிடங்கள் பக்திப்பரவசத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

# நடந்த கதை

## உண்மையில் நடந்த கதை

**( 2 வாரங்கள் மட்டும்)**

*பெரிய மனித உருவில் பல கொடிய மிருகங்களும் உலவுகின்றன. அவர்களுடைய சில பழக்க வழக்கங்களே, அவர்கள் பசுத்தோல் போர்த்திய புலிகள் எனக் காட்டிக் கொடுத்து விடுகின்றன.*

## ஊசிமருந்து ஊட்டிய வெறி

**புஷ்பா தங்கத்துரை**

வெலிங்டன் ஸிலிகான் கம்பெனியில் குதூகல விழா! அமெரிக்க பங்குதாரர்கள் இரண்டு பேர் 'கேரி கூப்பர்' அழகில் வந்திருந்தார்கள்.

தாஜ் கொரமண்டலில் அழகான நீர்ச்சுனை அருகே விருந்து! அதற்கு முன் 'பானம்!'

திறந்த புல்வெளியில் விருந்தாளிகள் உலாவினார்கள். கிணிங் கிணிங் என்ற கண்ணாடிக் குலுங்கல்கள்! பிச்... என்று சிரிப்புகள். இஸ்பிஸ் என்ற பெண்கள் உச்சரிப்புகள், ஹ்ஹ்ஹ் என்று பெரிய தொண்டைச் சிரிப்புகள்!

எல்லாவற்றையும் ஒரு மாதிரி முடித்து விட்டு, பெர்சனல் அசிஸ்டெண்டு பிரேமா வீட்டுக்குப் புறப்பட்டாள்.

ஆபீஸ் கார் சொகுசாகக் கொண்டு விட்டது.

ஹில்டன் டவர்ஸ் அடிவாரத்தில் இறங்கினாள். லிஃப்ட் ஏறினாள். பதினெட்டாவது மாடியில் இறங்கினாள்.

வீட்டினுள் நுழைந்தாள். நேரே பாத்ரூம்!

ஸாரியை அவிழ்த்து, அவசரமாக ஒரு வாஷ்! பிறகு சின்னச் சின்ன நீர் முத்துக்களைத் துடைப்பு! மிருதுவான உடம்பில் யார்ட்லி பவுடர் தூவல்! ஆரஞ்சு டிஷ்யு உடுத்தி, ஃபோம் மெத்தையில் சுகமான சாய்வு!

மேலே விசிறியில் பிரமாத ஓட்டம்!

அவளது உடம்பின் வெறுமைகளை அங்கங்கே பார்த்து, அதற்கேற்ப துள்ளாட்டம்! வெப்பம் தாங்காமல் பல முக்கிய இடங்களில் காற்று படவேண்டும் என்று ஸாரியை அவள் விலக்கி இருந்தாள்.

திடீரென்று சத்தம் கேட்டது கண்ணைச் சுழல விட்டாள்! கண் எதிரே ஒரு கருப்பு உருவம்! பச் என்ற நெஞ்சடைப்பு!

யோசிப்பதற்குள், உருவத்தின் கைகள் நீண்டு விட்டன. அதன் வலது கையில் பளிச்சிடும் கூர்மைக் கத்தி!

கத்தாதே! சொன்னபடி கேட்டுடு! இல்லாட்டி நீ காலி! என்றது குரல்!



அவள் படித்தவள்! அதுபோன்ற நேரத்தில் எப்படிச் சமாளிக்கவேண்டும் என்று அவளுக்குத் தெரியும்.

அவள் சும்மா இருக்க, உருவத்தின் கை அவள் மேல் படர்ந்தது. மெள்ளத் துவைத்து விளையாட ஆரம்பித்தது.

பசியை முடித்துக் கொண்ட பிறகு அவளை எழுப்பி அருகில் இருந்த பாத்ரூமுக்குத் தள்ளிக் கொண்டு சென்றான்! உள்ளே அவளைத் தள்ளி கதவைத் தாழ்ப்பாள் போட்டு மூடி வெளித் தாழ்ப்பாளையும் போட்டுவிட்டான்!

உயரமான ப்ளாட்டுகளில் இருப்பவர்களுக்குச் சில கஷ்டங்கள் உண்டு. அவர்கள் கத்தினாலும், இரைந்தாலும் பிறருக்குக் கேட்காது.

பாத்ரூமில் அடைபட்ட பிரேமா, விடுதலை பெற எம்பாடு உம்பாடு ஆனது. என்ன கத்தியும் பயன் இல்லை. கடைசியில் வெண்டிலேட்டர் வழியே நீரை வெளியே வாரி வாரி இறைக்க, பிறர் கவனத்தை அது கவர்ந்துவிட, அவளுக்கு உதவியும், விடுதலையும் கிடைத்தன.

பொலிசாருக்குச் செய்தி பறந்தது. ப்ளாட்டில் அவர்கள் வந்து பார்க்க, பிரேமாவின் கற்பு, பணம் இரு தங்கச் சங்கிலிகள், ஒரு டேப்ரிக்கார்டர், ஒரு டிரான்சிஸ்டர் யாவும் பறிபோயிருப்பது தெரிந்தது.

பிரேமா படித்தவள். மானமுள்ளவள். எனவே, இன்ஸ்பெக்டர் மகேஷிடம் மட்டும் உண்மையைக் கூறிவிட்டு, பத்திரிகைகளுக்குச் செய்தி வழங்கும்போது, தான் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டதை மறைத்து விட்டாள். ப்ளாட்டில் திருட்டு போயிருப்பதாக மட்டும் குறிப்பிட்டாள்.

திருடறதுக்குத்தான் அவன் வந்திருக்கிறான். ஆனால் ஒரு இளம் பெண் துணி இல்லாமல் படுத்திருப்பதைப் பார்த்தால் எந்த ஆண் பிள்ளை சும்மா இருப்பான்? ஆக, திருடறதுக்குக் கூடுதல் போனஸ் கிடைச்சுது! என்றார், பின்னர் மகேஷ் சிரித்துக் கொண்டே!

பிரேமாவைப் பரிசோதனை செய்த டாக்டர் கூட அந்த அபிப்பிராயம் தான் கூறினார்.

"சார்! நிர்வாணப் பெண்ணைப் பார்த்தவுடனே தலை கிறுக்கிப்போச்சு! காரியத்திலே இறங்கிவிட்டான்" என்றார் அவர்.

ஆனால், இந்தப் பொலிசாரின் ஊகங்கள் தவறு என்று சீக்கிரமே தெரிந்தது.

பொலிஸ் ரிக்கார்டுகளைப் பார்த்ததில், நான்கு பாலியல் வல்லுறவுகளும், கொள்ளைகளும் இன்னும் கண்டு பிடிக்கப்படாமல் இருந்தன.

எல்லா வல்லுறவுகளும், ஒரு முகமூடியால் செய்யப்பட்டு இருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருந்தது.

பிரேமா பலவந்தப்படுத்தப்பட்டது அதில் ஐந்தாவதாகச் சேர்த்துக்கொள்ள வேண்டி வந்தது. அந்த முகமூடி ஒரு வெறியன். தனியாக இருக்கும் பெண்களைத் தேடி வந்து இரவில் பலாத்காரமாக உறவு கொள்வான்.

வீடுகளிலோ, ப்ளாட்களிலோ புகுவதற்கு அவன் சில சின்னக் கருவிகளை வைத்திருந்தான். எளிதில் அவனால் கதவுகளைத் திறக்க முடிந்தது.

கொஞ்சம் படித்தவனாகத் தெரிந்தான். கையில் கையுறை வேறு போட்டிருப்பதாகக் கூறினாள் பிரேமா.

கைரேகை எதையும் விட்டுச் செல்ல அவன் விரும்பவில்லை என்று தெரிந்தது.

இன்னொரு விஷயம், பிரேமா சொல்லத் தெரிந்தது. குற்றவாளி ஏதாவது மருந்து உட்கொண்டிருக்க வேண்டும். ஏனெனில் அவனது உடல் உறவு ரொம்பநேரம் நீடித்தது!

புதுச் செய்தி அது!

இவ்வளவுக்கும் பிரேமா ஒரு முன் அனுபவம் இல்லாதவள்! இந்த வல்லுறவால் தான் அவளது, கன்னித்தனம் போயிருக்கிறது என்பதை டாக்டர் உறுதி செய்துவிட்டார். எனவே பொது அறிவால் இந்த விஷயங்களை அவள் அறிந்திருக்கிறாள் என்பது தெளிவாயிற்று.

இதை அடுத்து, பெண் பொலிசார் மற்ற நான்கு பெண்களிடமும் சென்று நாசுக்காக விசாரித்தார்கள். பாலியல் உறவின் போது நீடித்த நேரம் முகமூடி எடுத்துக் கொண்டது உறுதியாகிவிட்டது.

மற்றபடி முகமூடியின் செய்முறைகள் யாவும் பொலிசாருக்கு அத்துப்படியாகிவிட்டது. சின்னக்கருவிகளை உபயோகித்து வாசல் கதவுகளைத் திறப்பதில் அவன் கெட்டிக்காரன். திறந்து உள்ளே சென்று, தனியாக இருக்கும் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த வேண்டும்! ஒரு அறையில் வைத்துப் பூட்ட வேண்டும்! ஏதாவது பொருள்களைக் கொள்ளை அடிக்க வேண்டும்.

இரண்டாம் மாதம் வெள்ளிக்கிழமை இரவு! சாந்தி என்ற இளம் பெண் தனது வீட்டில் தனிமையாகத் தூக்கத்தில் இருந்தாள். கருப்பு உருவம் வந்து விட்டது. அவனது சைகையில் இருந்து அவன் விருப்பம் அவளுக்குத் தெரிந்து விட்டது.

செயற்கை முறையில் இன்பம் தரச் சொல்லி அவளை அந்த உருவம் பலாத்காரம் செய்தது. அவளும் அதிகவெறுப்போடு இணங்கவேண்டி வந்தது.

பின்னர் இன்ஸ்பெக்டர் மகேஷ் பேசும் போது, சாந்திக்கு ஒரே கோபம் "ஏன் சார், இப்படி ஒரு முகமூடி உலாவுறான்னு பத்திரிகையில் போட்டிருந்தால் நான் இன்னும் உஷாராக இருந்து அவனை மாட்ட வச்சிருப்பேனே?" என்றாள்.

"சாரி மேடம். வெளியிலே சொல்றதை விட, சொல்லாமல் இருந்தால் நன்மை அதிகம். சீக்கிரம் பிடிச்சுடலாம் என்று நினைத்தோம்", என்றார் மகேஷ்.

அவளிடம் அவன் செயற்கை உறவு கொண்டதால் ஒரு சின்ன நன்மையும் விளைந்தது. சாந்தி அந்த முகமூடியின் முகத்திரைக்குப் பின்னால் கொழுத்த மீசை இருப்பதைப் பார்த்துவிட்டாள்.

"இந்த விஷயம் எங்களுக்குப் பெரிய உதவி செய்யும், மேடம்! என்றார் மகேஷ்.

அடுத்த சம்பவம் நவம்பர் மாதத்தில் நடந்தது.

இருபத்தைந்து வயது திருமதி நர்மதா இரவு பதினொன்றரைக்கு தனியாக டெலிவிஷன் பார்த்துக்கொண்டிருந்தாள். கதவைப் பூட்டியிருந்தாள்.

அவள் கணவர் வியாபார விஷயமாக வெளியூர் சென்றிருந்தார்.

முகமூடி எப்படி அந்தக் கதவைத் திறந்து உள்ளே வந்தான் என்று தெரியாது. கத்தியைக் காட்டியதும் அவளது நாடிகள் அப்படியே அடங்கிவிட்டன.

அவன் சைகை மூலம் அவளைக் கிளப்பி, படுக்கை அறைக்குக் கொண்டு போனான்.

ஆடைகளைக்களையச் செய்தான் அவள் அந்தக் கணமே கீழ்ப்படிந்தாள். அவனது நோக்கம் புரிந்துவிட்டது.

ஒரே ஒரு வேண்டுகோள் மட்டும் விடுத்தாள்! "கொஞ்சம் மெள்ளமா நடந்துக்குங்க. குழந்தை இருக்கு!" என்றாள்.

"எங்கே?"

"வயிற்றிலே, நாலு மாசம்!"

தலையைத் தாழ்த்தினான் அவன் "ரைட்!" என்று சொல்லி வெளியே போய் விட்டான்.

அவன் உண்மையாகவே போய் விட்டானா, என்று தெரியாமல் ஒரு மணி நேரம் அப்படியே இருந்தாள். பிறகு எழுந்து கதவைச் சாத்திவிட்டு உதவிக்குப் ஃபோன் செய்தாள்.

இன்ஸ்பெக்டர் மகேஷ் நடுராத்திரியில் படுக்கையிலிருந்து எழுந்தார். முகமூடி கேஸ் என்று தெரிந்ததால், அவரே போக வேண்டி வந்தது. பரிவாரங்கள் அனைவருக்கும் செய்தி பறந்தது.

"நல்ல வேளை! அங்கே பாலியல் வல்லுறவு நடக்கவில்லை", என்றார் மகேஷ்.

"காரணம், அவள் கர்ப்பிணி. ஒரு வேளை அந்த ஆசாமி ஒரு குடும்பப் பொறுப்புள்ளவனாக இருக்கலாம்", என்றார் டாக்டர் கணேஷ்.

"ஆச்சரியம்! ஒரு குற்றவாளி கர்ப்பிணிப் பெண்களுக்கு மதிப்பு கொடுக்கிறான்", என்றார் இன்ஸ்பெக்டர் மகேஷ்!


பெண்களை மிரட்டுகிறானே தவிர, இந்தக் குற்றவாளி ஒருத்தருக்கும் தீங்கு விளைவிக்கவில்லை.

மகேஷுக்குக் கவலை ஏற்பட்டது. இன்னும் எத்தனை பாலியல் குற்றங்கள் நடக்கப் போகின்றன? 'முகமூடியைப் பற்றிய செய்தியை', வெளியிடாமல் வைத்திருக்கிறோமே என்று நினைத்தார்.

(நடந்த கதை தொடரும்)

## நட்சத்திர நாயகன் ஜடேஜா

இன்று இந்தியா-இலங்கை போன்ற நாடுகளில் மக்களைப் பெரிதும் கவரும் இரு சாதனங்கள் உள்ளன. ஒன்று கிரிக்கெட் மற்றது திரைப்படம். இவ்விரு துறைகளிலும் சிறப்புற்றுத் திகழ்பவர்கள் அடிக்கடி ஒருவரையொருவர் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் பல ஏற்படுகின்றன.





அஜய் ஜடேஜா இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவர். அழகான முக வெட்டும் அம்சமான அவையவங்களும் கொண்ட இந்த இளைஞர் மும்பாயின் (பம்பாய்) முன்னணி (பெண்) தாரகைகளின் உள்ளத்தைக் கவரும் ஒருவராக வலம் வருகிறார்.

ஜடேஜாவின் தோற்றத்தைக் கண்டு அவரைத் தமது திரைப்படங்களில் நடிக்க வைப்பதற்காக பல தயாரிப்பாளர்கள் போட்டி போடுகின்றனர். (மாதுரி டிக்ஸித்துடன் ஜோடி சேர்ந்து இவர் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட இந்திப்படம் என்னவானதோ தெரியவில்லை) ஜடேஜா மும்பாயின் முன்னணி நட்சத்திரங்களான பூஜாபட், மாதுரி டிக்ஸித், ரவீணா ரண்டன், தபு, சோனாலி போன்றவர்களுடன் மிக நெருக்கமான நட்புறவு கொண்டுள்ளார். கிரிக்கெட் ஆட்டம் பற்றித் தொலைபேசி மூலம் பல தகவல்களை பொது மக்களுடன் பகிர்ந்துகொள்வதற்காக தனியானதொரு தொடர் பாடல் தொலை பேசி நிறுவனத்தை தபுவுடன் சேர்ந்து நிறுவுவதற்காக திட்டமிட்டு வருகிறார். "முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராயுடன் ஒரு படத்தில் தோன்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தால் நான் கிரிக்கெட்டுக்கே முழுக்கு போட்டு விடுவேனோ என்றுகூட எனது நண்பர்கள் கிண்டல் பண்ணுகிறனர்.

கிரிக்கெட் என்னுடைய முதாதையர் கடைப்பிடித்த துறை. அதனால் தான் இத்துறையில் நான் சிறப்புற்று விளங்குகிறேன். இத்துறையைத் தலை முழுகிவிட்டு திரையுலகில் முற்று முழுதாகத் தோய்ந்து விடுவேன் என்று கருதுவதற்கில்லை" என்று கூறுகிறார் அஜய் ஜடேஜா.

## சிம்மசொப்பனமாகப்போகும் வாரிசு



கடந்த 1996ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் வீதியில் சென்ற போது உதய்யை எதிரிகள் சரமாரியாகத் துப்பாக்கியால் உடல் எங்கும் சல்லடையாக்கினர். அவர் இறந்து விட்டார் என்ற திருப்தியுடன் திரும்பிவிட்டனர் அவர்கள்.

ஆனால், உதய் மருத்துவ நிபுணர்களின் அசாத்திய முயற்சியால் உயிர் பிழைத்தார். வலது கால் முற்றிலும் போய்விட்டது. அச்சம்பவத்தின் பின் கடந்த 4 ஆண்டுகளாக அவர் வெளியே வரவில்லை. சமீபத்தில் அவர் தேர்தலில் வாக்களித்தார். வேட்பாளரான அவர் எம்.பி.யாவதற்குத் தான் வாக்களித்தார்.

தேர்தலில் இவருக்கு 99.9 வீதமாக வாக்கு கள் கிடைத்தன. அடுத்த ஜனாதிபதி கிடைத்து விட்டார் என்ற மகிழ்ச்சியில் தான் அவ்வளவு வாக்குகள். அமெரிக்காவுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிவரும் அப்பாவின் உண்மையான வாரிசுதான் உதய்.

இப்போது புரிந்திருக்குமே உதய் யாரென்று? ஆம், ஈராக் அதிபர் சதாம் ஹுஸைனின் மகன்தான் உதய்.

## பெண்களுக்கான பாதுகாப்பு ஆடை

பெண்களைப் பாலியல் கொடுமைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக வெளிநாடுகளில் பூட்டுக்கள் பொருத்திய உள்ளாடைகள் இருப்பதை அறிவீர்கள், இதே போன்று இப்போது பூட்டுக்கள் பொருத்திய நவீன 'பிரா'க்களும் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதை இளம் பெண்களின் பெற்றோர்கள் ஒரு வரப்பிரசாதமாகக் கருதுகிறார்கள். இதன் பூட்டை யாராலும் உடைக்க முடியாதபடி தயாரித்துள்ளனர்.

இதன் தயாரிப்பாளர்கள் 500 வாலிபர்களைக் கொண்டு பரிசோதனை செய்திருக்கிறார்கள். அவர்களில் யாராலும் இப்பூட்டை உடைக்க முடியவில்லையாம். அத்துடன் இது ஒரு வகைத் துணியால் தைக்கப்பட்டுள்ளதால் கிழியவும் மாட்டாதாம்.

## ஸ்வெட்டர் போட்ட பெங்குயின்கள்



அவுஸ்திரேலிய நாட்டில் உள்ள பெங்குயின் பறவைகளுக்கு ஸ்வெட்டர் மாட்டி விட்டிருக்கிறார்கள்.

அதிக குளிரில் வாழும் உடல் அமைப்புக் கொண்ட பெங்குயின்களுக்கு ஸ்வெட்டர் எதற்கு என்று கேட்கலாம்.

அவுஸ்திரேலியாவில் ஒரு கடலோரப் பகுதியில் இருந்த கப்பலில் இருந்த எண்ணெய் பெருமளவில் கசிந்து கடலில் பரவி விட்டது. அங்கிருந்து பெங்குயின் பறவைகள் மீது கடலில் பரவிய எண்ணெய் ஒட்டிக் கொண்டு விட்டது.

உடலில் அழுக்குகள் ஒட்டிக் கொண்டால் பெரும்பாலான உயிரினங்கள் தமது நாக்கால் நக்கிச் சுத்தப் படுத்திக் கொள்ளும். அதேபோன்று இப்பெங்குயின்களும் தமது நாக்கால், தமது உடல் மீது ஒட்டிக் கொண்ட எண்ணெயை நக்கிச் சுத்தப்படுத்தின. இதனால் பல பெங்குயின்கள் இறந்து விட்டன.

இதைத் தடுப்பதற்காக இப்பெங்குயின்களுக்கு ஸ்வெட்டர் தைத்துப் போட்டுள்ளார்கள். இதன் மூலம் பெங்குயின்களின் உடலில் ஒட்டி இருக்கும் எண்ணெயை ஸ்வெட்டர் உறிஞ்சிக் கொள்ளும். பின்னர் ஸ்வெட்டரைக் கழற்றி எடுத்து விடுவார்கள்.

## ஒரு வருட நாடோடி வாழ்க்கை

மனித வாழ்க்கை 130 ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்தது என்று தெரிந்து கொள்வதற்காக இரண்டு ஜோடிகளை (ஓர் இளம் ஜோடி மற்றும் ஒரு வயதான ஜோடி) ஆளரவமே இல்லாத காட்டுக்குள் அனுப்பி வைத்துள்ளார்கள்.

அவர்கள் தொலைக்காட்சி, வானொலி, உட்பட எந்தவொரு நவீன வசதியுடைய சாதனங்களும் இல்லாமல் ஒரு வருடம் காட்டுக்குள் வாழ்ந்தால் அவ்விரு ஜோடிகளுக்கும் தலா 48 ஆயிரம் டொலர் (சுமார் 37 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா) கொடுக்கவுள்ளார்கள்.

அவர்களிடம் ஒரு டசின் கோழிகளும், ஒரு சேவலும், ஒரு பசுமாடும், ஒரு கர்ப்பமான நாயும், ஒரு பன்றியும், அந்தக் கால விவசாயக் கருவிகளையும் கொடுத்து அனுப்பியுள்ளனர்.

இந்த ஜோடிகள் காட்டுக்குள் நிலத்தைச் சீர்படுத்தி, விவசாயம் செய்து வாழ்வார்கள். இந்த ஜோடிகள் உலகத் தொடர்பே இல்லாமல் காட்டுக்குள் வாழ்வார்கள். அவர்களிடம் 1870க்கு முந்தைய ஒரு வேதாகமமும், 1865ல் வெளிவந்த சமையல் கலைப் புத்தகம் ஒன்றும் கொடுத்துள்ளனர். அப்புத்தகத்தின்படிதான் சமைத்துச் சாப்பிட வேண்டும்.

இந்த ஜோடிகள் வாழும் காட்டு வாழ்க்கை அவர்களுக்குத் தெரியாத வகையில் படம் பிடிக்கப்படும்.

சரி, இது எங்கே எதற்காக நடந்தது?

கனடாவில் ஒரு தொலைக்காட்சியில் 'ஒரு வருட நாடோடி வாழ்க்கை' என்ற நிகழ்ச்சிக்காகவே இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு இரண்டு ஜோடிகள் வேண்டும் என அந்தந்த தொலைக்காட்சி விண்ணப்பித்தது. இதற்கு ஆயிரக் கணக்கில் ஜோடிகள் விண்ணப்பித்திருந்தார்கள்.

அவற்றில் உடல் நலமும், மனோதிடமும் உள்ள இந்த இரு ஜோடிகளைத் தேர்ந்தெடுத்தனர்.


## மனிதக் கோபுரம்



← உள்ளூர் விளையாட்டு மற்றும் களியாட்ட நிகழ்ச்சிகளில் வட்ட வடிவத்தில் சிலர் சுற்றி நிற்க,அவர்களின் மேல் வேறு சிலர் ஏறி நிற்பார்கள். அவர்களுக்கு மேலும் பலர் அடுக்குகளில் மனிதக் கோபுரமாக இருப்பதை அவதானித்திருப்பீர்கள்.

இப்படி மனிதக்கோபுரம் அமைப்பதில் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் சாதனை நிகழ்த்தியுள்ளனர்.

ஸ்பெயின் நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள வோல்ஸ் என்ற இடத்தில் நடந்த இளைஞர் விளையாட்டு நிகழ்ச்சியில் அனைவரையும் பிரமிக்க வைத்த இந்த மனிதக் கோபுரம் 9 அடுக்குகளைக் கொண்டதாகும்.




## ஆனந்தமான சயனம்

↑ படத்தைப் பார்த்ததும் என்னவோ ஏதோ என்று நினைத்து விடாதீர்கள். டயர் ஒன்றுக்குள் சிறுவன் ஒருவன் தன்னை மடக்கி, வளைத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கலிஃபோர்னியா அருகே சோனாமா என்ற இடத்தில் போட்டி ஒன்றைக் கண்டு களிக்க வந்திருந்தான் இச்சிறுவன். வந்த இடத்தில் தன் சகாக்களுடன் ஓடியாடி விளையாடிக் களைத்துப் போனான்.

பெற்றோர் போட்டியை மும்முரமாகக் கவனித்துக் கொண்டிருக்க, 4 வயதான இந்தப் பாலகனோ ஆனந்தமாக டயர் மெத்தையில் சயனிக்கிறான்.

# தகவல் பெட்டி



## பெங்குயின்கள் பாதிப்பு

↑ உலகில் பல உயிரினங்கள் அழிந்து வருவதற்கு நவீன தொழில் நுட்பமும் ஒரு காரணம் எனலாம். 'பனிப்பறவைகள்' என அழைக்கப்படும் பெங்குயின்கள் உலகில் அருகி வரும் உயிரினங்களில் ஒன்று.

அண்மையில் தென்னாபிரிக்காவில் உள்ள ராபன் தீவு அருகில் ஒரு பாரிய எண்ணெய்க் கப்பல் மூழ்கியதால், அதிலிருந்த எண்ணெய் முழுவதும் அக்கடற்பரப்பு முழுவதும் படிந்தது.

அக்கடற்பரப்பில் படிந்த எண்ணெயால் அங்கிருந்த சுமார் 4 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட பெங்குயின்கள் பாதிப்படைந்தன. இவை அங்குள்ள கடற்பறவைகள் பாதுகாப்பு நிறுவனத்தின் சரணாலயத்தில் பாதுகாக்கப்பட்டுப் பின்னர் வேறொரு இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

## குதிரைப் பாய்ச்சல்



→ குதிரைகள் சவாரி செய்வதில் தான் பெயர் போனவை. சில குதிரைகளை வைத்து பல உயரமான தடைகளைக் கடக்க வைத்தும் விளையாட்டுக் காட்டுவார்கள்.

குதிரையை 30 அடி உயரத்தில் உள்ள மேடையில் இருந்து தரையின் மீதிருக்கும் மெத்தையில் குதிக்க வைத்துச் சாகசம் செய்வதைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள்.

அமெரிக்காவில் உள்ள லக்வானா என்ற நகரில் சமீபத்தில் இக் குதிரையைப் பாய வைத்துச் இந்தச் சாகசத்தைச் செய்ய வைத்துள்ளனர்.

## குழந்தை ஹாஜி



← தியானக் கிரிகையில் இருக்கும் இந்தக் குழந்தை, இந்த வருட புனித ஹஜ் கிரிகைகளில் கலந்து கொண்டு இளம் வயதிலேயே அல்-ஹாஜ் என்ற புனிதத்துவத்தை அடைந்திருக்கிறார்.

கென்யா நாட்டின் நைரூபி என்ற இடத்தைச் சேர்ந்த அஹமட் என்ற இந்த இளம் தளிரின் வயது 3 வருடங்கள் தான்.

(பட உதவி : எம்.பி.அஹமட் நியாஸ்-கொரியா)

## அழகுச் சிகிச்சை



→ இரண்டு படங்களிலும் இருப்பர்வர்கள் தாயும் மகளும் என்று நினைத்தால் அது மிகப் பெரிய தவறு. இருவருமே ஒருவர் தான். முதல் படத்தில் இருந்தவரை அழகுபடுத்தும் அறுவைச் சிகிசை செய்து 15, 20 வருடங்கள் இளமையாக்கி இரண்டாவது படத்தில் இருப்பது போல் செய்து விட்டார்கள், விஞ்ஞான விந்தைகளில் இதுவும் ஒன்று.

(பட உதவி: ஷஹீனா சிராஜ்-சவுதி அரேபியா)

திரையுலக மறுபக்கம் (156)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# பணம் பறிக்கும் பெற்றோரும் நடிகையின் காதல் தியாகமும்

'புன்னகை அரசி'யின் பெயரில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமானவர் தான் இந்த நடிகை. குமாரியானதும் பெயரை மாற்றிக் கொண்டார். நடிகைகளில் முன்னழகு நடிகை என்ற பட்டப்பெயர் இவருக்குத்தான் பொருந்தும்.

இவர் குழந்தை நட்சத்திரமாக இருந்தபோது இவரை வைத்துப் பணம் சம்பாதிப்பதில் மட்டுமே குறியாக இருந்தனர் இவரது பெற்றோர். சில குழந்தை நட்சத்திரங்களைப் போல் இவர் பிரபலமாகாவிட்டாலும், இவருக்குப்பட வாய்ப்புகள் சுமாராக இருந்து வந்தன.

இந்தி உச்சநட்சத்திரத்துடன் தமிழக சூப்பர் நட்சத்திரங்கள் இணைந்து ஒரு இந்திப் படம் நடித்திருந்தார்கள். அதில் சிறுவயது 'நாயக' நடிகராக நடித்தார் இந்தக் குழந்தை நடிகை.

சில வருடங்கள் கழித்து நாயகியாக அறிமுகமானார் நடிகை. அப்போது படத்தயாரிப்பாளருடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த அந்த தயாரிப்பாளர் ஏற்கனவே திருமணமானவர். சதா பணமே கதி என இருக்கும் பெற்றோரிடம் கிடைக்காத அன்பும், அரவணைப்பும் தயாரிப்பாளரிடமிருந்து கிடைக்கவே அவரது அன்புக்கு அடிமையானார் நடிகை.

தயாரிப்பாளருடன் தனது மகள் நெருக்கமாக இருப்பது அடுத்த படவாய்ப்புக்காகத் தான் என நினைத்த நடிகையின் பெற்றோர் முதலில் பேசாமலிருந்தனர். கதை வேறுமாதிரிப் போவதை உணர்ந்த அவர்கள் தயாரிப்பாளரிடமிருந்து மகளைத் பிரிக்கத் திட்டமிட்டனர்.

இதைத் தெரிந்து கொண்ட நடிகை வீட்டை விட்டு ஓடிச் சென்று தயாரிப்பாளருடன் திருமணம் செய்யாமல் குடும்பம் நடத்த ஆரம்பித்தார். மகள் தங்களைவிட்டுப் போய் விட்டால் கொழுத்த வருமானத்திற்கு என்ன செய்வது என்று நினைத்து, பகீரதப் பிரயத்தனப் பட்டுத் தயாரிப்பாளரிடமிருந்து மகளைப் பிரித்து வந்து தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் நடிகையின் பெற்றோர்.

நடிகையின் திருமண விவகாரம் வெளியே கசிந்து பெரிதாகி விட, நடிகைக்குத் தமிழில் படவாய்ப்புக்கள் வராமல் போய் விட்டன.

தமிழில் வாய்ப்பில்லாமல் போனால் என்ன, இருக்கவே இருக்கிறது தெலுங்குப்படவுலகம் என்று நடிகையை இழுத்துக் கொண்டு ஆந்திராவுக்குச் சென்றார்கள் நடிகையின் பெற்றோர்.

ஆந்திராவில் நடிகை தனது பெயரை இரண்டெழுத்துப் பெயராக மாற்றிக் கொண்டு நடிக்க ஆரம்பித்தார். பெயர் 'ராசி'யோ என்னவோ நடிகையின் படங்கள் அங்கு நன்றாக ஓடின.

இது இவ்வாறு இருக்க, நடிகையின் பெற்றோர் மகளது வருமானத்தைப் பங்குபோட ஒன்று சேர்ந்திருந்தாலும், இவர்கள் கணவன், மனைவியாக ஒற்றுமையாக வாழவில்லை.

நடிகையின் தாயார் படப்பிடிப்புக்களுக்கு மகளுடன் செல்லும்போது, அங்கு பணியாற்றும் இளம் வயதுடையவர்களுடன் நெருக்கமான நட்பை ஏற்படுத்திக் கொள்வார். இதனால் கணவன் மனைவிக்கிடையே சண்டை ஏற்பட்டு இருவரும் விவாகரத்துப் பெற்று விட்டார்.

விவாகரத்துப் பெற்றதும் நடிகையின் தாயார் ஓர் இளைஞனை மணம் முடித்தார். இதைப் பார்த்த நடிகையின் தந்தை நான் மட்டும் என்ன உனக்குக் குறைந்தவனா என்ற ரீதியில் தானும் ஓர் இளம் பெண்ணைக் கட்டிக் கொண்டார்.

இந்நேரத்தில் நடிகை பெற்றோரிடமிருந்து தப்பிவந்து, தமிழகத்தில் இருக்கும் தயாரிப்பாளருடன் சேர்ந்து வாழ்கிறார். தன்னை அறிமுகப்படுத்திய அன்பிறுரிய தயாரிப்பாளர் பணக்கஷ்டத்தில் இருப்பதை உணர்ந்து கொண்ட நடிகை அந்தத் தயாரிப்பாளருக்காக 'வாழ'த் துணிந்து விட்டார்.

படங்களில் நடித்துப் படத் தயாரிப்பாளரின் கடன்களை அடைக்க முடிவு செய்துவிட்டார். தமிழ்-தெலுங்கு-மலையாளம் என மூன்று மொழிகளிலும் தரகர்கள் மூலம் வாய்ப்புத்தேடி நடித்து வருகிறார்.

படத்தில் நடிப்பதற்காக நடிகர்கள், இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள் என்று எல்லாருடனும் எல்லாவிதத்திலும் அனுசரித்து காதலுக்காகத் தன்னைத் தியாகம் செய்து நடித்து வருகிறார்.

அண்மையில் வாரிசு நடிகரான 'கார்' நடிகருடன் இவர் ஒரு படத்தில் இணைந்து நடித்தார். இவரது அனுசரிப்புக்கள் நடிகரைக் கவர்ந்து விட, தான் நடிக்கும் நான்கைந்து படங்களில் தனக்கு ஜோடியாக இந்த நடிகையைச் சிபார்சு செய்துள்ளார் அந்த நடிகர்.

## நிர்வாண பூஜை செய்யும் ரவளி

பரம்பரை பரம்பரையாகப் பாம்புத்தோல் வியாபாரம் செய்து சம்பாதித்து வந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண், வெளிநாடு சென்று படித்துவிட்டு நாடு திரும்புகிறாள். அங்கு அவளது தாயாரின் உயிருக்கு ஆபத்து என்றவுடன் கதிகலங்கி நிற்கிறாள்.

மந்திரவாதி ஒருவரின் ஆலோசனையின் பேரில் தன் தாயாருக்கு வந்திருக்கும் ஆபத்து நீங்க கோவிலில் நிர்வாண பூஜை நடத்தி வழிபட உடன்படுகிறாள்.

பௌர்ணமியன்று இரவு 12 மணிக்குக் கோவில் குளத்தில் நீராடிவிட்டு உடலில் ஆடையின்றி தெய்வபக்தியுடன் ஆலயத்தில் அவள் வலம் வரும் போது, வழிப்போக்கன் ஒருவன் தனது உடையைக் கழற்றிக் கொடுத்து அவளை அணியச் சொல்கிறான். பின் மூட நம்பிக்கையைச் சுட்டிக்காட்டி அறிவுரை கூறி அவளது மானத்தைக் காப்பாற்றுகிறான்.

இக்காட்சி 'நாகலிங்கம்' படத்திற்காகப் படமானது. இதில் பணக்காரப் பெண்ணாக ரவளியும், வழிப்போக்கனாக பாபுகணேஷும் நடிக்கிறார்கள்.





ஷில்பா ஷெட்டி படம்: குஷி

சி னி வி சி ட்

## 'மழைத்துளி... மழைத்து...'

'ஒரு தலைராகம்' படத்தயாரிப்பாளர் ... மூலமாகத் 'தணியாத தாகம்' படத்தில் ... வாக அறிமுகமானவர் கே.சிருஷங்கர். அதன் ... 'ஊமையின் ராகம்' என்ற படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி, இயக்கி நடித்துள்ளார் சிருஷங்கர்.

இவர் இப்போது 'மழைத்துளி... மழைத்துளி...' என்ற படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி முக்கிய வேடமொன்றிலும் நடிக்கவுள்ளார்.

சமுதாயத்திற்கு உழைக்கும் ஒரு சுமை தாங்கியின் பிரச்சனையை மையமாக வைத்து உருவாகும் இந்தப் படத்தில் முற்றிலும் புதுமுகங்களே நடிக்கிறார்கள்.

## கார் பரிசு

ரோஜாவின் ஒவ்வொரு பிறந்தநாளின் போதும் அவருக்குப் பிறந்த நாள் பரிசாகக் கார் கொடுத்து வருகிறார் அவரது அன்புக் காதலரான செல்வமணி.



## மாதவன்-அப்பாஸ் இணைந்து நடிக்கும் 'மின்னலே...'

பிரசாந்த் நடித்த 'ஜீன்ஸ்', 'காதல் கவிதை', 'ஜோடி' ஆகிய படங்களைத் தயாரித்த 'மெட்ரோ ஃபிலிம்ஸ்' டாக்டர் முரளி மனோகர் தயாரிக்கும் புதிய படம் 'மின்னலே...'

இதில் மாதவன்-அப்பாஸ் இணைந்து நடிக்கிறார்கள். இவர்களுடன் புதுமுகம் ரீமா, நாகேஷ், விவேக் உட்பட பலர் நடிக்கிறார்கள்.

'ரிலாக்ஸ்' மொழிமாற்றுப்படத்தை அடுத்து மாதவன்-அப்பாஸ் இணைந்து நடிக்கும் இப்படத்தின் கதை பகை மற்றும் காதலைக் கொண்டு உருவாகிறது.

'மின்சாரக் கனவு' மற்றும் ஏராளமான விளம்பரப்படங்களில் ராஜீவ் மேனனுக்கு உதவி இயக்குநராகப் பணிபுரிந்த கௌதம் வாசுதேவ் இப்படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார்.

ஒளிப்பதிவாளர் புதியவரான ஆர்.டி.ராஜசேகர். இவரும் ராஜீவ்மேனனிடம் உதவி ஒளிப்பதிவாளராகப் பணியாற்றியவர்.

இசை புதியவர் ஹாரிஸ் ஜெயராஜ். இவர் ஏ.ஆர்.ரகுமானிடம் பலகாலம் கீ-போர்ட் பிளேயராக இருந்தவர்.

கதை-திரைக்கதை அமைத்து கௌதம் வாசுதேவ் இயக்கும் இப்படம் ஒரு குறுகிய காலத்தயாரிப்பாகும்.

## நாயகிகள் மாற்றம்

விஜய்-சூர்யா இணைந்து நடிக்கும் 'ப்ரெண்ட்ஸ்' படத்தில் விஜய்க்கு ஜோடியாக சிம்ரானும், சூர்யாவுக்கு ஜோடியாக கவுடசமியும் முதலில் நடிப்பதாக இருந்தது. இடையே ஜோதிகாவும் நடிப்பதாக அறிவிக்கப்பட்டது.

இப்போது விஜய்க்கு ஜோடியாக தேவயாணியும், சூர்யாவுக்கு ஜோடியாக ரமேகஸ்வரியும் நடிக்கிறார்கள். இவர்களும் மாற்றப்படாமல் இருந்தால் சரிதான்.

## 3500 அடி உயரப் பனிமலையில் விஜய்-சிம்ரான் டூயட்

விஜய்-சிம்ரான் ஜோடியாக நடிக்கும் 'ப்ரியமானவளே' படத்திற்காக ஒரு பாடல் காட்சியை சுவிற்சலாந்தில் உள்ள 200 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட தேவாலயத்தின் முன் அனுமதி பெற்று படப்பிடிப்பு நடத்தியுள்ளார்கள்.

'எனக்கொரு சிநேகிதி
சிநேகிதி
தென்றல் மாதிரி
நீயொரு பௌர்ணமி
பௌர்ணமி
பேசும் பைங்கிளி....'





## 'தெனாலி'யில் அப்துல் ஹமீட்

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கித் தயாரிக்க கமல் நடிக்கும் 'தெனாலி' படத்தில் பிரபல இலங்கை வானொலி அறிவிப்பாளரான 'மதுரக் குரலோன்' பி.எச்.அப்துல் ஹமீட் நடிக்கிறார்.

இலங்கையில் தயாரான 'கோமாளிகள்' படத்தில் சிறிய வேடமொன்றிலும், இலங்கை-இந்திய-உஸ்பெக்கிஸ்தான கூட்டுத் தயாரிப்பான 'சூர்யோதயம்' படத்தில் ஒரு காட்சியிலும் (படத்தில் ஹமீட்டின் மதுரக் குரலுக்குப் பதிலாக வேறொருவர் பின்னணி பேசியிருந்தமை மகா கொடுமை என்பது வேறு விடயம்) அப்துல் ஹமீட் ஏற்கனவே நடித்திருந்தார்.

இந்தியத் தொலைக்காட்சிகளில் தனது மதுரக் குரலால் நேயர்களை வசீகரிக்கும் ஹமீட், கமலின் வேண்டுகோளுக்கிணங்க 'தெனாலி'யில் உச்சக்கட்ட (கிளைமாக்ஸ் காட்சியில்) வருகிறார்.

சன் டி.வி.யில் பி.எச்.அப்துல் ஹமீட் நடத்தி வரும் பாட்டுக்குப் பாட்டு 250வது நிகழ்ச்சிக்கு ஹமீட்டின் அழைப்பின் பேரில் கமல் தலைமை தாங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## விக்ரமுக்கு 25 பவுன் தங்கச்சங்கிலி

கடந்த மாதம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஒரு விழாவில் 'சில்வர் ஸ்கிரீன்' என்ற பத்திரிகை சார்பில் சிறந்த தமிழ்த் திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

'வாலி' படத்திற்காக அதன் இயக்குநர் எஸ்.ஜே.சூர்யாவும் 'சேது' படத்திற்காக விக்ரமும் விருதுகளை நேரில் சென்று பெற்றார்கள். விருதுகளுடன் இவர்களுக்கு 25 பவுன் தங்கச் சங்கிலிகள் பரிசளிக்கப்பட்டன.

## சூர்யாவின் சொந்தப்படம்

'வாலி', 'குஷி' என இரண்டு வெற்றிப்படங்களை இயக்கியிருக்கும் எஸ்.ஜே.சூர்யா, இப்போது 'குஷி' படத்தை தெலுங்கில் இயக்கி வருகிறார்.

இதையடுத்து இவர் தமிழ்ப் படத்தை இயக்கவுள்ளார். இது இவரது சொந்தத்தயாரிப்பாக இருக்கும். இப்படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

இதைத் தவிர அஜித்-விஜய் இணைந்து நடிக்கும் படமொன்றையும் இயக்கத் திட்டமிட்டுள்ளார் சூர்யா.

## மினி சினி

- பிரபு இரட்டை வேடத்தில் நடித்து வரும் 'வண்ணத்தமிழ்ப் பாட்டு' படத்தைத் தயாரிக்கும் கே.பி.பிலிம்ஸ் அடுத்து கார்த்திக்-அப்பாஸ் இணைந்து நடிக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளது.
- விஜயகுமாரின் வேண்டுகோளுக்கிணங்க 'அன்புடன்' படத்தில் ஒரே பாடல் காட்சியில் நடனமாடும் மீனா இப்போது 'தெனாலி' படத்திலும் ஒரு சிறிய வேடத்தில் நடிக்கவுள்ளார்.
- மலையாள முன்னணி நடிகர்களான மோகன்லாலும், சுரேஷ்கோபியும் இணைந்து ஷாஜி கைலாஷ் இயக்கும் படத்தில் நடிக்கின்றனர். இப்படத்தின் மூலம் மலையாளப்படவுலகில் நுழைகிறார் பார்த்திபன்.
- முரளி-தேப்போலியன் இணைந்து நடிக்கும் 'மனுநீதி' படத்தில் தனக்கு ஜோடியாக விசித்ராவைப் போடுமாறு சிபார்சு செய்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டார் நெப்போலியன்.
- தமிழை விடத் தெலுங்கில் பிஸியாக நடித்து வரும் பிரகாஷ்ராஜ், இப்போது வங்காளத் திரைப்படம் ஒன்றில்நடித்து வருகிறார். இப்படம் விருதுக்காக எடுக்கப்பட்டு வருகிறது.
- விந்தியா நடிகையாக அறிமுகமானது 'ரிதம்' படத்தில். ஆனால் அப்படம் வெளிவரு முன் 'சங்கமம்' வெளியாகி விட்டது. இப்போது 'ரிதம்' படத்தில் இருந்து விந்தியாவை நீக்கி விட்டார்கள்.
- மணிரத்னம் தனது படங்களுக்கு வசனம் எழுதும்போது கண்ணாடிக்கு முன் பேசிப் பார்த்துத்தான் எழுதுவாராம். இதே போன்று, 'வாலி', 'குஷி' பட இயக்குநர் சூர்யாவும் தானே பேசிப்பார்த்துத்தான் வசனம் எழுதுகிறாராம்.
- பிரசாந்திற்கு ஜோடியாக 'விரும்புகிறேன்' படத்தில் நடிக்கும் ஸ்நேகா, ஏற்கனவே 'இங்கனே ஒரு நிலாப்பட்சி' என்ற மலையாளப்படத்தில் மான்ஸி என்ற பெயரில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

## சிநேகிதனால் சிக்கல்

மணிரத்னத்தின் 'அலைபாயுதே' படத்தில் இடம் பெற்ற பிரபலமான பாடல் தான் 'சிநேகிதனே சிநேகிதனே...' என்று தொடங்கும் பாடல்.

பிரபலமான பாடல்களின் முதல் வரியை படத்தின் பெயராகச் சூட்டுவது திரையுலகின் வழமையான நிகழ்வுகளில் ஒன்று. இப்போது 'சிநேகிதன்' என்ற பெயரில் 'முகவரி' பட இயக்குநர் ஒரு படத்தை இயக்கவுள்ளார்.

'காலமெல்லாம் காதல் வாழ்க' பட இயக்குநர் ஆர்.பாலு 'சிநேகிதனே' என்ற பெயரில் ஒரு படத்தை இயக்குகிறார். ஒரே பெயரில் இரு படங்கள் குறிப்பிட்ட சில காலத்திற்குள் வருமானால் சிக்கல்கள் தோன்றுமல்லவா?

எப்படி இந்தச் சிக்கலைத் தீர்க்கப் போகிறார்களோ?



## நடிக்க மறுக்கும் ஐஸ்

மன்சூர்கான் இயக்கத்தில் ஷாருக்கான், சந்திரசூர் சிங், ஐஸ்வர்யாராய் நடித்துள்ள 'ஜோஷ்' இந்திப்படம் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கிறது.

இப்படத்தின் படப்பிடிப்புகளின் போது, கதைப்படி ஐஸ்வர்யாராய், சந்திரசூர் சிங்கிற்கு உணர்ச்சி வசப்பட்டு உதட்டோடு உதடு சேர்த்து முத்தமிடுவதுபோல் காட்சி அமைப்பட்டிருந்தது.

அந்தக் காட்சியில் நடிக்க மறுத்து விட்டார் ஐஸ்வர்யாராய். அதுமட்டுமன்றி இனிமேல் அது போன்ற முத்தக்காட்சிகளில் நடிக்கமாட்டேன் என்று பிடிவாதமாக மறுத்தும் வருகிறார் ஐஸ்.





பிரசாந்த்-அமிஷா பட்டேல் படம் என்ன விலை அழகே

## காதோடு சொல்லுகிறோம்

ஜோதிமயமான அந்த தங்கை நடிகைக்கு படவாய்ப்புக்கள் குவிவதற்கு என்ன காரணம் தெரியுமா? இவர் நடிக்கும் படங்களின் நாயகன், இயக்குநர், தயாரிப்பாளர் ஆகியோரை அழைத்து அடிக்கடி விருந்து கொடுத்து அவர்களை 'குஷி'படுத்தி வருகிறாராம். இவரது அக்காவான முன்னாள் நடிகை. இதனால் தான் படவாய்ப்புகள் குவிகின்றனவாம்.

திருட்டு முழி முழிக்கும் சிஷ்யரை வைத்து விளையாட்டு ஒன்றின் பெயரில் படம் தயாரித்து வரும் நடிகர்-இயக்குநர், இப்போதைக்கு அந்தப் படத்தை வெளியிடுவதில்லை என்று முடிவு செய்துள்ளாராம். அவர் நம்பும் ஜோதிடர் சொன்ன ஆருடம் தான் அவரது இந்த முடிவுக்குக் காரணமாம்.

நாரதர் அடிக்கடி அழைக்கும் கடவுளின் பெயரைக் கொண்ட இயக்குநரின் சம்பந்தைய படமொன்றில் நடித்தார் 'ரசிக' நடிகையின் தங்கை. அப்போது இயக்குநருடன் அவருக்கு ஏற்பட்ட நட்பால், படவாய்ப்பின்றி வீட்டில் இருக்கும் தனது தாலி கட்டாத கணவருக்கு இயக்குநரின் புதிய படமொன்றில் ஹீரோ வாய்ப்பு வாங்கிக் கொடுத்துள்ளார்.

மத்திய தர குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களை மையமாகக் கொண்டு படமெடுத்து வரும் மூன்றெழுத்து இயக்குநர் அண்மைக்காலமாக ஒரு நடிகை மீது அன்பாக இருந்து வருகிறாராம். இந்த விஷயம் இயக்குநரின் இல்லாளுக்குத் தெரிய வரப் பெரிய பிரச்சனையாகி விட்டதாம். வேறொரு நடிகையுடன் கூடி வாழ முற்பட்டதால் இயக்குநரின் குடும்பத்தில் கோடிப் பிரச்சனைகள் ஏற்பட்டுவிட்டதாம்.

## சொந்தக் குரலில் பாடினார் பிரேம்

இப்போது நடிகர்கள் தமது படங்களில் சொந்தக் குரலில் பாடி வருவது வழக்கமானதொன்றாகி விட்டது. அண்மையில் பிரேமும் இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

பிரேம் தயாரித்து இயக்கிக் கதாநாயகனாக நடிக்கும் 'குரோதம்-2' படத்திற்காக சொந்தக்குரலில் இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார்.

'நினைத்தால் உன் கையில் உலகம் சேரும் எப்போதும் வெற்றிதான்' என்ற பாடலை ரீஎஸ்.மகாராஜனுடனும்,

'தங்கப் பூப்பந்தலில் வைரத்தேரோட்டவா கொஞ்சித் தாலாட்டவா!' என்ற பாடலை விஜய் ஜேசுதாஸ்-ஹரினியுடனும்,

சேர்ந்து பாடியுள்ளார் பிரேம். இப்பாடல்கள் தேவா இசையில் பதிவாகின.

முகப்பில் அஜய் ஜடேஜா ஐஸ்வர்யாராய் மாதவன்

# காதல்

இது....
கண்களின்
முதல்
தொடக்கம்.
*
இதயங்கள் இரண்டும்
புதுப்பிக்கப்படும்
புதிய புத்தகம்.
*
கறுப்பு, சிவப்பு–என
பேதம் இல்லாத
அழகிய...
பூக்கள்.
*
கொட்டும் மழையில்
நனைந்தாலும்.....
பாவம் செய்யாத
மழைத்துளிகள்.
*
வரண்ட
வாழ்க்கைக்கு.....
சோலைகள் காட்டும்...
சொர்க்கங்கள்.
*
இதயங்கள் மட்டும்
பேசிக் கொள்ளும்...
அதிசய தொலைபேசிகள்.
*
விழிகள் இரண்டாலும்
மொழிகள்
பல–பேசும்....
கொம்பியூட்டர்கள்.
*
கனவுகளால்
கதைகள்–பேசி
காதல் செய்யும்.....
கனவுப் பூக்கள்.

என் . எல் . முஸம்மில் -
புதிய காத்தான்குடி 06.

# பிரிந்த போது...

என்னை நீ...
பிரிந்த போது...
உலகை உணர்ந்தேன்!
**
சோகத்தின்....
ஆழத்தை அறிந்தேன்!
**
பிரிவின்....
துயரத்தை அடைந்தேன்!
**
வாழ்வின்....
அர்த்தத்தை–புரிந்தேன்!
**
கண்ணீரால்....
கர்ப்பம் தரித்தேன்!
**
கனவுகளால்...
தொலைந்து போனேன்!
**
தூக்கத்தை....
தூரமாக்கினேன்!
**
சொந்தங்களால்....
பிரிக்கப்பட்டேன்!
**
கல்வியை....
சூனியமாக்கினேன்!
**
மொத்தத்தில்....
சோகத்தின்.... இருப்பிடமானேன்!

ரிஸ்மி கோயா–
கெக்கிறாவ.



# கல்லறைகள்

அதோ!
பிரிவின்–சின்னம்
நிமிர்ந்து–நிற்கின்றது!
அது துயரத்தின்
நிரந்தர மாளிகை!
**
அது– வெறும்
நினைவுச்–சின்னமல்ல;
உறவுகள் வடித்த
உன்னத கோபுரம்!
**
உயிர்–அங்கு
உறங்கிக் கிடக்கின்றது,
துப்பாக்கிகளின்
துரிதத்தினால்!
**
பாருங்கள்....
தொலைந்த–உயிருக்காய்
உறவுகளால்–உண்டாக்கப்பட்ட
உன்னத சின்னத்தை!
**
எத்தனையோ–எண்ணங்களை
மாளிகையாக்க–நினைத்தவன்
இப்போ!
மௌனமாய்–மாளிகைக்குள்ளே
உறங்கிக் கிடக்கின்றான்!
**
அற்புதமான அவன்
சிந்தித்த–சிந்தனைகள் எல்லாம்.
இன்றும்–நிமிர்ந்துதான்
நிற்கிறது
கல்லறையாய்–அந்தக்
கடலின்–அருகே–தனிமையாய்.

கு.குணா-திருக்கோவில்.

# மகனே வந்துவிடு!

மகனே! உன்னை நான்
மடியில் வைத்து வளர்த்தேன்
மண்ணில் நானும்
மகிழ்வுடன் இருக்கவே!
**
நீ வீட்டுக்கு வரும் வரை
வீதியை நானும்
இமை மூடாமல் பார்த்திருப்பேன்
வந்தவுடன் நீ
சாப்பிடும் அழகை
நானும் ரசித்திருப்பேன்
நீயும் வாலிபனானாய்
நிம்மதியும் பறந்தது
நாட்டு நிலமையால் நீ
நாடு விட்டு நாடு போனாய்
நானும் தனிமையானேன்
நாள் தோறும் உன்னைக்
கனவில் கண்டு தவிக்கிறேன்!
நனவில் நீ வரமாட்டாயா?
விடிந்தால் ஏன் விடியுதோ
என்று வெறுப்படைகிறேன்;
நீ மீண்டும் என் கண்
முன் வந்தால் தான் எனக்கு
விடியல் வரும்.
தற்போது வயோதிபம் கூட
என் கண்பார்வையை மறைக்கின்றது;
உன்னை நான் என் கண்குளிர
பார்க்க நான் மறையுமுன்
வரமாட்டாயா? மகனே
வந்து விடு!

மெற்றில்டா மரியதாஸ்–
பண்டாரவளை.

# தேன் கிண்ணம்



# இதைத்தானா காதலென்பது...?

ஓ...! தென்றலே
உனக்கென்ன தெரியும்?
நீயோ
ஆக்ராவில் அமர்ந்து கொண்டு
மும்தாஜின் வருகைக்காய்
முகாரி பாடிக் கொண்டிருக்கிறாய்!
**
நானல்லவா இங்கு
இருவிழிகள் நனைந்தபடி
அகமெங்கும் சோகமே நிலை கொள்ள
மயானத்தினருகே
காலனின் வருகைக்காய்
காத்திருக்கிறேன்!
**
ஏனெனில்....
இதோ பார்!
அவள் அழைப்பிதழ்
அனுப்பியிருக்கிறாள்.
நாளை இன்னொருவனோடு
அவளுக்கு மணக்கோலமாம்!
தென்றலே நீயாவது சொல்
இதைத்தானா காதலென்பது...?

நியாஸ் முஸாதிக்–
கிண்ணியா–05.

# நெருஞ்சி முள்!

ஊரெல்லாம் விழாக் கோலம்
உறவெல்லாம் நிலாக் கோலம்
பாரெல்லாம் பசுங் கோலம்
பாவம் எம் மனது பாலைநிலம்!
**
சீர் வரிசை காண்பதற்கு....
'சீவன்' முடிவிற்கு வந்து விடும்
கார் காலம் எம்வாழ்வில்....
காலம் முழுதும் நிலை கொள்ளும்!
**
போர் சூழ்ந்த காலமென்றே....
'போக்கிரிகள்' பொய்யுரைப்பார்,...
தேரோடும் வீதியிலே எங்கள்
'தாலி' தரும் காலமெப்போ?
**
போர் ஓயப் போவதில்லை!
பாவையர் எமக்கு வாழ்வுமில்லை!
நேர்வழியுமெனக் கில்லை....
'நெருஞ்சிமுள்' மேல் எம்வாழ்வே!!!

கயல்வண்ணன்–வவுனியா.

# பேனா நண்பர்கள்




பெயர்: கே. அமலசேகர்
வயது: 23
முகவரி: 96ஏ,
ஸ்ரீ விக்கிரமபுர,
மட்டக்குளி, கொழும்பு-15.
பொழுது போக்கு:
கிரிக்கெட்.



பெயர்: எஸ். சிவரஞ்சனி,
வயது: 18
முகவரி: தவசிக்குளம்,
கண்டிவீதி, வவுனியா.
பொழுது போக்கு:
வழமையானவை.

# கனவு நாயகன்களும் காதல் மனைவிகளும்



இளம் வயதினரின்–குறிப்பாக இளைஞிகளின் மனங்களில் கனவு நாயகன்களாக வலம் வருபவர்கள் விஜய், அஜித், பிரசாந்த், சூர்யா. இவர்களுடன் அண்மையில் 'அலைபாயுதே' மாதவன் ஆகியோர்.

இவர்களில் பிரசாந்த், சூர்யா தவிர்ந்த ஏனைய மூவரும் திருமணம் செய்து விட்டார்கள். இந்த மூவரது திருமணத்தில் உள்ள ஒற்றுமை யாதெனில் மூவரும் காதலித்துத்தான் கைப்பிடித்துக் கொண்டார்கள்.

கனவு நாயகன்கள், காதல் மனைவிகளுடன் கல்யாணத்தில் இணைந்திருக்கும் காட்சிகள் தான் இவை. ■

'பொது மேடையில் பேசுவது எப்படி?' என்று பாடம் எடுத்த மாதவனிடம் மாணவியாக அறிமுகமான சரிதா. மணமேடையில் மாதவனுடன்.



இந்த 'ரசிகன்' நாயகனின் ரசிகையாக இருந்தவர் சங்கீதா. இங்கே கணவன்-மனைவியாக.



'அமர்க்களம்' படத்தில் ஜோடி சேர்ந்த அஜித்-ஷாலினி, நிஜத்திலும் அமர்க்களமாக ஜோடி சேர்ந்து விட்டார்கள்.

# இந்தவாரம் உங்கள் பலன்

16.07.2000 முதல் 22.07.2000வரை

ஜோதிடர் 'கான்ர'

**மேடம் :**
க்காலமாற்றம்' தொழில்நிலை உயர்வு, தெளிவான சிந்தனை, புதிய நண்பர்களின் வருகை, நோய்துன்ப மாற்றமும், கல்வி பரீட்சை முயற்சிகள் தொடருதல். பணச்செலவும், வரவும், காணப்படும். கரும விடயம் வெற்றியைக் கொடுக்கும், பரணிக்காரருக்கு சிறப்பு உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 16, 20.

**இடபம் :**
மனதில் உடலில் தளர்ச்சி தெரியும். தொழில் வகை பணவசதி வந்து சேரும். வாகனப்பயணம், உறவினரின் நிலைப்பாடு கவனம். நோய் துன்ப அமைப்பு நிவர்த்தி பெறும். தேவை உள்ள பண செலவுகள் அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 20, 22.

**மிதுனம் :**
இரும்புத் தொடர்புடனான தொழில் செய்பவர்கள் கூடிய இலாபம் பெறுவார்கள். தடைப்பட்ட விட யங்கள் தொடரும். நோய்துன்பம் நிவர்த்தி பெறும். புதிய பல விடயங்கள் தொழில் நடைமுறைக்கு வரும். வாகனப்பயணம் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : இளம் பச்சை: எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

**கடகம் :**
பணவரவு காணப்படுவதுடன், உறவினர் வருகையும் பொருள் சொத்துக்களும் பெருகும். கல்வி பரீட்சை முயற்சிகள் மேலோங்கிக் காணப்படும். முக்கியமாக திருமண முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். பூசககாரர் நல்ல விடயங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 21, 23.

**சிம்மம் :**
புதிய இடமாற்றமும் மனதில் தெளிவும், பலரின் உதவிகள் பெருமைக்குரிய மதிப்புக்கள் வந்து சேரும். பண உதவிகள் பெரிய வெற்றிவாய்ப்புக்கள் தோன்றும். புதிய நண்பர்களின் சேர்க்கை அமையும். மக நட்சத்திரர் இடமாற்றத்தை எதிர்கொள்வர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 19, 21.

**கன்னி :**
குடும்பச்சுமையும் வேலைப்பழு நிலையும் காணப்படும். தூர இடத்து செய்திகள் வந்து போகும். தொழிநுட்தொழில் செய்வோருக்கு பெரிய பதவிகள் கிடைக்கும். அத்த பெண்களுக்கு மனச்சந்தோஷமான நிலை அமையும்.
அதிஷ்ட நாட்கள் : செவவாய்,வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

**துலாம் :**
குடும்பத்தில் பிரச்சனைகள் வந்து போகும். காதல், திருமண விடயங்கள் மனதில் பிரசசனையைச் சுக்கிரன் கொடுப்பார். பரீட்சை கல்விப் பகுதி சிக்கலாக காணப்படும். தெளிவாக இவ் வாரம் செயற்படவும். சுவாதிப் பெண்கள் பெரிய அவமானங்கள் தலையிடிகளை எதிர் கொள்வர்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : மருண்கலர்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 18, 21.

**விருட்சிகம் :**
புதிய வெற்றிகள் கரும விடயத்தில் அமையும். எதிர்ப்புகள் நீங்கி, கல்வி தொழில் உயர்வுக்கு கொண்டு செல்லும். பணவசதி உதவிகள் நண்பர்களால் அமையும். கேட்டை பெண்களுக்கு வசதிகள் கூட கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 17, 19.

**தனுசு :**
உடலில் உள்ள நோய் துன்பம் மாறிவரும். செலவுகள் குறையும். தடைகளாக உள்ள முயற்சி சீரடையும். மனதில் புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். உறவினர் வருகை காணப்படும். மூல நட்சத்திரர் மன அமைதிபெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 16, 20.

**மகரம் :**
புதிய வசதிகள் கிடைக்கும். கோபகுணங்கள் சாந்தமடையும். ஆலயதரிசனமும் கிடைக்கும்.கல்வி, உயர்ச்சியும் அமையும். திருவோண குடும்பப் பெண்களுக்கு பண வரவு கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 17, 22.

**கும்பம் :**
செயல்பாடுகளில் படுதோல்வி ஏற்படும். வெளியாட்களின் பழிச் சொல்வரும். திருமணத்தடைகள் வரும். தொழில் இடத்தில் கவனமாக இருக்கவும். பணவரவு சுமாராக இருக்கும். அவிட்ட பெண்கள் அவமாத்தைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : சனி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 22, 20.

**மீனம் :**
பெண்களுக்கு மகிழ்ச்சியான விடயங்கள் நடைபெற்று முடியும். நணபர்களின் வரவு அமையும். புனித பயணம் தொடரும். பெரியோரின் ஆசிர்வாதநிலை கிடைக்கும். கைத்தொழில் செய்வோர் இலாபமடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : கபில வர்ணம்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

# நில்–கவனி–முன்னேறு

எப்போது பார்த்தாலும் வருத்தப்பட்டுக் கொண்டும் குறை கூறிக் கொண்டும் இருப்பவர் மிகப் பெரிய பதவியில் இருப்பதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

பெரிய தோல்விகள், நஷ்டங்கள், அவமானங்கள், சோதனைகள் போன்றவைகள்



குறுக்கிடும் போதும் சந்தோஷமாக சிரித்துக் கொண்டு தன் வேலையில் சிறிது கூட ஆர்வத்தை இழக்காமல் முழு கவனத்துடன் தன் வேலையை தொடர்ந்து செய்துகொண்டு வருப வரை அவருடைய உயர் அதிகாரிகள், சக ஊழியர்கள், அவனுக்குக் கீழ் வேலை செய்து வருபவர்கள் போன்ற அனைவரும் விரும்பி அவனை மதித்து அவனிடம் மரியாதையுடன் நடந்து கொள்ளுவார்கள்.

தைரியமாக மனம் விட்டு சிரித்து அனைவரிடமும் கல கலப்புடன் பழகி தன் பொறுப்புக்களை மிக குறுகிய காலத்தில் மிகச் சிறப்புடன் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள் நிறைந்திருக்கும் தொழில் நிறுவனத்திற்கு நிறைய லாபம் கிட்டும்.

சந்தோஷமாக சிரித்துக் கொண்டு வேலையைச் செய்து வருபவர்கள், சலிப்புடன் அழுது கொண்டு வேலை செய்து வருபவர்களை விட, பல மடங்குகள் அதிகமான வேலையை மிக நல்ல முறையில் செய்து முடிக்கும் திறமையைக் கொண்டிருப்பார்கள். இவர்கள் தங்கள் வேலையை நன்கு செய்து வருவதினால், இவர்களுக்கு சுலபமாக வேலை உயர்வு கிட்டுகிறது. இப்படிப்பட்டவர்கள் சகல வசதிகளையும் பெற்று சிறப்புடன் வாழ்ந்து வருவார்கள். அனைத்திற்கும் வருத்தப்பட்டு வருபவன், தான் வேலை செய்து வரும் நிறுவனத்துக்கு, ஒரு பெரிய சுமையாகத்தான் இருப்பான்.

எந்த வீட்டில் வாழ்ந்து வருபவர்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறார்களோ, அந்த வீட்டில் செல்வம், ஆரோக்கியம், அன்பு, பாசம், அமைதி போன்றவைகள் நிறைந்திருக்கும். அனைத்திற்கும் வருத்தப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் நிறைந்திருக்கும் வீட்டில் வறுமை நிரந்தரமாக குடி கொண்டிருக்கும். ■

லேடீஸ் ஸ்பெஷல்


லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## சமையலறைப் பாதுகாப்பு

சமைப்பது எப்படி ஒரு கலையோ அதே போலத்தான் சமையலறையைப் பராமரிப்பதும் ஒரு கலை.

உங்கள் தோழிகள் வீட்டிற்கு வந்தவுடன் சமையலறையைத் தான் நோட்டமிடுவார்கள். சமையலறையை வைத்தே உங்களை எடை போட்டு விடுவார்கள்.



சமையலறைக்குச் சொந்தக்காரர்களான எறும்பு, கரப்பான்பூச்சி, எலி போன்றவற்றின் தொல்லைகள் இருக்கவே கூடாது. இவை பால் இனிப்புப் பண்டங்களை ஒரு வழி பண்ணிவிடும்.

எறும்பு, பூனைப் பட்டாளங்கள் வீட்டை தம் பங்கிற்கு ஒரு கை பார்த்து விடும்.

இந்தத் தொல்லைகளைச் சமாளிக்க நோய்க்கிருமிகளை அழிக்கும் டெட்டோல் அல் லது சவ்லோன் கரைசலை விட்டுக் கழுவி விட வேண்டும்.

காய்கறி வெட்டிய கத்தியை மறக்காமல் கழுவி விட்டால் பக்டீரியாவின் படையெடுப்பைத் தடுத்து விடலாம்.

சமையலறையில் தண்ணீர் சிந்தாமலே, தேங்கிக் கிடக்காமல் இருந்தாலோ இருந்தால் நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபடலாம்.

இரவு உணவில் மீதமிருந்தால் உடனே அப்புறப்படுத்துவது தான் நல்லது. ஆரோக்கியத்திற்கும் அதுவே வழி.

காய்கறிகளின் கழிவுகளை சமையலறையின் மூலையில் சேர்த்து விடாமல் உடனே அகற்றி விட்டால் பூச்சிகள் உங்கள் வீட்டுப் பக்கம் வரவே வராது.

பிடித்த சேலை உடுத்தி ச்மைக்க நேர்ந்தால் கண்டிப்பாக ஏப்ரான் அணிந்து கொள்ளுங்கள். எண்ணெய்படும் தொல்லையிலிருந்து தப்பித்து விடலாம்.

பழவகைகளை எடுத்துச் சாப்பிட்ட பின் மீதியை ஓரமாக வைத்து விட்டு பிறகு மீண்டும் பழங்களை எடுக்க மறந்திருப்பீர்கள். அவை அழுகி அவற்றில் இருந்து சாறு வெளியேறி, அங்கே எறும்புப் படைகள் படை யெடுக்கும்.

இந்தத் தொல்லையை தவிர்க்க, பழங்களை ஓரமாக வைக்காமல் கண்ணில் படும்படியாக வைத்து விடுங்கள்.

இரவில் தூங்குவதற்கு முன்பு சமையலறை சுத்தமாக இருக்கிறதா? என்று ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டு தூங்கச் செல்லுங்கள்.

## நீங்களும் அழகியாகலாம்



மேக்கப் ஒரு பக்கம் அழகைக் கொடுத்தாலும் கூடுதல் அழகைக் கொடுப்பது தோல் தான்.

என்ன அதை எப்படி பராமரிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்து விட்டதா?

தோல் வியாதி இருப்பவர்கள் சோப்பை தூக்கி எறிந்துவிட வேண்டும் கடலைப்பருப்பு, பாசிப்பருப்பு, இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து மாவாக்கி தேய்த்துக் குளிக்க வேண்டும்.

தோல் வியாதி இருப்பவர்கள் கண்டிப்பாக அசைவ உணவைத் தொடவே கூடாது. அதே மாதிரி உப்பு, புளி, அயிட்டங்களையும் தான்.

என்னால் அதையெல்லாம் சேர்க்காமல் இருக்க முடியாது என்று சாப்பிட்டால் நீங்கள் அழகியாக முடியாது.

சரும வியாதி உள்ளவர்கள் இப்படிப் செய்து பாருங்கள் வேப்பெண்ணெயை உடல் முழுக்கத் தடவி சூரிய ஒளியில் 30 நிமிடம் நின்று பிறகு குளித்து விடுங்கள். இது பாட்டி வைத்தியமாக இருந்தாலும் கை கண்ட மருந்து தெரியுமா?

தோல் பளபளப்புக்கு இன்னொரு ஐடியாவும் உண்டு. விளக்கெண்ணெய், தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய் மூன்றையும் சம அளவில் கலந்து அக்கலவையை காலை, மதியம், இரவு என மூன்று வேளைக்கு ஒரு மேசைக்கரண்டி சாப்பிட்டு வந்தால் நீங்கள் அழகிப் போட்டிக்குச் செல்லத் தயாராகி விடலாம்.

இது ஒரு மூலிகை பவுடர், அதன் பலனைப் பார்த்து நீங்களே அசந்து போவீர்கள்.

வேப்பிலை, அருகம்புல், மஞ்சள், ஆடு தின்னா பாலை இலை, நான்கையும் சம அளவு எடுத்து காயவைத்து பொடியாக்கி தினமும் காலையில் குளிப்பதற்கு முன்பு சிறிது தேங்காய் எண்ணெய் கலந்து உடலில் தேய்த்து பிறகு குளித்து வந்தால் சரும நோய்கள் ஓடி ஒளிந்து விடும். இந்த சொறி, சிரங்கு இத்யாதி நோய்களெல்லாம் வரவே


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HW

பெயர்:...............................

முகவரி:...............................

...............................

தொழில்:...............................

கையொப்பம்:...............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22.07.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 46 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

பிளெய்லருடன் தான் கொண்டிருந்த உறவு தொடர்பாக அவனுடைய மனைவி கேற் தொலைபேசியில் அவளுடன் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டிருந்தாள். இதனால் குழப்பமடைந்த மோனிக்கா வாஷிங்டனை விட்டே வேறு எங்காவது ஓடிப் போய் அமைதியாக வாழலாம் என்று கூட முடிவெடுத்தாள்.

மோனிக்காவை ஆட்டிப்படைக்கும் லிண்டா ட்ரிப்பிடம் ஆலோசனை கேட்க வேண்டும் என அவள் நினைத்தாள். அதே போல் ஒரு சிற்றுண்டிச் சாலைக்கு லிண்டாவை அழைத்தாள். தன்னுடைய அப்போதைய எண்ணம் பற்றி லிண்டாவிடம் கூறி அழுதாள்.

"வெள்ளை மாளிகை வேலையும் வேண்டாம். அந்தப் பெரிய மனிதர் கிளின்ரனுடனான உறவும் வேண்டாம். இங்கு இந்தச் சிக்கலில் இருந்து விடுபட்டு இந்தப் பெரிய நாட்டின் எங்காவது ஒரு மூலையில் சென்று அமைதியாக வாழத்தான் விரும்புகிறேன் நான் எல்லா உறவுகளையும் உதறியெறியப் போகிறேன்." என்று அழுதழுது கூறினாள்.

மோனிக்காவின் புதிய திட்டத்தை அறிந்த லிண்டா துணுக்குற்றாள். தான் போட்ட திட்டம் பாதியிலேயே குலைந்து சிதைந்து விடுவது போல் அவளுக்குப்பட்டது. ஆகவே இனிமேல் தாமதியாமல் காரியத்தில் இறங்க வேண்டும் என்று லிண்டா தீர்மானித்தாள்.

"முட்டாள்தன்மாக எதையும் செய்து விடாதே. காரியம் கைகூடிவரும்போது எல்லாவற்றையும் போட்டு உடைத்து விடாதே. சற்றுப் பொறுமையாக இரு. இன்னும் சில நாட்களில் நீ வெள்ளை மாளிகைக்குள் நுழையத்தான் போகிறாய். மீண்டும் கிளின்ரனுடைய உறவு உனக்கு கிட்டத்தான் போகிறது" என்று மோனிக்காவுக்குப் புத்திமதி சொன்னாள்.

லிண்டா ட்ரிப்பிடம் உள்ள ஆளுகையும் அவள் கையாளும் தந்திரோபாயங்களும் மோனிக்காவை இலகுவில் அடிமைப்படுத்தி விடுகின்றன. ஆகவே லிண்டாவினுடைய வார்த்தைகள் மோனிக்காவுக்கு வேதவாக்காக இருந்தன.

இந்த உரையாடல் நடந்து இரு நாட்களின் பின்னர் மோனிக்காவை தான் சந்திக்க விரும்புவதாக லிண்டா ட்ரிப் தொலைபேசியில் கூறினாள். இருவரும் அதே சிற்றுண்டிச்சாலையில் சந்தித்தனர்.

"மோனிக்கா உனக்கேற்ற மாதிரியான ஒரு தொழில் வாய்ப்பு வெள்ளை மாளிகையில் உனக்காகக் காத்திருக்கிறது. வெள்ளை மாளிகையில் தேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலில் உனக்கேற்ற பதவியொன்று காத்திருக்கிறது. உடனடியாக உனது சேவை அனுபவத்தையும் தகுதிகளையும் இணைத்து விண்ணப்பத்தை அனுப்பிவை" என்று மோனிக்காவிடம் லிண்டா ட்ரிப் கூறினாள். இச்சம்பவம் மார்ச் மாதம் மத்தியில் இடம் பெற்றது.



பிளெய்லருடன் மோனிக்கா

லிண்டாட்ரிப் இதே கால கட்டத்தில் 'ஸ்பிக்கி' என்ற புனைபெயரில் 'நியூஸ் வீக்' வார ஏட்டில் எழுதிவரும் மைக்கேல் இனிகொவ் என்ற நிருபரைச் சந்தித்தாள்.

ஜனாதிபதி கிளின்ரன் அரன்சன்சாஸ் மாநிலத்தின் ஆளுநராக இருந்தபோது அவருடைய காரியதரிசியாக இருந்த பௌலா ஜோன்ஸ் என்ற பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி இம்சித்தார் என்று மூன்று



வருடங்களின் பின்னர்-1994 மே, மாதத்தில் பௌலா ஜோன்ஸ் கிளின்ரன் மீது வழக்கொன்றைத் தொடுத்தாள். விட்டில் றொக் என்ற ஹொட்டலில் வைத்து இச்சம்பவம் நடைபெற்றதாக அவ்வழக்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டை எதிர்த்துக் கிளின்ரன், இது பொய்யான குற்றச்சாட்டு என்று வாதாடினார். அது மட்டுமல்லாமல் ஒரு சாதாரண அமெரிக்க நாட்டுக் குடியானவர் அந்நாட்டின் ஜனாதிபதியாகவுள்ள ஒருவர் மீது வழக்குத் தொடுப்பது சட்டப்படி குற்றமாகும். என்றும் சவால் விட்டார். இரு தரப்பு சட்டத்தரணிகளும் கலந்துரையாடி நீதிபதிக்கு தங்களுடைய கருத்தினை வெளியிட்டனர். இந்த ஆரம்பநிலையில் விசாரனை செய்த நீதிபதி பௌலா ஜோன்ஸின் வழக்கை நிராகரித்தார்.

'நியூஸ் வீக்' நிருபரான 'ஸ்பிக்கி' என்ற புனைப் பெயரில் எழுதி வரும் மைக்கேல் இசிதோஃப், பௌலா ஜோன்ஸின் வழக்கு தொடர்பாக உள்ளந்தரங்கம் யாவற்றையும் கிண்டிக் கிளறி பத்திரிகையில் தொடராக எழுதி வந்தார். பரபரப்பான இத் தொடர் மூலம் இசிகோஃப் பிரசித்தி பெற்றார். இத்துடன் மட்டும் நின்றுவிடாமல் கிளின்ரனுடன் தொடர்பு கொண்டு இருந்ததாகக் கூறப்பட்ட கத்தலின் வில்லி என்ற பெண்ணையும் தேடிப் பிடித்து அவளுடைய போட்டிகளையும் பதிவு செய்து பத்திரிகையில் வெளியிட்டார். ஜனாதிபதி கிளின்ரன் தன்னுடைய விருப்பத்திற்கு மாறாக தன்னை முத்தமிட்டார் என்பது அவளுடைய கூற்று.

ஓவல் அலுவலகத்தில் நடைபெற்ற பலாத்கார இச்செயலினால் தான் அலங்கோலமாக அந்த அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது லிண்டா ட்ரிப் கண்டதாகவும் அவள் தெரிவித்திருந்தாள். அக்காலகட்டத்தில் லிண்டா ட்ரிப் வெள்ளை மாளிகையில் பணி புரிந்தாள்.

மோனிக்கா-கிளின்ரன் அந்தரங்க உறவுகள் பற்றி போதுமான தகவல்களைத் திரட்டியிருந்த லிண்டா ட்ரிப், இசிகோஃப் என்பவரை அடிக்கடி சந்தித்தாள். ஏற்கனவே கிளின்ரன் மீது தனக்கிருந்த வெறுப்புணர்ச்சியை வெளிப்படுத்திப் பழிவாங்க ஏற்றவொரு சாதனமாக மைக்கேல் இசிகோஃப் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில், அந்த எழுத்தாளரை அடிக்கடி லிண்டா ட்ரிப் சந்தித்தாள்.

வெள்ளை மாளிகையில் தொழிற் பயிற்சிக்காக சேர்ந்து கொண்ட ஓர் இளம் பெண்ணுடன் கிளின்ரன் தகாத உறவுகள் வைத்திருப்பதாகவும் அதுபற்றி தான் முழுமையான தகல்களையும் திரட்டிக்கொண்டு வருவதாகவும் லிண்டா ட்ரிப் தெரிவித்தாள். ஆனால் அந்த இளம் பெண்ணின் பெயரை இசிகோஃப்பிடம் அவள் முதலில் கூறவில்லை. சந்தர்ப்பம் வரும் போது முழுவிபரங்களையும் தருவதாகவும் இவற்றைப் பத்திரிகையில் பிரசுரித்து போதுமான நன்மையடையலாம் என்றும் லிண்டா அவனிடம் கூறி மேலும் அவனுடைய ஆர்வத்தைத் தூண்டிவிட்டாள்.

இசிகோஃப்பும் லிண்டாவும் ஏற்கனவே வெள்ளை மாளிகை தகவல் பிரிவில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்கள். ஆகவே கிளின்ரனின் பல வீனங்களை ஓரளவு தெரிந்துவைத்திருந்தனர்.

கத்தலின் வில்லியுடன் ஜனாதிபதி முறை தவறி நடந்து கொண்ட சம்பவம் தொடர்பாக லிண்டா ட்ரிப் பின்னர் மோனிக்காவிடம் தெரிவித்தாள். இவ்விருவரும் அடிக்கடி சந்திக்கும் போது கத்தலின் வில்லி பற்றி லிண்டா

### தொடங்கும் பொறி வலை

முன்னுக்குப் பின் முரணான விடயங்களை மோனிக்காவிடம் கூறத்தலைப்பட்டாள் இதனால் இவ்விருவருக்குமிடையில் பல தடவைகள் வாக்குவாதங்கள் ஏற்பட்டன. பென்டகன் அலுவல்கள் தொடர்பாக மோனிக்கா ஆசிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தாள் என்பதை ஏற்கனவே தெரிவித்திருந்தோம். ஏப்ரல் மாத மத்தியில் அவள் வாஷிங்டன் திரும்பியதும் ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் பெட்டிக்கியூரியை அணுகி கிளின்ரனைத் தான் சந்திக்க வேண்டும் என்றும் அதற்கான ஏற்பாட்டைச் செய்து தரும்படியும் கேட்டிருந்தாள். ஆனால் அத்தகைய சந்தர்ப்பம் எதுவும் அவளுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே 'எங்கோ ஏதோ ஒரு தவறு நேர்ந்து விட்டது என்று கருதலானாள்.

ஏப்ரல் 28ம் திகதியன்று வெள்ளை மாளிகை தகவல் பிரிவுக்குத் தானாகவே ஒரு விண்ணபபத்தை எழுதி அவளுடைய பிரிவின் தலைவர் கென்பேக்கன் அவர்கள் மூலம் அனுப்பிவைத்தாள். ஜனாதிபதியின் பிரதி உதவியாளர் லோறி பேக் ஒஃப் என்பவருக்கு கென், மோனிக்கா பற்றி பலவாறாக சிறப்பான முறையில் சிபாரிசு செய்திருந்தார். மீண்டும் பெட்டிக்கியூரியைக் கண்டு தன்னுடைய புதிய திட்டத்தைப் பற்றிக் கூறுவதற்கு முற்பட்ட போது லிண்டா ட்ரிப் தலையிட்டுத் தவிர்த்து விட்டாள். ஜனாதிபதி பல சிக்கல்களில் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறார். இப்பொழுது அவரை தொந்தரவு செய்யாதே. சற்றுப் பொறுத்திரு என்றார்.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**வத்துகாமம் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| --- | --- |
| இவர்தான் | திருமதி.இராஜலிங்கம், இல.56/18, பின்னலந்த வீதி, வத்துகாமம். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பாப்பா முரசு சிறுகதை

# புளியமரம் சாட்சி

பெரும் செல்வந்தர் ராமனுக்கு மிகவும் வயதாகிவிட்டது. எனவே தேவாலயங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதில் இன்பம் கண்டார்.

ஒருநாள் வெளியூர் சென்று திருத் தலங்களில் உள்ள தெய்வங்களை வழி பட்டு விட்டு காட்டு வழியாக ஊர் திரும் பினார். அப்போது அவருக்குத் துணை யாக பக்கத்து வீட்டு வாலிபன் ஆசான் என்பவன் வந்தான்.



பக்கத்து வீட்டு வாலிபன் என்பதால் அவனைநம்பி தன்னிடம் உள்ள பண முடிச்சை பத்திரமாக வைத்துக் கொள்ளச் சொன்னார்.

"நீ இந்தப் பணத்தை எடுத்துக் கொண்டு ஊருக்குச் செல் எனக்கு பக்கத்து ஊரில் ஒரு வேலை இருக்கிறது. அதை முடித்துக் கொண்டு இரண்டு நாட்களில் திரும்பி வருகிறேன். அப்போது இந்தப் பணத்தை வாங்கிக்கொள்கிறேன்." என்றார்.

"சரி பெரியவரே! இந்தப் புளியமரம் சாட்சியாக நான் இந்தப் பணத்தை பத்திர மாக வைத்திருந்து உங்களிடம் கொடுப்பேன்," என்றான் ஆசான்.

இரண்டு நாட்களுக்குப் பின் ஊர் திரும்பிய பெரியவர், ஆசானிடம் சென்று பணத்தை கேட்டார். அதற்கு அவன்,

"பணமா? ஏது பணம்? என்ன உளறு கிறீர்?" என்று சப்தம் போட்டான். பெரியவர் எவ்வளவோ சொல்லியும் 'என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை,' என்று சொல்லிச் சாதித்தான்.

நொந்து போன பெரியவர் பீர்பாலிடம் சென்று வழக்கைச் சொன்னார். ஆசானை கூப்பிட்டு விசாரித்தார் பீர்பால்.

மறுபடியும் பணத்திற்கும், எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொல்லி சாதித்தான் அவன்.

"சரி பெரியவரே! நீங்கள் இவனிடம் பணத்தைக் கொடுத்ததற்கு யார் சாட்சி?" என்று கேட்டார் பீர்பால்.

"புளியமரம் தான்சாட்சி," என்றார் பெரியவர்.

"அப்படியானால் நீங்கள் போய் அந்தப் புளியமரத்தை சாட்சி சொல்ல அழைத்து வாருங்கள் பெரியவரே," என்றார் பீர்பால்.

நொந்து போன பெரியவர். "ஐயா! நீங்கள் நியாயமாகத் தீர்ப்பளிப்பீர்கள் என்று தான் தங்களிடம் வந்தேன். நீங்களே இப்படி புளியமரத்தைஅழைத்து வரச் சொன்னால் நான் எப்படி அழைத்து வர முடியும்?" என்று புலம்பினார்.

குஷியான இளைஞன், "அந்தப் புளியமரம் மட்டும் இங்கு வந்து சாட்சி சொன்னால் நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்", என்றான்.

பீர்பால் அவனை உற்றுப் பார்த்தார். மனதுக்குள் சந்தேகம் எழுந்தது.

பிறகு "பெரியவரே! அந்தப் புளியமரத்தி டம் பீர்பால் சாட்சி சொல்ல அழைத்தேன் என்று சொல்லுங்கள் நிச்சயம் வரும்," என்றார்.

நொந்து போன பெரியவர், பீர்பால் சொற்படி மரத்தை தேடிப்போனார். வெகு நேரம் ஆகிவிட்டது. பெரியவர் வந்த பாடில்லை.

"என்ன இந்தப் பெரியவரை இன்னும் காணவில்லை... ஒருவேளை புளியமரம் மிகத் தொலைவில் இருக்குமோ..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

அதற்குள் பக்கத்து வீட்டுக்காரன் "அந்தக் காடு இங்கிருந்து சுமார் ஐந்து மைல் தூரத் தில் இருக்கிறது. அங்கு நிறைய புளியமரங்கள் இருக்கிறது. எந்தப் புளிய மரத்தை அவர் சாட்சி சொல்ல அழைத்து வரப் போகிறாரோ?. ஐயோ பாவம்," என்று ஏளனம் செய்தான்.

"ஓ... அப்படியா! அது எப்படி உனக்குத் தெரியும்" என்றார் பீர்பால்.


சட்டென்று தன் நாக்கை கடித்துக் கொண்டான்.

அப்போது அங்கு வந்த பெரியவர், "ஐயா! எனக்கு எந்த புளியமரம் என்ற அடையாளம் தெரிய வில்லை, அதனால் நான் சாட்சிக்கு அழைத்து வரமுடியவில் லை," என்றார்.


"கவலைப்படாதீர்கள் அந்தப் புளியமரம் இருக்குமிடம் நம் நண்பருக்கு தெரிந்திருக் கிறது. என்ன சொல்கிறாய் இளைஞனே. இனிமேலும் நீ பொய் சொன்னால் கடும் தண்டனை கிடைக்கும்," என்றார்.

தன் வாயாலே தான் மாட்டிக் கொண் டதைக் கண்ட வாலிபன், பீர்பாலின் காலில் விழுந்து. "என்னை மன்னித்து விடுங்கள் ஐயா, நான் பணமுடிப்பைக் கொடுத்து விடுகிறேன்," என்று கெஞ்சினான்.

பணமுடிப்பை பெற்றுக் கொண்ட பெரி யவர், பீர்பாலை வாழ்த்தி விடைபெற்றார்.



பணக் கட்டுக்களை எங்கோ வைத்து விட்டு, ஞாபகமறதியால் ஓடித்திரியும் இந்தத் தொழிலதிபருக்கு பணக்கட்டுக்கள் இருக்கும் இடத்தை அடைய சரியான வழியைக் காட்டுங்கள்.



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **22.07.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **351**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 349


**பரிசுக்குரியவர்:**
பே.ஜெயந்தன்,
அக்/கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம், அக்கரைப்பற்று.

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| பொ.கமல்ராஜ், அக்/கோ/விநாயகர் மகா வித்தியாலயம், கோளாவில். | எஸ்.கவிஷாலினி, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. |
| எஸ்.மாதங்கி, மகாவெல இடம், கிருலப்பனை. | ம.ரகுபரன், கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை. |
| என்.எம்.நிஸாம், அல்-ஹிறா வித்தியாலயம், காத்தான்குடி-05. | பாதிமா நிஷ்மா நஜீம், சென்.எக்னஸ் கொன்வென்ட் பலாங்கொடை. |
| ஜி.குகன், பரியோவன் த.ம.வி, இறக்குவானை. | க.சந்திர மோகன், விபுலானந்த மத்திய கல்லூரி, காரைதீவு. |
| எஸ்.எச்.பாத்திமா ஹுஸ்னா, சாஹிரா தேசிய கல்லூரி, கம்பளை. | எம்.எம்.ஜாவெட் மியன்டாட், டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, கொழும்பு-07. |

## கொதிக்கும் சூரியன்

சூரியனில் இருந்து வெளிப்படும் வெப்ப சக்தியில் பூமிக்கு மிகக் குறைவான வெப்பமே வந்து சேருகின்றது. அதாவது 200 கோடி வெப்பத்தில் ஒரு பங்கு வெப்பசக்தியையே பூமி பெறுகிறது.



பூமிக்கு அதிகமான வெப்பம் வராது என்று கூறும் விஞ்ஞானிகள் என்றாவது ஒருநாள் திடீரென்று பூமியில் சூரிய வெப்பம் கூடிப்போய் உலகம் அழிந்து விடும் என்றும் கூறுகின்றனர். இதற்கு நாம் கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் இப்படி நடக்க இன்னும் 8 கோடி ஆண்டுகள் ஆகும்.



இவ்வளவு குறைவான வெப்பம் இருந்தாலும் கூட 'என்னமாய் வெய்யில் கொளுத்துகிறது' என்று நாம் பெருமூச்சு விடுகிறோம். குறைவான வெப்பம் பூமியை வந்து சேருவதற்கு நாம் சூரியனுக்கு நன்றி சொல்லவேண்டும். ஏனெனில் தற்போது பூமிக்குக் கிடைப்பதில் 0.2 சதவீதமான வெப்பம் கூடுதலாகக் கிடைத்தால் பூமியிலுள்ள எல்லா உயிரினங்களும்



## குப்.... குப்... குச்சி

தீக்குச்சியில் பொட்டாசியம் குளோரைட் தடவப்பட்டுள்ளது. இது எரியும் தன்மை கொண்டது.

நெருப்புப்பெட்டியில் பொஸ்பரஸ் தடவப் பட்டுள்ளது. இது எரியாது.

இதனால்தான் நெருப்புக்குச்சியால் தேய்க்கும்போது பற்றி எரிவதில்லை.

ஆனால் நெருப்புக்குச்சி மட்டும் குப்பென்று தீப்பற்றி எரிகிறது.

## செய்து பாருங்கள்

### பேனா ஸ்டாண்ட்

**தேவையானவை**

குளிர்பாண பிளாஸ்டிக் வெற்றுப் போத்தல், பெயிண்ட், கத்தரிக்கோல்.


**செய்முறை :**


1. பிளாஸ்டிக் போத்தலை படத்தில் காட்டியபடி வெட்டிக் கொள்ளுங்கள்.

2. பிறகு அதன் மேற்பகுதியை வளைவாக வெட்டிக் கொள்ளுங்கள்.

3. உங்களுக்குப் பிடித்த வண்ணத்தில் பெயிண்ட் பூசி, டிசைன் வரைந்து கொள் ளுங்கள்.

இப்போது பேனா ஸ்டாண்ட் தயார். பென்ஸில், இறப்பர், பேனா போன்றவற்றை இதில் போட்டு வைக்கலாம்.





"நல்லா இருக்கே கதை! அண்ணன் மட்டும் அவர் இஷ்டப்பட லவ் மேரேஜ் பண்ணிக்குவராம். தம்பி மட்டும் சமர்த்தா வீட்ல சொல்ற பொண்ணைக் கட்டிக்கணுமாக்கும்?"

"அடப்பாவி! ஏய்! விஷால்! கமான் யா! ஹூ ஈஸ் இன் யுவர் மைண்ட்? சொல்லு! நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்."

"நான் சும்மா தமாஷுக்குச் சொன்னேன்."

"இல்லை! மறைக்கிறே! படவா, சொல்டா! உன் மனசுல யாரோ இருக்காங்க"

"ஆமாம்."

"யாரு?"

"ஐஸ்வரியாராய்! போய் பொண்ணு கேட்டு கல்யாணம் பண்ணி வைக்கிறாயா?"

இருவரும் சிரித்துவிட...... அறைக் கதவு தட்டப்பட்டது.

"யெஸ்! யாரு? கதவு திறந்துதான் இருக்கு!"

கதவை மெதுவாகத் திறந்து உள்ளே வந்த தீபிகா, "ஸாரி, நீங்க பேசிக்கிட்டிருக்கீங்களா?" என்று திரும்பிப் போகப் பார்க்க...

இருங்க, சும்மாதான் அரட்டை அடிச்சிட்டிருந்தோம். நீங்க பேசிட்டிருங்க. எனக்கு நிறைய வேலை இருக்கு" என்ற விஷால் ஆகாஷின் காதருகே குனிந்து, "உனக்கு நல்ல நாள் பார்த்து சிம்லாலதான் ஃபர்ஸ்ட் நைட் ஃபிக்ஸ் பண்ணியிருக்காங்க. ஞாபகம் வெச்சுக்கோ. சும்மா சொன்னேன்" என்று விட்டு வெளியேறினான்.

"வா தீபிகா, உட்காரு. நாலு மணி நேரம் மேடையில் நின்னதுல முழங்கால் எல்லாம் ஒரே வலி! உனக்கு? நீ தூங்கியிருப்பேன்னு நினைச்சேன்."

தீபிகா அருகில் வந்து அமைதியாக நின்றாள்.

அவள் முகத்தில் இருந்த இறுக்கத்தை கவனித்த ஆகாஷ், ஹேய்! என்ன? ஏதாச்சும் பிராப்ளமா? ஏன் ஒரு மாதிரியா இருக்கே?" என்றவன். "முதல்ல உக்காரு" தோளை அழுத்தி உட்காரவைத்தான்.

"நாளைக்குக் காலைல நமக்கு கல்யாணம் ஆகாஷ்!"

"ஆமாம் அதுக்கென்ன?"

"எனக்கு ஒரே டென்ஷனா இருக்கு"

"இது சந்தோஷத்தில வர்றடென்ஷன்! என்ஜொய்!"

"அதில்லை. நாளைக்கு ஆரம்பிக்கிற நம்ம உறவு வாழ்நாள் பூராவும் தொடரப் போகுது. நமக்குள்ளே எந்த ஒளிவு மறைவும் இருக்கக்கூடாது ஆகாஷ்."

"யெஸ். நான் ஏதாவது மறைச்சுட்டேனா?"

"இல்லை நான்தான் ஒரு விஷயம் மறைச்சுட்டேன்."

"என்ன?"

தீபிகா எச்சில் விழுங்கினாள்.

"என்னம்மா? நீ என்கிட்ட என்ன மறைச்சே?"

"தயவு செஞ்சி நீங்க பொறுமையா கேக்கணும் என்னைத்தப்பா நினைக்கக்கூடாது வெளிப்படையா மனம் விட்டுப் பேசநினைக்கிற என் நோக்கத்தை நீங்க புரிஞ்சுக்கணும் என் அண்ணனோட பேச்சை மீறி நான் உங்ககிட்ட உண்மையைச் சொல்லத் தீர்மானிச்சுத்தான் வந்திருக்கேன். உங்ககிட்ட ஒரு காதலை மறைச்சிட்டேன் ஆகாஷ்" என்றாள் தீபிகா.

தீபிகாவின் மேலுதட்டிற்கு மேல் மைக்ரோ டிப்பில் வைக்கப்பட்ட வியர்வைப் புள்ளிகள். ஜாக்கெட்டின் கக்கப் பகுதிகளில் ஈரத் தீவுகள். சிவப்பு மெகந்திச் சித்திரம் வரையப்பட்ட விரல்கள் மெதுவாக உதறின.

அவள் பதட்டத்தைப் பார்த்த ஆகாஷ், "இரு!" என்று கிளாஸில் தண்ணீர் ஊற்றி நீட்டினான், "குடி! எதுவாயிருந்தாலும் பதட்டமில்லாம நிதானமாச் சொல்லு தீபிகா" என்றான்.

இரண்டு வாய் குடித்துவிட்டு வைத்து வளையல்கள் சிணுங்க கர்சீப்பால் உதடுகளை ஒற்றிக் கொண்டாள். அவன் முகம் பார்க்காமல் பேசினாள்.

"அப்போ நாங்க கோவையில இருந்தோம்."

"சொல்லியிருக்கே. மூணு வருஷம் முன்னாடி!"

"ஆமாம். நான் அங்கே டான்ஸ் கிளாஸ் போயிட்டிருந்தேன். நான் போறப்போ, வர்றப்போ ஒருத்தன் விடாம என்னை ஃபாலோ பண்ணிட்டிருந்தான். வழக்கம் போல் நான் திரும்பிக் கூட பார்க்காம அலட்சியப் படுத்தினேன். என் வீட்டு அட்ரசுக்கு தபால் போட்டான். உருகி உருகி எழுதப்பட்ட காதல் கடிதங்

## விறு விறு தொடர்

கள்! எனக்கு எரிச்சல் தான் வந்துச்சி. தயங்கித் தயங்கி ஒரு நாள் அண்ணன்கிட்ட அவனைப் பத்திச் சொல்லிட்டேன்."

"அப்புறம்?"

"முதல்ல போலீஸ்ல புகார் சொல்லலாம்னு யோசிச்சார். அப்புறம் அது வேணாம்னு அவரே என் கூட பஸ்சுல வந்தாரு. அவனை அடையாளம் காட்டினேன். பப்ளிக்ல அவன் சட்டையைப் பிடிச்சி திட்டினாரு. அடிச்சாரு. கண்டிச்சாரு. முறைச்சுக்கிட்டே போய்ட்டான். மறுநாள் மறுபடி ஒரு தபால் வந்திச்சு. 'என்னை நீ காதலிக்கலைன்னு சொல்லியிருக்கலாம். அதை விட்டுட்டு பொது இடத்தில அவமானப் படுத்திட்டே இந்த அவமானத்தைத் தாங்க முடியலை, என்னை நீ நேர்ல பார்த்து காதலிக்கலைன்னு சொல்லிடு. விலகிடறேன். பார்க்ல வெய்ட் பண்ணுவேன், வா! நீ வரல்லைன்னா கண்டிப்பா நான் தற்கொலை செஞ்சுக்குவேன்'னு எழுதி இடம், நேரம் எல்லாம் குறிப்பிட்டிருந்தான்..."

04



"ம்..."

"தற்கொலைன்ற வார்த்தை என்னை மிரட்டிடுச்சி. எங்கண்ணன் பொது இடத்தில அடிச்சி உதைச்சதுக்கப்புறமும் தபால் போடறவன் தற்கொலை செஞ்சுக்க மாட்டான்னு என்ன நிச்சயம்னு தோணிச்சு! அப்படி அவன் செய்துட்டா வாழ்நாள் பூரா ஒரு குற்ற உணர்வு என்னை ஆட்டிப் படைக்குமே! அதனால 'தற்கொலைங்கிற பைத்தியக்காரத் தனத்தை விட்டுடு, என்னை மறந்துடு'ன்னு சொல்லத்தான் அவனைப் பார்க்கப் போனேன்."

"சரி..."

"அந்த பார்க்ல நான் அவனைப் போய்ச் சந்திச்சப்போ என்னை உக்கார வச்சி அவன் உருக்கமாய் பேசினான். 'காதலிக்கிறதில என்ன தப்பு? நான் படிச்சவன், தொழில் இருக்கு, மாசம் பத்தாயிரம் சம்பாரிக்கிறேன். உன்னை சும்மா பொழுது போக்குக்காக காதலிக்கலை. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற விருப்பத்தில தான் நேசிக்கிறேன். என்னை நீ நிராகரிக்கிறதுக்கு நியாயமான ஒரு காரணம் சொல்லு, நான் விலகிடறேன்'னு ரொம்ப நேரம் பேசினான். அவனோட பேச்சில இருந்த கண்ணியமும், கம்பீரமும் என்னை அசைச்சுடுச்சி. என்னை மறந்துடுன்னு சொல்லிட்டுவரப் போன நான் அமைதியாய் திரும்பிட்டேன்."

ஆகாஷ் மெதுவாக உலாத்தினான்.

"அப்புறம்?" என்றான்.

"அப்புறம் அவன் ஃபோன் செஞ்சப்போ என்னால பேச முடியாத பரவசம்! அவனை எதிர்த்துக்கிட்டிருந்த என் மனசு அவனை நினைச்சி ஏங்க ...ம்பிச்சது எனக்கே விசித்திரமா இருந்தது. நா...க அடிக்கடி சந்திச்சோம். போன்ல பேசினோம். லெட்டர் போட்டுக்கிட்டோம். எங்க காதல் துவங்கி மூனே மாசத்தில அவனோட உண்மையான முகம் எனக்குத் தெரிஞ்சி போச்சி."

"வாட்?"

"தனக்கு ரியல் எஸ்டேட் பிசினெஸ்னு அவன் சொன்னது பொய்! கஞ்சா, ஹெராயின் இந்த மாதிரி போதை மருந்துகளை பெரிய பார்ட்டிகள் கிட்ட வாங்கி அதிக லாபம் வெச்சி சின்ன வியாபாரிகள் கிட்ட விக்கிற இடைத்தரகர்! உண்மை தெரிஞ்சதும்நான் ஆவேசப்பட்டேன். 'இதில தேச துரோகம் எதுவுமில்லை; சரியோ, தப்போ இதுவும் ஒரு தொழில்! சீக்கிரத்தில முன்னேற வைக்கும் தொழில்!'ன்னு தன் செய்கையை நியாயப்படுத்திப் பேசினான். அந்த நிமிஷமே அந்தக் காதலுக்கு நான் 'குட்-பை' சொன்னேன். 'இனிமே என் மூஞ்சிலே முழிக்காதே!'ன்னு சொல்லிட்டேன். அவனை விட்டு விலகிட்டேன். அவனை சுத்தமா என் மனசை விட்டு கழுவித் தள்ளிட்டு நானும் அண்ணனும் சென்னை வந்தோம்."

"ம்..."

"இப்படிப்பட்ட ஒரு அயோக்கியன் எத்தனை நல்லவனா என்கிட்ட நடந்துகிட்டு நாடகமாடினான்னு நினைக்கிறப்பல்லாம் மனசு பதறுவேன். அவன் வேஷத்தைப் புரிஞ்சுக்காத முட்டாளா இருந்துட்டனேன்னு வேதனைப்படுவேன். எந்த ஆம்பளையைப் பார்த்தாலும் அர்த்தமில்லாம கோபப்படுவேன். உங்களை நான் சந்திச்ச அந்த முதல் சந்திப்புல கூட அதனாலதான் நீங்க இயல்பாய் பேசினப்போக் கூட நான் எரிஞ்சி விழுந்தேன். உங்களோட பழகப் பழக உங்க நல்ல குணம் புரிஞ்சது. மறுபடியும் ஒரு காதல் என் வாழ்க்கைல தேவையான்னு எனக்குள்ளே ஒரு கேள்வி அடிக்கடி வந்தப்போ, அது நாடகமாடி ஏமாற்றப்பட்ட காதல், இதுதான் உணர்வு பூர்வமான காதல்னு என்னையே சமாதானப்படுத்திக்குவேன்.

உங்களோட பழகறப்போ எல்லாம் பழைய நினைவுகள் முள்ளா ஒரு பக்கம் குத்தும். சொல்லிடணும்னு நினைப்பேன். தயக்கம் வந்துடும். எல்லா விவரமும் தெரிஞ்ச என் அண்ணன் கடைசி வரைக்கும் இதைப்பத்தி உங்கிட்ட பேச வேணாம்னு சொன்னார். ஆனா எனக்கு மனசு கேக்கலை. எந்த விஷயத்தைப் பத்தியும் உங்கிட்ட மறைக்காம பேசிட்டிருக்கிற நான் இந்த ஒரு விஷயத்தைப் பத்தியும் உங்ககிட்ட மறைக்கிறது தப்புன்னு தோணிச்சி. நமக்குள்ளே இரகசியம் இருக்கக் கூடாதுன்னு பட்டுச்சி. கல்யாணத்துக்கு முன்னாடி இதைப் பத்தி உங்ககிட்ட சொல்லிட வேண்டியது என் கடமைனும் நினைச்சேன் அதான் சொல்லிட்டேன். இத்தனை நாளா சொல்லாம இருந்துட்டதுக்கு என்னை மன்னிச்சிடுங்க ஆகாஷ்!

சொல்லி முடித்து நிமிர்ந்து அவனைப் பார்த்த தீபிகாவின் விழிகளின் விளிம்பில் உருளத் தயாராய் கண்ணீர் முத்துக்கள் திரண்டு நின்றன.

அவளருகில் மெதுவாக வந்த ஆகாஷ் தன் கர்சீப்பால் அவள் விழிகளை ஒற்றினான்.

"இட்ஸ் ஆல் ரைட் தீபிகா. உன் நேர்மை எனக்குப் பிடிச்சிருக்கு. அது காதல் மாதிரியான ஒரு அனுபவம்! காதல் இல்லை! வயசுக்கே உரிய தடுமாற்றம்! உனக்காக ஒருத்தன் தற்கொலை செஞ்சுக்கத் தயார்ன்னு சொல்றப்போ நீ பிரமிச்சித்தான் போவே! விடு! அதெல்லாம் எப்பவோ நடந்து முடிஞ்சி போச்சி! மனசை பாரமாக்கிக்காம ரிலாக்ஸ்டா இரு தீபிகா!" என்றான் ஆகாஷ் அமைதியாக.

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன்
பட்டுக்கோட்டை பிரபாகர்

# புகழ்பெற்ற வழக்குகள் 07

**அபின் போதையில் மயங்கிக்கிடந்த சீனாவை தனது வீரமிக்க போராட்டங்களால் துயில் எழுப்பி உலகில் உன்னத நிலைக்கு உயர்த்தியவர் தலைவர் மா சே துங். ஆனால் அவருடைய அயரா உழைப்பின் பின்னணியில் எத்தனையோ மூடு மந்திரங்கள் ஓதப்பட்டுக் கொண்டிருந்தன.**

**தலைவர் மா சே துங் வீட்டிலேயே அவருக்கு எதிரான சதிவலைகள் பின்னப்பட்டன. இது தொடர்பாக எழுந்த வழக்குத்தான் இது.**

சீனத் தலைவர் மாசேதுங் செப்.9, 1976ல் இறந்தார். இதைத் தொடர்ந்து சீனாவில் பெரும் அரசியல் மாற்றங்கள் நிகழ்ந்தன. 1978 இறுதியில் கம்யூனிஸ்ட் கட்சியில், நவீனத்துவத்தில் நம்பிக்கை கொண்ட டெங் ஜியோபிங்கைத் தலைவராகக் கொண்ட பிரிவு அரசமைத்தது; 'மாசேதுங்கின் கலாச்சாரப் புரட்சி ஒன்றும் உயர்ந்ததல்ல' என்பதை நிரூபிக்கும் வகையில், அந்த இயக்கத்தில் பெரும் பங்கு வகித்த நான்கு பேர் மீது வழக்கு தொடுத்தது.

'நால்வர் குழு' (காங்க் ஆப் போர்) என்றழைக்கப்பட்ட அவர்களில் மாசேதுங்கின் (விதவை) மனைவியும் ஒருவர்! அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தான் என்ன?

மாசேதுங் இறந்தபிறகு கலாச்சாரப் புரட்சி என்ற பெயரில் வன்முறையில் ஈடுபட்டு 800 பேர் இறக்கக் காரணமானது; சூ-என்-லாய், டெங்ஜியோபிங் ஆகிய சீன கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கு எதிராக மாசேதுங்கின் மனதைத் திருப்பியது, டெங் ஜியோபங்கைக் கொல்லச் சதி என்றெல்லாம் பட்டியல் நீண்டது.

குற்றம் சுமத்தப்பட்ட மாசேதுங்கின் மூன்றாவது மனைவி ஜியாங் சிங் நாடக நடிகையாகத்தான் தன் வாழ்வைத் துவக்கினார்; கம்யூனிசத்தில் பெரிதும் நாட்டம் கொண்டார். ஒரு பள்ளியில் நாடக ஆசிரியையாக வேலை செய்த போது, அங்கு அரசியல் கூட்டமொன்றிற்கு தலைமை தாங்க வந்திருந்த மாசேதுங்கை சந்தித்தார்; காதல் மலர்ந்தது!

இதில், அவரது இரண்டாவது மனைவிக்கு (முதல் மனைவி இறந்தபிறகு, அவருக்கு மனைவியான இரண்டாவது மனைவி, 1934ல் மாசேதுங்கின் சரித்திரப் புகழ்பெற்ற நீண்ட நடைப் பயணத்தில் கலந்து கொண்டு, அவருக்கு உற்சாகமளித்தார்) கடும் கோபம்.

இதனால் இரண்டாவது மனைவி உடல் நலம் கெட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், மாசேதுங், ஜியாங்கைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அறிவித்தார். இதனால், அவரது கட்சிக்குள் பெரும் எதிர்ப்பு எழுந்தது. பிறகு 'கட்சி அரசியலில் ஜியாங் தலையிடக்கூடாது' என்ற நிபந்தனையுடன் மாசேதுங் அவரை மணக்க கட்சி நிர்வாகக் குழு சம்மதித்தது.

தொடக்கத்தில் அடக்கி வாசித்தாலும் விரைவிலேயே கலாச்சாரப் புரட்சி என்ற போர்வையில் ஜியாங் பெரும் கூட்டங்களை ஏற்பாடு செய்தார். மாசேதுங்கின் உடல் நலம் கெட்ட போது அவரைப் பல வி.ஐ.பி., கள் நெருங்க விடாமல் பார்த்துக் கொண்ட ஜியாங், தன்னை அடுத்த தேசத் தலைவராகவும் ஆக்கிக் கொள்ள முயற்சித்தார். 'ஒரு புதிய சக்ரவர்த்தினியை ஏற்றுக் கொள்ள சீனா தயாராகிவிட்டது' என்றெல்லாம் கூறினார்.

ஆனால், மாசேதுங் இறந்த அடுத்த மாதமே ஜியாங் கைது செய்யப்பட்டார். தனது அடிவருடிகள் என்று அவர் கருதியவர்களெல்லாருமே தனக்கெதிராகத்திரண்டதில் அதிர்ச்சி அடைந்தார். அரசமைத்த டெங் ஜியாங் தனக்கெதிரான சக்தியாக உருவாகக் கூடுமென்று கருத, 'நால்வர் அணி' மீது கடும் குற்றங்களை சுமத்தியது அவரது அரசு.

இந்த நீதி விசாரணையை ஜியாங் கடுமையாக எதிர்த்தார். நீதிமன்றத்தில் பலவித ரகளைகள் அரசுத்தரப்பிலிருந்து எக்கச்சக்க சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். மிகவும் அதிகப்படியாகவே இந்த வழக்கில் அக்கறைகாட்டியது அரசு.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறக்கும் தருவாயில் இருந்த ஒருவர், அரசு சாட்சியாக்கப்பட்டு 27 நாட்களில் 21 முறைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

## புரட்சி பெயரில் பூகம்பம்!



குற்றம் சுமத்தப்பட்ட நால்வருக்கு ஆதரவாக ஒரு சாட்சியும் இல்லை. அவர்கள் மீது என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டன என்பதே அவர்களுக்கு வழக்கு நடைபெறுவதற்கு இரு வாரங்களுக்கு முன்தான் தெரிவிக்கப்பட்டது. அரசு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் படவில்லை.

நீதிமன்றத்தில், மாசேதுங் உயிரோடு இருந்தவரை தான் புரிந்த அத்தனை செயல்களுக்கும் அவரது ஒப்புதல் இருந்தது என்றார் ஜியாங். அரசு, வெகுசாமர்த்தியமாகச் செயல்பட வேண்டியிருந்தது; ஏனென்றால், மாசேதுங்கைக் கடவுளாகவே கருதிய மக்கள் பலர் இருந்தனர்.

நால்வருக்கும் 1981ல் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. எனினும், அது உடனடியாகச் செயல்படுத்தப்படவில்லை. இரு வருடங்கள் கழித்து அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. வீட்டுச் சிறை வைக்கப்பட்ட ஜியாங், மே 14, 1991ல் தற்கொலை செய்து கொண்டார்.

(வழக்குகள் முடிந்தன)


ராம்ஷேகர்

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 11

## புரட்சிக் கவிஞரின் பாராட்டும் கோபமும்

**இரா.பத்மநாதன்**

பெரியார் ஈ.வே.ரா, அறிஞர் அண்ணா போன்ற தலைவர்களுடன் திராவிடர் கழகப் பணிகளில் தோள் கொடுத்து நின்றவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள். இவர் வாழ்ந்தது பாண்டிச்சேரியில். பரணி ஸ்டுடியோவை குத்தகை எடுத்திருந்தார் கவிஞர் கண்ணதாசனின் அண்ணன் ஏ.எல். சீனிவாசன். 'அம்பிகாபதி' திரைப்படத்தை தயாரித்துக் கொண்டிருந்தார். இந்தப் படத்தின் திரைக்கதை, வசனம், பாடல்களை பாரதிதாசன் அவர்களே எழுதுவதென ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.



சென்னை எழும்பூரிலுள்ள விக்டோரியா ஹொட்டலில் கவிஞர் அவர்களை நான் சந்தித்த அன்று பிரசுரமான தினத்தந்தி நாளிதழின் பின்பக்கத்தில் 'அம்பிகாபதி' படம் பற்றிய முழுப்பக்க விளம்பரம் ஒன்று பிரசுரமாகியிருந்தது. இந்த விளம்பரத்தில் 'அம்பிகாபதி'யின் வசனம் மற்றும் பாடல்களைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதுகிறார் என்றுதான் போடப்பட்டிருந்தது.

இப்படத்துக்கான திரைக்கதையையும் தானே எழுதுவதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தும், தான் ஏற்கனவே திரைக்கதையை எழுதிக் கொடுத்திருக்கும்போதும், வெறுமனே வசனம், பாடல்கள் என்று மட்டும் போட்டிருந்தமைக்கான காரணம் என்ன என்று கேட்டு திரு.ஏ.எல்.சீனிவாசனுடன் பலத்த சத்தத்துடன் புரட்சிக் கவிஞர் சண்டை போட்டுக் கொண்டு இருந்த போதுதான் அவருக்கான தகவல் வந்திருந்தது.

பாண்டிச்சேரியில் புரட்சிக்கவிஞரின் தங்கையின் கணவர் காலமாகிவிட்டதாக வந்த அந்தச் செய்தி, பெரும் பூகம்பத்தாலும் அசைக்க முடியாத இமயம் போன்ற இதயமும் உடல்வாகும் கொண்ட அந்த மாமனிதரை அசைத்து விட்டது. துயரம் மேலீட்டால் அருகிலிருந்த இருக்கையில் அமர்ந்தபடி கண்களை மூடிக் கொண்டார். மூடியிருந்த கண்களில் கண்ணீர்த் துளிகள் மின்னின.

திரு.சீனிவாசன் அவர்கள் தன்னுடைய உதவியாளர்களுக்கு மளமளவென்று சில கட்டளைகள் பிறப்பித்தார். ஏறத்தாழ 15 நிமிடங்கள் அமைதியாக இருந்த கவிஞர் கண்களையும் திறந்தார். திரு.சீனிவாசன் கவிஞரின் இருகைகளையும் அழுத்திப் பிடித்து தனது அனுதாபத்தையும் தெரிவித்தார். உடனடியாகப் பாண்டிச்சேரி செல்வதற்கு வண்டி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகக் கவிஞரிடம் கூறியதுடன் பண நோட்டுக்கள் கொண்ட ஒரு கவரையும் கவிஞரிடம் கையளித்தார். நிதானமாக எழுந்த கவிஞரை அழைத்துச் சென்று தயாராக நின்ற வண்டியின் பின் இருக்கையில் அமர்த்தினார்.

இந்த இக்கட்டான வேளையில் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றேன். சென்னையில் நான் தங்கியிருந்த அங்கப்பநாயக்கன் தெருவிலிருந்து மவுண்ட் ரோடில் ஆயிரம் விழக்கிலிருந்த 'முரசொலி' அலுவலகத்துக்கும் எழும்பூருக்கும் செல்வதற்கு மட்டும் பேருந்தில் பயணம் செய்யத் தெரிந்திருந்த எனக்கு கோடம் பாக்கத்தின் தொங்கலில் சாலிக்கிராமம் தொடங்கும் இடத்திலுள்ள பரணி ஸ்டூடியோவிலிருந்து வேறு எங்கும் செல்ல வழி தெரியாத நிலையில் நான் நின்றிருந்தேன், துயரம் தோய்ந்தவராக இருந்த புரட்சிக்கவிஞர் என்னை மறக்கவில்லை.



ஜப்பானில் மிகவும் அதிகமாக விற்பனையாகும் 'அஸாகி ஷிம்ஹன்' நாளிதளின் ஒசாக்காநகரக்கிளை அலுவலகத்தின் முன்புறமாக திரு.செட்டியார் அவர்கள் (நடுவில்) எங்கள் ஜப்பான் நண்பர் திரு.இவாஸா மற்றும் கட்டுரையாளர்.

### பாண்டிச்சேரிக்கு வாருங்கள்


"என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் இலங்கைத்தோழரே? ஏறுங்கள் வண்டியில்" என்றார். அவர் அருகிலேயே அமர்ந்தேன். எழும்பூர் சென்றது வண்டி. கவிஞருடைய உடைகள் கொண்ட பெட்டிகள் இரண்டும் வண்டியில் ஏற்றப்பட்டன.

"உங்களுடைய உடைகள் எல்லாம் எங்கே இருக்கின்றன?" என்று வினவினார். நான் எனது விடுதி பற்றிக் கூறினேன், "அவற்றை போகிறவழியில் எடுத்துக் கொள்வோம்: வாருங்கள் என்னுடன் பாண்டிச்சேரிக்கு," என்றார். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அன்று மாலையில் அண்ணாமலைமன்ற அரங்கில் மேடையேறும் டி.கே.எஸ்.சகோதரர்களின் 'இராஜ இராஜ சோழன்' நாடகம் பார்ப்பதற்கு அனுமதிச்சீட்டுப் பெற்றிருந்தேன். அதுமட்டுமல்லாமல், அடுத்த நாள் பிற்பகல் காரைக்குடி செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்திருந்தேன்.

சிங்கப்பூரிலிருந்து 'ரஜூலா' கப்பலில் புறப்படும் போது திரு.செட்டியார் அவர்களுக்குரிய ஏராளமான பொருட்கள் கப்பலில் ஏற்றிக் கொண்டுவரப்பட்டு நாகபட்டிணம் துறைமுகத்தில் இறக்கப்பட்டு, அவற்றை லொறிகளில் ஏற்றி, செட்டியார் அவர்களின் சொந்த ஊரான ஆவினிப்பட்டிக்கு அனுப்பியிருந்தோம். அவற்றை செட்டியார் அவர்களுடைய இல்லத்தில் சரிபார்த்து ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எனக்கிருந்தது. ஆகவே நான் காரைக்குடி செல்ல வேண்டியதும் அவசியமாக இருந்தது. இந்தக் காரணங்களைப் புரட்சிக் கவிஞரிடம் கூறி விளக்குவதற்கு ஏற்ற சந்தர்ப்பமாக அப்போதுள்ள நிலை அமையவில்லை. மிகச் சுருக்கமாகச் சொல்லி அவர்களுடன் பாண்டிச்சேரிக்கு என்னால் வர முடியவில்லை. என்று கூறிப்பார்த்தேன். ஆனால் அவர் எனது நிலையை உணர்வதாயில்லை. கடும் கோபமுற்று அவர் திட்டித்தீர்த்தார். அதே கோபத்துடன் அவர் வண்டியில் புறப்பட்டார்.

அன்று காலையில் புரட்சிக் கவிஞர் அவர்களை ஹொட்டலில் கண்டு உரையாடிக்கொண்டு இருந்தபோது என்னிடமிருந்த 'ஆட்டோகிராஃப் புத்தகத்தை நீட்டினேன். சாதாரண ஆட்டோக்கிராஃப் அளவில் இல்லாமல், சற்றுப்பெரிய அளவினதாக இருந்த அப்புத்தகத்தின் முதல் பக்கத்தில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களும் மதுரம் அவர்களும் ஒன்றாக



இருந்து எடுத்துக்கொண்ட படம் ஒட்டப்பட்டிருந்தது. இப்படத்தில் "அன்பு நண்பன் பத்மநாபனுக்கு அண்ணனும் அண்ணியும் நல்வாழ்த்துக்கள்" என்று கலைவாணர் எழுதி இருவருமே கையொப்பமிட்டிருந்தனர்.

இதே புத்தகத்தில்,

**"இலங்கைத் தோழர் இராபத்மநாபனை**
**இன்று நான் கண்டேன்**
**இலங்கைத் தமிழரின் இன்னல் பற்றி**
**எமக்கெடுத்துரைத்தார்.**
**அவர் மிக நல்லவர்**
**அறிவாற்றல் மிக்கவர்;**
**அவர் வாழ என் வாழ்த்துக்கள்!"**

இவ்வாறு எழுதிஇருந்தார். அவருடன் அவருடைய வசிப்பிடமான பாண்டிச்சேரி செல்வதற்கு முடியாமல் போனமை எனக்கு பெரும் துன்பத்தையே அளித்தது. புரட்சிக் கவிஞரின் அன்பான வேண்டுகோளை புறக்கணித்ததனாலோ என்னவோ, நான் திட்டமிட்டபடி அன்று 'இராஜ இராஜ சோழன்' நாடகத்தைப் போய்ப்பார்ப்பதற்கும் முடியாமல் போய் விட்டது. அன்றிரவே சிங்கப்பூரில் செட்டியாரின் முகவராய் இருந்தவருடன் காரைக்குடி புறப்பட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது.

காரைக்குடியில் இருநாட்கள் மட்டுமே தங்கியிருந்தேன். இதற்கிடையில் ஆவினிப் பட்டியிலுள்ள செட்டியாரவர்களுடைய இல்லத்துக்கும் சென்று வந்தேன். இரண்டாவது நாளன்று காரைக்குடியிலுள்ள ஒரு திரையரங்கில் 'ஆசை' என்ற திரைப்படம் திரையிடப்படவிருந்தது. துவக்கக்காட்சி இரவு 10 மணிஎன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திரையரங்கு திரு.செட்டியார் அவர்களுடைய உறவினரால் நடத்தப்பட்டு வந்தது. இரவுக்காட்சிக்கு நான் வரவிருப்பதாக ஏற்கனவே செட்டியார் அவர்களுடைய காரைக்குடி கடையில் உள்ளவர்களுக்கு அறிவித்திருந்தேன்.

எனக்கு ஒரு ஆசனம் முற்பதிவு செய்து தரும்படி கோரியிருந்தேன்.

### எதிர்பாராத அதிர்ச்சி

அன்றிரவு உணவை செட்டியார் அவர்களுடைய ஆவினிப்பட்டி இல்லத்தில் முடித்துவிட்டு காரைக்குடி திரும்புவதற்கு இரவு 10.45 ஆகிவிட்டது அதன் பின்னர் தியட்டருக்குச் சென்றேன். நான் சற்றும் எதிர்பாராத நிலையில் திரையரங்கு நிருவாகி ஒரு ரோஜா மாலையை என் கழுத்தில் அணிவித்தார் முன்மண்டபத்தில் பூரண கும்பமும் குத்து விளக்கும் வைக்கப்பட்டிருந்தன. விளக்கை ஏற்றிவைக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள். எனக்கு அதிர்ச்சியும் திகைப்புமாக இருந்தது. என்னைக் கொண்டு போய் பல்கனியில் அமர்த்தினார்கள். நான் போய் அமர்ந்ததும் இரவு 10.50க்கு படமும் தொடங் கியது. எதிர்பாராமல் நடந்த இச்சம்பவம் என் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாத ஒரு சம்பவமாகும்.

மூன்றாவது நாளன்று 'இந்தோ-சிலோன் எக்ஸ்பிரஸ்' புகைவண்டியில் இலங்கை நோக்கி எனது பயணம் தொடங்கியது. இரண்டாவது நாளன்று கொழும்பை வந்தடைந்தேன். நண்பர் கோபாலரத்தினம் அவர்கள் தங்கி இருந்த விடுதியில் பொருட்களை வைத்துவிட்டு 'வீரகேசரி' அலுவலகம் சென்று திரு.வாஸ் அவர்களைக் கண்டேன். வாராவாரம் எழுதி பிரசுரமாகும் பயணக் கட்டுரைகள் சிறப்பாக அமைந்திருப்பதாகப் பாராட்டினார். அடுத்த நாளே விமானம் மூலம் செட்டியார் அவர்கள் கொழும்பு திரும்ப இருப்பதாகவும், மூன்று மாத விடுமுறையில் ஊர் சென்று திரும்பி வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும், கடந்த ஒன்பது மாதங்களுக்குரிய சம்பளப் பணத்தையும் அடுத்தநாளே முழுமையாக பெற்றுக் கொள்ள முடியுமென்றும் கூறி வைத்தார்.

அன்று மதியம் 'சுதந்திரன்' அலுவலகம் சென்று திரு சிவநாயகம் அவர்களைக் கண்டேன். அகமும் முகமும் மலர என்னை ஆரத்தழுவி வரவேற்றார். இன்னும் இரண்டு நாட்களில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் இராஜதுரை அவர்கள் தமிழரசுக் கட்சிவேட்பாளராக மட்டக்களப்பில் போட்டியிடுவதாகவும் தெரிவித்தார்.

திரு.இராஜதுரை அவர்கள் தேர்தலில் போட்டியிடுவது பற்றி நான் ஏற்கனவே அறிந்திருந்தேன். எங்கள் பயணத்தின் போது இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவுக்கும் சென்றிருந்தோம். சுமத்ராவின் தலைநகரான மைதானிலிருந்து மலைப்பாங்கான ஓர் உல்லாச வாசஸ்தலத்துக்குச் சென்றிருந்தோம். அங்கு ஓரிரவு 8.00 மணி அளவில் இலங்கை வானொலி மாலை 6.00 மணி செய்தி ஒலிபரப்பினைக் கேட்டேன். அப்போதுதான் திரு.இராஜதுரை தேர்தலில் குதித்துள்ள செய்தியை அறிந்தேன், உடனடியாகவே திரு.இராஜதுரை அவர்களுக்கு விமானத் தபால் அனுப்பியிருந்தேன். "எனது வாக்கினை அளிப்பதற்கு எப்படியும் நான் மட்டக்களப்பு வந்து சேர்ந்து விடுவேன்", என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தேன்.

கடிதத்தில் குறிப்பிட்டபடி 1956 மார்ச் 26 தேர்தல் தினத்தன்று மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் நான் வந்து இறங்கிய போது, எனக்காக 'சிங்கர் ரேஸிங் மொடல்' கார் ஒன்று ரயில் நிலைய வெளிப் புறத்தில் காத்து நின்றது. கூரை மடிக்கப்பட்ட அந்த வண்டியின் முன் புறத்தில் தமிழரசுக்கட்சியின் மஞ்சள், சிவப்பு, பச்சை-மூவர்ணப் பட்டுக் கொடி ஒன்று கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

என்னை வரவேற்க வந்து நின்ற. காரின் உரிமையாளரைக் கண்டதும் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும் திகைப்பையும் என்னால் விவரிக்க முடியாது.

**(இன்னும் வரும்)**

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 65**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

பத்திரமாக வைக்கப்பட்டால், பித்தளைக்கும் விலை இருக்கிறது!

நேர்மைக்கும், நன்றிக்கும் பேர்போன யானைகள் நுழைய முடியாத வாசலில், பூனைக் குட்டிகள் துள்ளி ஒடி நுழைந்து விடுகின்றன.

சில நேரங்களில் ஒட்டைப் படகுகள் கரை சேர்ந்து விடுகின்றன; பெரிய கப்பல்கள் மூழ்கி விடுகின்றன.

கடவுளின் பகடை விளையாட்டில். காலதேவனும் சேர்ந்து கொள்கிறான்.

கமல் மறுபடியும் பதவிக்கு வருவாரென்று நான் கனவிலும் கருதியதில்லை.

ஒரு அரசாங்கத்தால் மதிக்கப்பட்டவர்களை, மறு அரசாங்கம் குற்றம் சாட்டுவதும், ஒரு அரசு குற்றம் என்று முடிவு கட்டியதை, மறு அரசு நியாயம் என்று தீர்ப்பு அளிப்பதும் இந்நாட்டில் மிகவும் சகஜம்!

குற்றவாளி என்றே சந்தேகத்துக்கு இடமின்றிக் கண்டுபிடிக்கப்பட்ட கமல், சந்திரசூரியனின் தர்பாரில் மீண்டும் அதிகாரி ஆகிவிட்டார்.

அதன் விளைவு என்னைப் பொறுத்தவரைப் பாதகமாக இருக்க முடியாது. எனக்கிருக்கும் ஒரே பழக்கம் உலகம் அறிந்த ஒன்று. அதுவும் அரசாங்க அனுமதியோடு தான் நடைபெறுகிறது. அந்த அனுமதியே இல்லாமற் போனால் கூட கவலைப்பட மாட்டேன்.

என்னைக் கூண்டிலே நிறுத்தினால் மதுவிலக்குக் கொள்கையையே நாறடித்து விடுவேன்.

"நடுத்தெருவில் குடிப்போம்; வாரீர்" என்று ஆட்களைத் திரட்டுவேன்.

ஒரு இலட்சம் பேராவது நடுரோட்டில் நின்று குடிக்கும் படி செய்வேன். சட்டம் ஒழுங்கைத் திணறடிப்பேன்.

ஆனால், பரிதாபத்திற்குரிய கற்பகமோ, சந்திர புஷ்கரணியோ, மற்றவர்களோ பழி வாங்கப்பட்டால் என்ன செய்வது?

அரசாங்கத்தில் பதவி வகிக்க வருகிறவனுக்கு வேறு வேலை தெரியாவிட்டாலும், பழி வாங்கத் தெரிகிறது.

அவன் எதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டானோ அதைச் செய்ய யோக்கியதை இல்லை; அடுத்தவரை வஞ்சம் தீர்ப்பதற்கு நடுத்தெருவுக்கே வந்து விடுகிறான். எதிரி துணிந்து விட்டால், சரணடைந்துவிடுகிறான்.

சென்னைக்கு வந்து இறங்கியதும் என் மூளை கொஞ்சம் சுறுசுறுப்பாகவேலை செய்யத் தொடங்கிற்று.

சாதாரணமாக அரசியலில்நான் சுறுசுறுப்பாகச் சிந்திப்பதில்லை. அரசியல் துறையில் எவன் மிகவும் கூர்மையாக இருக்கிறானோ, அவன்தான் சீக்கிரம் அடி வாங்குகிறான்.

சந்தர்ப்பமும் அப்படியாகி விட்டதால் நானும் கூர்மையாகவே சிந்தித்தேன்.

சந்திரசூரியனுக்கு எதிரான சட்டமன்ற உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தேன்.

அவர்களைக் கையில் வைத்துக்கொண்டு, சந்திரசூரியனின் அசைவுகள் அங்க நெளிவுகளுக்கெல்லாம் விளக்கம் கொடுக்கத் தொடங்கினால், தவறான வழியில் எதையும் செய்யப் பயப்படுவார் என்று கருதினேன்.

அரசியலில் பணத்துக்கு ஆசைப்படாதவன் யார்?

கட்சிப் பணத்தை மறைத்து வைத்து அதன் மூலமே கட்சியைப் பிடிக்கும் யோக்கியர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்.



பரம்பரை மிராசுதாரராகவே இருந்தாலும், அவன் பல விஷயத்தில் அயோக்கியனாகத்தானே இருக்கிறான்.

இப்போது நானும் ஒரு வகையில் பணக்காரனே!

நான் சொன்னால், கற்பகம் கேட்பாள்; கற்பகம் சொன்னால் உசேன் கேட்பார். ஆகவே நானும் பணக்காரன்தானே!

சென்னைக்கு வந்தவுடனே டெலிஃபோனை எடுத்து கமல் நியமனம் பற்றிச் சந்திரசூரியனிடம் கேட்டேன்.

"காலில் வந்து விழுந்தான். வேறு என்ன செய்வது?" என்பதே பதிலாக இருந்தது.

கொஞ்ச காலம் 'மப்டி'யில் இருந்து மற்ற வேலைகளுக்கே தயாராகி விட்ட கமல், இப்போது ஆடை மாட்டிக் கொண்டு விட்டார். இனி அவரைப் பிடிக்க முடியுமா? இந்த நாட்டில் பொலிஸ்காரனால் திருடனையே பிடிக்க முடியவில்லையே, பொலிஸ்காரனை எப்படி பிடிக்கமுடியும்?

அன்று இரவு ஒன்பது மணி இருக்கும். கற்பகத்தின் வீட்டில் அமர்ந்திருந்தேன், வானொலியிலே ஒரு பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது. 'நாளை நம்முடையதுதான்' என்பதே அந்தப் பாட்டு.

எவ்வளவு முட்டாள் தனமான பல்லவி? தினமும் அதைப் பாடிக் கொண்டிருந்தாலே, ஆயுள் முடிந்து போகும்!

'நாளை நம்முடையது தான்; ஆனால் இன்றைய பொழுது என்னுடையது' என்று சொல்வது போலக் கமல் உள்ளே நுழைந்தார்.

கற்பகத்தின் வீடு எப்போதுமே ஒரு சத்திரம்.

கறுப்புப் பணமும் உசேன் தொடர்பும் உள்ள ஒருத்தி அவ்வளவு பாதுகாப்பில்லாமல் வாழக்கூடாது. ஆனால் அவளோ மடத்தனமாக நண்பர்களை விரித்துக் கொண்டு விட்டாள், அதிலேயும் கமல் நாகப்பாம்பு போன்றவர்.

நான் சாதாரணமாகவே, "வாருங்கள்" என்றேன்.

**(அந்தரங்கம் வரும்)**

# தெளிந்த மனம்

டிசம்பர் மாதக்குளிர் லேசாக எட்டிப் பார்க்கும் நேரம். இரவானால் கேட்கத்தேவையில்லை. ஒரு போர்வையின் அவசியம் யாவருக்கும் தோன்றும். இவ்வளவு நாளும் அவளும் போர்வையின் அவசியத்தை உணர்ந்தவள்தான். இன்று மட்டும் ஏனோ அவளின் மனதில் உள்ள புழுக்கத்தைப் போக்க அக்குளிரிலும் வேகமாகச் சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியால் கூட முடியாமல் அது கூடத் தவித்துக் கொண்டிருந்தது.

அவள், மதுமிதா-அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனுக்கு ஆச்சரியம். 'என்ன இவள்? என்றுமில்லாதவாறு இப்படி இருக்கிறாள்... எப்போதும் போர்வைக்குள் சுருண்டு கொண்டு என்னையும் இழுத்துக் கொண்டு கதகதப்பில் உறக்கம் தேடுபவள். இன்று எதனையும் மறந்து ஒரு பொருளை புதிதாய்ப் பார்க்கும் பார்வையில் என்னை மேய்ந்து கொண்டிருக்கிறாள். இவளுக்கு என்ன நடந்தது?'



அவன் ஒன்றும் கேட்கவில்லை. அவளை இழுத்து அணைத்துக் கொண்டான். அவள் வழமையை விட இறுக்கமாக அவனுள் சுருண்டு கொண்டாள்... அவனும் அவளின் தலையை மார்போடு சேர்த்துக் கோதிக் கொண்டிருந்தான். அது அவளுக்கு ஆறுதலாக இருந்தது.

அவள் நினைவுகள் மீண்டும், நடந்து முடிந்த நிகழ்ச்சியை எடைபோட்டவாறு கடந்த காலத்தை நோக்கி நழுவியது.

மதுமிதா அவள் பெற்றோருக்கு ஒரே மகள். ஆனால் செல்லமாக வளர்ந்தாள் என்று செல்வதற்கில்லை. மதுமிதாவின் சிறுவயதிலேயே அவளது பெற்றோர் ஏதோ பிரச்சனை காரணமாக பிரிந்துவிட்டார்கள். அவளின் தாய் மரகதம் குழந்தையுடன் பாட்டி வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். பாட்டி வீட்டில் கூட்டுக்குடும்பமாகத்தான் மரகதத்தின் சகோதரிமார்கள் பிள்ளைகள் எல்லோரும் வாழ்ந்து வந்தார்கள்.

முதலில் ஆதரவுடன் ஏற்ற அவள் குடும்பத்தினர், பின்னர் குடும்பச் செலவுகள் சாதாரணமாகவே கூடிக்கொண்டிருக்கும் போது மரகதமும் குழந்தையும் பாரமானது வேண்டாத விடயமாகிப் போனதை வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள். மரகதம் இயல்பாகவே ரோஷக்காரி. அவளது ரோஷம் தான் அவளை எல்லாவற்றையும் இழக்கச் செய்தது என்பதை இன்னும் புரியாமல் இருக்கிறாள். முடிவில் மதுமிதாவை பாட்டியிடம் விட்டு விட்டு வெளிநாடு சென்றுவிட்டாள். காலங்கள் உருண்டோடின. மாதாமாதம் பாட்டிக்கு மரகதத்திடமிருந்து பணம் வந்து கொண்டிருந்தது. இப்போது மரகதத்தின் குழந்தையைப் பாரமாக நினைத்தவர்களின் பிள்ளைகள் கூட அவளின் பணத்தில் ராஜவாழ்க்கை வாழ்ந்தார்கள்.

அவளுக்கும் திருப்தி. தன் குடும்பத்தையே தன் உழைப்பால் பராமரிப்பதை தன் பாக்கியமாகக் கருதினாள். நாட்கள் வாரங்களாகி மாதங்களாகி வருடங்களாகி காலங்கள் உருண்டோடின. மதுமிதாவும் வளர்ந்து பெரியவளானாள். அவள் படிப்பில் சுட்டி. தானாகவே படிப்பாள். யாரும் ஊக்கமளிக்கவுமில்லை. அவள் கூட்டுக்குடும்பத்தில் வளர்ந்ததாலோ என்னவோ வாழ்க்கையின் அடிப்படைகளை, ஒழுக்கங்களை, நெளிவு சுளிவுகளை அனுபவங்கள் மூலம் நிறைய உணர்ந்து கொண்டாள்.

அவளுக்கு ஒரு ஜீவனைத்தவிர யார் மீதும் அன்பு ஏற்படவில்லை. ஏனோ அவள் சித்தார்த்தனை மிகவும் நேசித்தாள். அவனும் இக்காலத்து இளைஞர்களில் பொறுக்கி எடுக்கக்கூடியவர்களுள் ஒருவன். மிகவும் நல்லவன். எப்போதும் நல்லதையே எண்ணுவான். எவருக்கும் அவன் மீது நல்லபிப்பிராயம் நிறையவுண்டு. அவர்களது காதல் தக்க தருணம் வரும்வரையில் யாருக்கும் தெரியாமலேயே இருந்தது.

மரகதம் உழைத்து ஒடிந்துபோனாள். வயதாகிவிட்டது நோய்களும் ஆராதிக்கத் தொடங்கின. அவள் நாடு திரும்பினாள். அவளின் உழைப்பின் விளைவில் சுகம் கண்ட அவள் குடும்பத்தினர் அவளை அமோகமாக வரவேற்றார்கள். அதுவரைக்கும் அவள் ஒரு சல்லிக்காசு கூட அவளுக்கோ அவள் மகளுக்கென்றோ சேமித்து வைக்கவில்லை. மதுமிதாவின் காதல் விசயம் தெரிந்தது. என்ன நினைத்தார்களோ? ஒன்றும் மறுப்புத்தெரிவிக்காமல் மதுமிதா-சித்தார்த்தன் திருமணம் இனிதே நிறைவேறியது. அவர்கள் அவர்களது உலகத்துக்குள் காலடி எடுத்து வைத்தனர். மரகதம் அவள் குடும்பத்தினருடனே இருந்துவிட்டாள். அவளது தாய்(பாட்டி) இடைப்பட்ட காலத்தில் கண்மூடிவிட்டாள்.

இப்போது ஒன்றுக்கும் உதவாத நோயாளி மரகதம் சித்தி குடும்பத்துக்கு பெரும் பாரமாகவும் எரிச்சலாகவும் தென்பட்டாள். மரகதம் உளவியல் ரீதியாக நிறையத்தாக்கப்பட்டாள். ஒரே சண்டைகள் பூதாகாரமெடுத்தன. அன்று மாலையும் அப்படித்தான்.

மதுமிதா தாயைப்பார்க்கவென்று சென்றவேளை பெரும் வாய்ச்சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்போது அவள் சித்தி சொன்ன வார்த்தைகள் தான் மதுமிதாவை இன்று மனப்புழுக்கத்துக்கு ஆளாக்கியிருக்கின்றது. அவள் சித்தி சொன்னதை நினைத்தாலே அவளுக்கு உடல் பலமிழந்தது. 'மரகதம் வெளிநாட்டில் உள்ளபோது யாருடனோ சகவாசம் கொண்டதன் விளைவாக கருக்கலைப்பு செய்தாள் என்றும் அதனை ஊராருக்கும் சொல்லி அவமானப்படுத்துவேன், என்று ஆக்ரோஷமாய் திட்டிக்கொண்டிருந்தாள். மரகதமும் ஏதோ சொல்லி அழுதழுது ஏசிக்கொண்டிருந்தாள்.

மதுமிதாவுக்கு காலுக்கடியில் உலகமே நழுவிப்போய்க் கொண்டிருந்தது. கால்கள் நடுங்கின உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. தன் தாயையோ யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. உடனே திரும்பிவிட்டாள். இப்போது அவளது புழுக்கமெல்லாம் அவள் தாய், மரகதம் செய்தது தவறா? தப்பா? என்பது பற்றியே! ஏனெனில் மதுமிதா எதனையும் பிரித்தறிந்து முடிவுகாண்பவள்.

இவ்விசயத்தை சித்தார்த்தனிடம் சொல்லவேண்டும் போலிருக்கும். ஆனாலும் தொண்டைக்குழிக்குள் இருந்து ஒரு வார்த்தை கூட வரமறுத்தது. அது தான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த நினைவுகளுடனேயே அவள் எப்போது உறங்கிப் போனாள் என்று தெரியவில்லை. 'சித்தார்த்தன் நெற்றியில் முத்தமிட்டு அவளை எழுப்பும் வரை-அவனின் சிரித்த முகத்தைப்பார்த்தவுடன் அவளுக்கு எல்லாமே மறந்துவிட்டது. நன்றாக விடிந்துவிட்டதை அவதானித்தவள் தான் இவ்வளவு நேரமாக உறங்கினேன் என்பதை நினைத்து வெட்கப்பட்டுக் கொண்டே பரபரவென எழுந்து குளித்து உரிய வேலைகளை முடித்து சித்தார்த்தனை வேலைக்கு அனுப்பிவிட்டு வந்தவள் சற்று ஆயாசமாக கதிரையில் அமர்ந்தவளின் கண்களில் என்டமூரிவீரேந்திரநாத்தின் 'நைத்திகம்' தெலுங்கு நாவல் தென்பட்டது.

அதை உடனே பார்க்கவேண்டும் போல் தோன்றியது. அவளது மனப்போராட்டத்துக்கு விடைகிடைக்கும் என்று மனதின் மூலையில் ஒரு அசரீரீ கேட்டுக்கெண்டிருந்தது. நாவலைப்பிரித்தாள். நாவல் எனும் கடலில் தனது பிரச்சனைக்குத் தேவையான முத்தை தேடி மூழ்கினாள். அதை வாசிக்க வாசிக்க அவளுக்கு இன்னும் பல விஷயங்கள் புரிய ஆரம்பித்தன. அவள் முகத்தில் திருப்தி தென்பட ஆரம்பித்தது. நாவல் முடிந்ததை விட தன் பிரச்சனைக்குத் தெளிவு பிறந்த திருப்தி அவள் முகத்தில் பளிச்சிட்டது.

அக்கதை மூன்று படித்த பெண்களின் வாழ்க்கையில் ஆண்களால் ஏற்பட்ட பிரச்சனைகளும் அவர்கள் அதனால் பட்ட பாதிப்புக்களும் அதனை எதிர்கொண்ட விதமும் மேலும் பெண் சுதந்திரம் பற்றிய சில சாதக பாதக நிலைமைகளையும் அழகாக எழுதப்பட்டிருந்தது. அதில் வரும் 'அகல்யா' பாத்திர்த்தை நோக்கும் போது, அகல்யா படித்தமேதாவி. கணவன் இருந்தும் தன் குடும்ப வாழ்வின் அவளின் சின்னச் சின்ன எதிர்பார்ப்புகள் கூட நசிந்து போன நிலையில் சந்தர்ப்பவசத்தால் தனது 'இட்' இன் பிழையான பரிதவிப்பால் மச்சினனுடன் ஏற்படும் தவறான உறவால் வந்த விளைவுகள் பின் அவள் தவறியதன் நியாயங்களை நோக்கும்போது மதுமிதாவின் தாய் படிப்பறிவற்றவள். கணவனை இழந்தவள். சுற்றும் ஆதரவுகாட்ட யாருமில்லாத தேசத்தில் பிறரின் ஆதரவு பச்சாதாபப் பேச்சுகளில் தன்னை மறந்து இருக்கும் தருணத்தில் யாரோ ஒரு சுயநலவாதியின் பொய்யான ஆதரவை நம்பி சோரம் போனது ஒன்றும் பெரும்பிழையாகத் தெரியவில்லை. மரகதம் அதுமாதிரியான தொடர்புகளை தொடர்ந்திருந்தால் அவள் தப்பானவள் ஒரு முறை நடந்த அச்சம்பவம் அவளுக்கு ஈகோவில் விழிப்பை ஏற்படுத்தியதால் அவள் அதை உணர்ந்து திருந்திவிட்டாள். என்பதை நினைத்து பார்த்தாள் மரகதம் தவறு செய்து விட்டாள்.

எந்தவொரு பிழையான செயலையும் ஒரு முறை செய்தால் அது தவறு. அதையே பலமுறை செய்தால் அது தப்பு. தவறுகள் மன்னிக்கப்படவேண்டும்; தப்புகள் தண்டிக்கப்படவேண்டும். யாரோ சொன்ன வசனங்கள் நினைவுக்கு வந்தன. வாய்க்கு வந்ததை முணுமுணுத்தவள் நேரத்தைப் பார்த்து பதறிக்கொண்டு எழுந்தாள். சித்தார்த்தனின் வரவுக்காக தெளிந்த மனதுடன் நின்றாள். இன்றும் அவளுக்கு அவனின் ஆறுதலான தலைக்கோதல் தேவைப்பட்டது.

**சி.அழகி-களுத்துறை தெற்கு**

# கையும் களவும்....!

ராஜினிக்கு குற்ற உணர்வால் உயிர் தணலாக எரிந்தது. மனம் முழுவதும் என்றுமில்லாததோர் பயம் நிரம்பிப் போயிருந்தது.

"என்னம்மா.... ராஜி இப்படி ஒரு ஓரமாப் போய் உட்கார்ந்து கிட்டிருக்கிற...?ம்.... இப்படி இங்க என் பக்கத்துக்கு வாவே....!"

கண்சிமிட்டி உதடுகடித்து தன்னருகில் அழைத்தான் சசி.

"வேண்டாம் .... சசி நாம.... இப்பவே இங்கிருந்து போயிடுவோம்..! எனக்கு என்னமோ பயமா இருக்குது...!

அவள் அவ்விடத்திலிருந்தபடியே சிணுங்கினாள்.

"என்ன ராஜி... நாம இந்த ஓட்டலுக்கு இன்றைக்கா வந்திருக்கிறோம்...! எத்தன தடவை வந்து போயிருக்கிறோம். வீணா கவலைப்படாதே....! ஏய்... நான் உன் பக்கத்துல இருக்கிறேன் தானே பிறகென்ன பயம்?"

அவளருகில் சென்று அணைத்தபடி அவன் கூற அவள் சற்று விலகிப்போக எத்தனித்தாலும் விலகியவளை எட்டிப்பிடித்தான்.

திமிறத் திமிற கட்டிப்பிடித்து நாடியை அழுத்தி பலவந்தமாய் முத்தமிட்டான்.

அவனுக்கு இனித்ததைப் போல இனிப்பு அவளுக்கிருக்கவில்லை.

"எத்தன தடவ வந்து போனாலும் நாம செய்யுறது தப்புன்னு என் மனசு சொன்னிச்சி...! இந்த தொடர்ப மட்டும் என் கணவர் தெரிஞ்சிக்கிட்டாருன்னா... பிறகு...!"

அவளை அதற்கு மேல் அவன் பேச அனுமதிக்கவில்லை.

தன் இதழ்களாலேயே அவளை முத்தமிட்டு மௌனமாக்கினான்.

"பிளீஸ்... சசி என்ன கொஞ்ச நேரம் தனிமையில இருக்க விடுங்க...!"

அவளது குரலில் கெஞ்சல் கலந்திருந்தது.

"என்ன...ராஜி ஒரேதா டென்ஷன் ஆகிட்டியா? ஏன் சும்மா எல்லாத்துக்கும் பயந்து கிட்டிருக்கிற...! இங்க நம்பள அடையாளம் கண்டுக்க யாரும் இல்ல. கமோன் டியர்..!"

அவளை அணைக்க முற்பட்ட கைகளை தட்டிவிட்டாள் அவள்.

"புரியாம பேசாதீங்க சசி..... என் கணவர் கிட்ட யாரோ... சாடமாடையா நம்ப இரண்டு பேரையும் கண்டதா சொல்லியிருக்காங்க...!"

அவன் சற்று தடுமாறிப்போனான்.

"பிறகு.."

"பிறகு... என்னா... என்ன இருந்தாலும் என் புருசன் எதையும் தன் கண்ணால காணாம நம்பமாட்டார்...!"

"அப்பாடா....!" அவன் நிம்மதி பெருமூச்சு விட்டான்.

"உண்மையிலேயே உன் கணவர ஒரு தடவ பார்க்கணும் போல இருக்கு ராஜி...!"

கொஞ்சலாக சொன்னான் அவன்.

மென்மையாக சிரித்தாள் அவள்.

"ராஜி... நீ தான் வீணா பயப்படுற... அவர் தன்ர டியூட்டியில மும்முரமா இப்ப ஈடுபட்டுகிட்டிருப்பாரு!... ப்ளீஸ் கமோன் டியர்...!"

மீண்டும் உதடுகடித்து கண்சிமிட்டினான்.

விளக்குகள் அணைக்கப்பட்டன.

★★★

"டொக்...! டொக்.....! டொக்...!"

வெளியில் கதவு தட்டப்பட்டது.

"ஆம்... பையனா இருக்கும்...! இரு நான் போய் பார்க்கிறேன்..!

ஆடைகளை எடுத்து அணிந்தபடி கதவைத்திறந்த சசி சற்றுத் தடுமாறிப்போனான்.

வெளியில் பொலிஸார் நின்றுகொண்டிருந்தார்கள்.

"சொரி..மிஸ்டர்..." இன்ஸ்பெக்டர் இழுக்க,

"சசி..!"

"மிஸ்டர் சசி... உங்கட ஐடின்டியை கொஞ்சம் காட்ட முடியுமா?"

"முடியும்...!" ஒரே நிமிடத்தில் தனது அடையாள அட்டையை எடுத்து காட்டினான் சசி.

"ஓ...கே... மிஸ்டர் சசி... இந்த ரூமில உங்க கூட வேறு யாராவது...!" நொடியில் முகம் வாடிப் போனான் சசி.

"என்ர மனைவி இருக்காங்க இன்ஸ் பெக்டர்....!"

"கஸ்டமா.. நினைக்கக் கூடாது மிஸ்டர் சசி... உங்கட பாதுகாப்புக்காக தான் நாங்க முழுநேரமும் கஷ்டப்படுறோம். உங்கட மனைவியை ஐடின்டியை எடுத்துகிட்டு வரச்சொல்லுறீங்களா?"

உள்ளே நுழைந்தவன் ராஜியின் பாதி உடைகளை மட்டும் சரிசெய்து விட்டபடி அடையாள அட்டை சகிதம் அவளை இன்ஸ் பெக்டர் முன் கொணர்ந்தான்.

"இன்ஸ்பெக்டர் இது என்ர மனைவி...!"

ராஜினி தலையை குனிந்தபடி அடையாள அட்டையை நீட்டினாள்.

அவர் அதனை கையில் வாங்கவில்லை.

"ஓ.கே மிஸ்டர் சசி... தேங்ஸ் கதவ தாழிட்டுக்கங்க... நாங்க போறோம்!"

இன்ஸ்பெக்டர் மற்ற சீருடையினர் சகிதம் விடை பெற்றார்.

சசி கதவைத் தாழிட்டுக்கொண்டான்.

ராஜினி ஓடிப்போய் கட்டிலில் சரிந்தாள்.

அவள் பின்னால் வந்த சசி அவளை இறுக்க அணைத்து முத்தமிட்டான். அவனை விலக்கிவிட்ட அவள் எழுந்து தன் இரு கரங்களையும் சேர்த்து முகத்தை பொத்திய படி ஓவென கதறியபடி கட்டிலில் அமர்ந்தாள்.



சசி தடுமாறிப் போனான்.

"ராஜி... ஏன்ன ராஜி... அடிக்கடி டென்ஷனாகிகிட்டு இருக்கிற...! இன்ஸ்பெக்டர் தான் சோதனை நடத்திட்டு போயிட்டாரே... பிறகு என்ன பயம்...!"

அவள் கழுத்தில் கைபோட்டான்.

அவள் மேலும் அதிகமாக விம்மினாள்.

"ராஜி...!" கெஞ்சினான்.

"சசி வந்திட்டு போறாரே இன்ஸ்பெக்டர் அவர் யாருன்னு தெரியுமா?"

"தெரியாது...!" கைவிரித்தான்.

அவள் சிவந்த விழிகளை கசக்கியபடி சொன்னாள்.

"அவர் தான் என்ர கணவர்...!"

**ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்.**

# புதிய பரம்பரை

வீட்டுக்குள் கால்வைத்ததுமே விறாந்தையில் கிடந்த சாய்மனைக்கதிரையை இழுத்துப் போட்டு 'முருகா' என்று சாய்ந்தார் முத்தையா.

அவரின் குரல் அந்த முருகனுக்குக் கேட்டதோ இலலையோ, அடுக்களைக்குள்ளிருந்த அவர் மனைவி பார்வதிக்குத் தெளிவாகவே கேட்டது.

குசினிக்குள்ளிருந்தபடியே விறாந்தையை எட்டிப்பார்த்த பார்வதிக்கு சால்வையால் முத்தையர் துடைத்துக் கொள்வதுடன் கவலையின் சுவடுகளையும் துடைத்துக்கொள்ள எத்தனிப்பது போல்தோன்றியது... "இந்த வெயிலுக்குள்ள ஒவ்வொருநாளும் 'டியூட்டி' மாதிரித் தபாற்கந்தோருக்குப் போய் அலைய வேண்டுமே! தபால்வந்தால் வீட்டுக்கு வரும் தானே!" என்று பார்வதி குரல் கொடுக்கவும்,

"எங்கடை நாட்டிலதான் மாமி தபாற்கந்தோர். இங்கை 'போஸ்ட் ஆபீஸ்'" என்று மருமகள் இடைமறித்துத் திருத்தம் சொன்னாள்.

"ஓமோம் போஸ்ட் ஆபீஸ் என்றால் தான் தமிழ்நாட்டில தமிழ்!" என்று எரிச்சலுடன் கிண்டலாகச் சொன்ன பார்வதி, "எங்கள் பிள்ளைகளுக்குத்தானப்பா, தாய் தகப்பனுக்குக் கடிதம் போடவோ, கவனிக்கவோ, மனமுமில்லை நேரமும் இல்லாமல் கிடக்குது!" என்று வயிற்றெரிச்சலைக் கொட்டினாள்.

"போஸ்ட் ஆபீஸ்' என்ற தமிழ்நாட்டுத் தமிழ் பற்றி மனைவி கிண்டல் செய்தது அந்தக்களைப்பிலும் முத்தையரின் முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது. அவள் தொடர்ந்து மக்களைப்பற்றிக் கூறிய வார்த்தைகள் அவரின் நெடுமூச்சில் புன்னகையைக் கரைத்தது.

"ஐயாவும் இப்படித்தான் அந்த நாளில் எனது கடிதத்தையும் பணத்தையும் எதிர்பார்த்துத் தபாற்கந்தோருக்கு வெய்யிலிலும் மழையிலும் அலைந்து திரிந்து மனம் நொந்திருப்பார்!" முத்தையர் மீண்டும் நெடுமூச்செறிந்தார்.

"இவனை நம்பி நாங்கள் தனியாக வீடு எடுத்திருக்காமல், அகதிகளோடு அகதிகளாக முகாம்களுக்கே போயிருக்கலாம்!" என்று மீண்டும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திய பார்வதி, "குடிக்கிறதுக்கு ஏதும் தரட்டோ?" என்று கணவனைக் கேட்டாள்.

"எதுவும் வேண்டாம்" என்று கையாலேயே சைகை காட்டிய முத்தையர் மீண்டும் சால்வையால் முகத்தையும் நெஞ்சையும் துடைத்துக் கொண்டார்.

நெஞ்சுக்குள் வேகிற நெருப்புத்தான் வெளியில் ஆவியாக வியர்வையைக் கொட்டுகிறதோ?

முத்தையர் குடும்பம் தமிழ்நாட்டுக்கு அகதிகளாக வந்து ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இலங்கை அரசபடைகளின் தாக்குதல்கள் விமானக் குண்டுவீச்சு, ஹெலிச்சூடு, ஷெல் அடி என்று பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல அடுத்து தாங்களும் பாதிக்கப்படலாம் என்று அஞ்சியவர்களும், பட்டாளம் வந்தால் வளர்ந்த பிள்ளைகளை என்ன செய்வார்களோ என்று பயந்தவர்களும் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு வந்தனர்.

முத்தையரின் மூத்தமகனும் மருமகளும் பார்ப்பதற்கு நல்ல தோற்றமுள்ள இளவட்டங்கள். இவர்களிருவரையும் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதே நெருப்பை மடியில் கட்டிக் கொண்டிருப்பதைப் போலத் தான் என்று அடிக்கடி பார்வதி சொல்லிக் கொண்டிருப்பாள்.

'அகதிகளோடு அகதிகளாக நாங்களும் இந்தியா போனால் கோயில் குளங்களையும் பார்த்துக் கொண்டு துணிமணிகளும் வாங்கிக் கொண்டு இரண்டு மூன்று மாதங்களில் திரும்பிவிடலாம் என்ற நப்பாசையும் பார்வதிக்கு ஏற்பட்டது.

திடீரென ஒருநாள் யாழ்நகரம் மீது கண்மூடித்தனமாக குண்டுகள் வீசப்பட்டன.

முத்தையர் வீட்டுக்கு முன்பக்கத் தெருவில் கன்னாதிட்டி வீதியில் இரண்டு வீடுகள் சேதமடைந்ததும், பின்புறத்தில் நாவலர் வீதியில் அரசடிச் சந்தியில் மூன்று வீடுகள்



சேதமடைந்ததுடன் மூவர் உயிரிழந்ததும், முத்தையரையும் வள்ளத்தில் அக்கரை போய்ச் சேர்ந்தாலென்ன என்று சிந்திக்க வைத்தது.

"பிள்ளைகளையெல்லாம் பலிகொடுக்கத் தான் இந்தப்பாவி மனுசன் வீட்டைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கப் போறார்!" என்று பார்வதி இரைந்தாள்.

இதன் பின்னர் முத்தையர் எடுத்த முயற்சியினால் நால்வர் கொண்ட முத்தையர் குடும்பம் தொன்னூறாம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி அதிகாலை இராமேஸ்வரத்தில் உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு வந்திறங்கியது.

இராமேஸ்வரத்தில் கிடைத்த அன்பான வரவேற்பில், குண்டுச் சத்தம் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களையெல்லாம் மறந்து நிம்மதியாகப் பெருமூச்செறிந்தது.

"அகதிமுகாமுக்குப் போகிறீர்களா?" என்று இராமேஸ்வரத்தில் அதிகாரிகள் கேட்ட பொழுது "இல்லை எங்களுக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். அவர்களுடன் போய்த்தனியாகத் தங்கியிருக்கப் போகிறோம்" என்று மூத்த மகனே பதில் சொன்னான்.

"அகதி முகாம்களில் பலகுழுக்களையும் சேர்ந்த பலதும் இருக்கும். வீண்சுறட்டு!" என்று பார்வதி சொன்னதை முத்தையரும் ஏற்றுக்கொண்டார்.

மூத்த மகனின் யோசனையின்படி திருச்செந்தூரில் அவன் நண்பர்கள் மூலம் வீடு வாடகைக்கு எடுத்து குடியமர்ந்த போது பார்வதியும் முத்தையரும் செந்திலாண்டவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

ஜேர்மனியிலுள்ள மகனுடன் முத்தையர் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, நாங்கள் உயிர்த் தப்பி தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தது பற்றி அவன் மகிழ்ச்சி தெரிவித்தான். "உயிருள்ளவரை உங்களைக் கவனிப்பேன்." என்று கடிதம் எழுதினான். பணமும் அனுப்பினான்.

'பத்துமாதங்கள் தானே அம்மா என்னை வயிற்றில் சுமந்தாள்' என்று நினைத்தானோ என்னவோ பத்து மாதங்களின் பின் இன்று வரை அவனிடமிருந்து முத்தையருக்கு பணமும் இல்லை கடிதமும் இல்லை.

முத்தையர் வீட்டில் அடுப்புப் புகையுடன் வயிறும் நெஞ்சும் புகைந்து கொண்டிருக்கின்றன.

"சார், உங்களுக்கு நாளை கடிதம் வரும். இன்று இல்லை!" என்று தபாற்சேவகர் ஆறுதல் சொல்லுகிற அளவுக்கு திருச்செந்தூர் தபால் ஊழியர்கள் முத்தையருக்கு நன்குபழக்கமாகி விட்டனர்.

இன்றும் முத்தையர் தபாற் கந்தோரிலிருந்து ஏமாற்றத்துடன் களைத்துப் போய் திரும்பி வந்த போது தான் 'ஏன் வீணாக அலைவான்?' என்று பார்வதி நம்பிக்கையிழந்த நிலையில் கூறினாள்.

"இவனுக்குப் பிறகு ஜேர்மனிக்குப் போன அம்பிகாபதியின் மகன் என்னமாதிரிக் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்திட்டான். சாப்பாட்டுக்கே கஸ்ரப் பட்டதுகள். இப்ப எத்தனை வீடுகள் ஊரிலே வாங்கியிருக்கினம். அந்தச் சுப்பையாவின் மச்சான் ஒருவன் வெளிநாட்டுக்குப் போய் இப்ப சுப்பையாவின் நாலு பிள்ளைகளும் வெளிநாடுகளில்..."

இன்னும் பட்டியல் நீண்டு போகும் என்பதையுணர்ந்த முத்தையர் மெதுவாக அடுக்களைப்பக்கம் போனார்.

'வாழ்க்கையில் சிறுவயதுமுதல் பல சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்த நான் பிற்காலத்திலாவது பிள்ளைகளால் நிம்மதி பெறலாமென்று கனவு கண்டேன்.

ஐயாவைப்போல் என்னைப்போல் என் பிள்ளைகளும் பிற்காலத்தில் கவலைப்பட்டுக் கண்ணீர் விடக்கூடாது.'

முத்தையர் மனதுக்குள் இப்படி உறுதி செய்து கொண்டர்.

"யோசிச்சு யோசிச்சு என்னத்தைக் கண்டது. வியாதிகளைத் தேடினது போதும் எழும்பி வாருங்கோ சாப்பிட!" என்று பார்வதி விடுத்த அழைப்பு முத்தையரை தட்டி எழுப்பியது.

"புதிய பரம்பரை உருவாக வேண்டும்!" என்று வாய்விட்டுச் சொல்லியபடியே முத்தையர் எழுந்தார்.

**எஸ்.எம்.ஜி.**

## இலக்கிய நயம்

# மனவெளியில் ஒளிசெய்தாள்...

சந்துருவும் மகிழ்நனும் வயல் வரப்போரம் அமர்ந்திருந்தார்கள். மாலை வானத்தினதும், பட்சிகளினதும் ஜாலவித்தையில் கண்களையும், காதுகளையும் செலுத்தி மனதை இழந்திருந்தார்கள்.

இயற்கையின் அழகுப் படுதாவை, வார்த்தைகள் பேசிக்கிழித்துவிடக் கூடாது என்ற அக்கறையில் பேச்சை நிறுத்தியிருந்தார்கள்.

கீச் கீச்சென்ற இனிய ஒலிகள்... அழகிய வானம்... வெப்பக் கதிர்கள் விலகிய புளுகில் சிலுசிலுத்துக் கிளம்பிய தென்றல்... அனைத்தையும் தங்கள் புலன்களால் உள்நிறைத்த புளகத்தில் சிலிர்த்தார்கள் இருவரும்.

மனசிரண்டும் மகிழ்ச்சியில் தளும்பின.

முதலில் மௌனத்தைக் கலைத்தான் சந்துரு.

"மகிழ்! அதோ பார். கோகிலா தலையைச் சாய்த்துக் கொண்டு குறும்பு சொல்வாளே... அதுபோலவே தலையைச் சாய்த்து ஏதோ சொல்கிறது அது..."

அவன் கைநீட்டிய திசையில் கவனித்துவிட்டுச் சிரித்தபடி மகிழ்நன் சொன்னான்: "உன் கண்ணுக்கு என்ன நடந்தது? அது கோகிலம் இல்லை, வேறுஏதோ ஒரு சின்னக் குருவி..."

அதைக் காதில்வாங்கிக் கொள்ளாதவனாக, சந்துரு தரையில் மல்லாந்து படுத்தான்.

"இப்படி மஞ்சளும் சிவப்பும் கலந்த மாலை நேரத்து நிறம்தான் என் கோகிலாவும்" என்றான். சற்றுக் கழித்து,

"காலையும் நீயே மாலையும் நீயே
காற்றும் நீயே கடலும் நீயே..." என்று பாடினான்.

"என்ன ஆகிவிட்டது உனக்கு?" என்று கவலையாக முகத்தை வைத்துக் கொண்டு, அவன் நெற்றியில் கைவைத்துப் பார்த்தான் மகிழ்நன். "உடம்பில் சூடு இல்லை. உள்ளேதான் என்னவோ..." என்று இழுக்க...

"பித்தம்" என்றான் சந்துரு.

சற்றுநேரம் மௌனமாயிருந்துவிட்டு,

"அதோ பார் கடலில் முழ்கும் சூரியனை. சூடு குறைந்து, அழகால் கண்கூசச் செய்கிறான். கோகிலாவும் இப்படித்தான். அவளை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மிதமிஞ்சிய ஒளியில் கண்கள் வேறு பொருட்களைப் பார்க்க முடியாதது போல அவளைப் பார்த்தாலும் ஆகிவிடும்...."

"ம்.. கடும் நோய்தான்" என்றான் மகிழ்நன்

இவனைச் சட்டை செய்யாமல் படுத்தபடியே பாடத் தொடங்கினான் சந்துரு.

"நெரித்த திரைக் கடலில்
நின் முகங் கண்டேன்!
நீல விசும்பினிடை
நின் முகங் கண்டேன்!
திரித்த நுரையினிடை
நின் முகங் கண்டேன்!
சின்னக் குமிழிகளில்
நின் முகங் கண்டேன்!
பிரித்துப் பிரித்து நித
மேக மளந்தே
பெற்றதுன் முகமன்றிப்
பிறிதொன்றில்லை...!"

"பாரதியைப் போலவே உனக்கும் பார்த்த இடமெல்லாம் ஒரு பாவைதான் தெரிகிறாளா? இப்படிப் பார்க்கின்ற எல்லாவற்றையுமே இறையாயிக் காண்பது பக்தியின் உச்சம்."

"இம்... காதலுக்கும் அதுதான் மிச்சம். கண்டு கேட்டு உண்டு உயிர்த்து ஊற்றறியும் ஐம்புலனும் ஒரு பெண்ணிடத்திலேயே மையங் கொண்டிருக்கும் பித்து நிலையைத்தான் கடவுளைத் துதிப்பவர்களும் கொண்டிருக்கிறார்கள்...

சுவைமை, இசைமை, தோற்றம்,
நாற்றம், ஊறு
அவையும் நீயே, அடுப்போர்
அண்ணால்!



அவை அவை கொள்ளும் கருவியும்
நீயே;
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே..."
என்று பெருங்குரலெடுத்துப் பாடினான்.

"போதும் போதும்... தன் மகளின் பித்துநிலைக்காக இரங்கிய நம்மாழ்வாரின் துன்பம் போலத்தான் இப்போது நானும் பாடவேண்டும். அவர் மகள், சந்திரனைக் காட்டி மணிவண்ணனே என்கிறாள்; அசையாமல் நிற்கும் மலையைப் பார்த்து நெடுமாலே வா என்று கூவுகின்றாள்; மழைபெய்யும் மேகத்தைக் கண்டுவிட்டால் நாராயணன் வந்துவிட்டான் என்று கூத்தாடுகின்றாள்.... 'என் கோமளத்தை இவ்வாறு மையல் கொண்டு பிதற்ற வைத்துவிட்டவன் திருமாலே' என்று கடவுளைக் குற்றவாளிக் கூண்டில் அவர் நிறுத்துமாற் போல உன் பித்தத்திற்கு யாரைக் கூண்டில் நிறுத்துவது?

அந்த கோகிலாவையா?"

"ஆமாம். என்னுள்ளத்தில் தன்னுருவம் இட்ட எழில் மங்கை, அந்த மின்னொளியாள் கோகிலாவைக் கூட்டி வா இங்கே..."

"டேடே... சுய நினைவுக்கு வா.. உண்மையாகவே உனக்குச் சிரசில் அடித்துவிடப் போகிறது. எழும்பு வீட்டுக்குப் போகலாம். நெற்றியில் திருநீறு பூசிக்கொண்டு படுத்தாயானால் எல்லாம் சரியாகிவிடும்."

"மகிழ்... என் மனசெல்லாம் களி நிரம்பித் துள்ளுகிறது. என் இதயத்துள் நுரைத்துப் பொங்கும் கள்ளை, அதன் சுவையை உன்னால் உணர்ந்துகொள்ள முடியாது. இதோ... என் மனதை நெகிழ்விக்கும் தாகூரின் கவிதை ஒன்றைக் கேள்:

## தருவது முழடில்யன்

"எனக்கு அருகில் இருப்பவர்கள், எல்லோரைக் காட்டிலும் அதிக அருகில் இருப்பவள் நீதான் என்பதை அறியமாட்டார்கள்.

என்னிடம் பேசுகிறவர்கள், நீ பேசாத வார்த்தைகள் தான் என் நெஞ்சில் நிறைந்திருக்கின்றது என்பதை அறியமாட்டார்கள்.

என் பாதையில் என்னுடன் கூட்டமாக நடந்து வருகிறவர்கள், நான் உன்னுடன் தான் தனியே நடந்து போய்க் கொண்டிருக்கிறேன் என்பதை அறிய மாட்டார்கள்.

என்னை நேசிப்பவர்கள், அவர்களுடைய நேசம் உன்னைத்தான் என் இதயத்துக்குக் கொண்டுவருகிறது என்பதை அறியமாட்டார்கள்...."

மகிழ்நனுக்கு சந்துருவின் உள்ளக் களிப்பை புரிந்து கொள்ள முடிந்தது. 'கோலநிலா வந்திங்கே கொஞ்சுகின்ற இரவில் கொலைபுரியக் காத்திருக்கும் காதலொடு நான்தான் சோலை நடுவே மிகவும் துடிக்கின்றேன்; இதனைத் தோகையிடம் போயுரைக்க எவருள்ளார்....' என்ற பாரதிதாசன் பாடலில் வரும் காதலனைப் போல களிப்பில் துடிக்கும் இதய அவஸ்தையையும், கவலையில் இனிக்கும் உணர்வின் பொங்கலையும் அனுபவிக்கிறான் நண்பன் என்று தெரிந்து கொண்டான். தன்னை மறந்த ஆனந்த லாகிரியில் சந்துரு பாடுவதைக் கேட்டான் திரும்பிப் பார்த்தான், படுத்திருந்த சந்துருவின் கண்களின் ஓரத்தால் நீர்த்துளிகள் உதிர்ந்துகொண்டிருந்தன.

**'நாற்றிசையின் சித்திரத்தை**
**மறைத்த இருள், என்றன்**
**நனவிலுள்ள சுந்தரியை**
**மறைக்க வசமில்லை!**
**மாற்றுயர்ந்த பொன்னுருக்கி**
**வடிவெடுத்த மங்கை**
**மனவெளியில் ஒளிசெய்தாள்**
**என்ன தகத் தகாயம்!**
**புன்னையின் கீழ்த் திண்ணையிலே**
**எனை இருக்கச் சொன்னாள்**
**புதுமங்கை வரவு பார்த்**
**திருக்கையிலே, அன்னாள்**
**வண்ணமலர்க் கூட்டத்தில்**
**புள்ளினத்தில் புனலில்**
**வானத்தில் எங்கெங்கும்**
**தன்னழகைச் சிந்திச்**
**சின்னவிழி தழுவும்**
**வகை செய்திருந்தாள்!**

*('எழுதாக்கவிதை'-பாரதிதாசன்)*

## சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா, புனிதமான நட்பை காதலாக நினைக்கும் ஆண்கள் சிலரைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

எ.ஃப்.ரைஸா, கண்டி.

*நட்பைப் போல காதலும் புனிதமானது தானே.*

**★ பாடகர்களான சங்கர் மகாதேவனுக்கும் நித்யாஸ்ரீ மகாதேவனுக்கும் என்ன உறவு?**

ஏ.ஏ.மொஹமட் அஸ்ரின், கல்பிட்டிய.

*இருவருமே சாஸ்திரிய சங்கீதம் தெரிந்த பாடகர்கள் என்பதுதான் மற்றபடி இரண்டு மகாதேவன்களும் வேறு வேறு.*

**★ சிந்தியா, 'வக்கீல் மூளை' என்கிறார்களே அது என்ன?**

ம.திவ்யராணி, கல்லடி.

*"வெள்ளைக் கோழி வெள்ளை முட்டை மிட்டால், கறுப்புக் கோழி என்ன முட்டை மிடும்?" என்று கேட்பது சாதாரண மூளை, "கறுப்புக்கோழி கறுப்பு முட்டையிட்டால், வெள்ளைக்கோழி என்ன முட்டையிடும்?" என்று கேட்டு, அதற்கு 'வெள்ளை முட்டை' என்ற பதிலைப் பெற்று, "கனம் நீதிபதியவர்களே! குற்றவாளியே கறுப்புக்கோழி-கறுப்பு முட்டையிடும் என்பதை ஒப்புக்கொண்டார்" என்று வளைத்துப் பிடிப்பது வக்கீல் மூளை.*

**★ புதிய விக்கெட் கீப்பர் எப்படி?**

எஸ்.திலகேஸ்வரன், கெங்கல்ல.

*சங்கக்கார..... 'சங்கைக்காரதான்!*

**★ ரஜனிகாந்த் பற்றி உமது கருத்து என்ன?**

பா.பாலஸ்ரீதரன், வெள்ளவத்தை.

*அவரது துணிச்சல், இயலளவு எல்லாவற்றையும் மீறியதாக அவர் பற்றிய எதிர்ப்பார்ப்புகள் பின்னப்பட்டு விட்டன. பாவம், 'குருவி தலையில் பனங்காய் சுமந்தது போலத்' திணறுகிறார்.*


*ஒரு கூட்டத்தில் அவரை மேடையில் வைத்துக் கொண்டே ஒரு தயாரிப்பாளர் பேசியிருந்ததை எங்கோ வாசித்தேன். தலை சுற்றுகிறது. அவர் பேசியது இதுதான்:*

*"எங்க பார்த்தாலும் கொலை கொள்ளை என்று நிறைய நடக்குது. ஏன் இப்படி..., இதெல்லாம் தீராதா? என்று சித்தர்கள் சிலரைக் கேட்டேன். அவர்கள் ஓலைச் சுவடியை எல்லாம் புரட்டிப் பார்த்துவிட்டு 'கறுப்பு மனிதன் ஒருவன், மராட்டிய மொழி தெரிந்தவனான ஒருவன் வருவான். 2002வது வருஷத்தில் உலகத்தையே தன் அன்பால் கட்டிப்போட்டு அதன் தலைவனாவான்...' என்று சொன்னார்கள்...." என்று பேசியதை பத்திரிகைகள் பெரிதுபடுத்தி எழுதுகின்றன.*

*'ஆண்டவன் நினைக்கிறான், நான் செய்கிறேன்' என்று அவரும் தன் படங்களில் சொல்கிறார்.*

*ஆனால், எம்.ஜி.ஆர். போல, சாதாரண மக்களிடம் இறங்கிச் சென்று அவர்களிடம் அன்பு செலுத்துகிறவராக ரஜினிகாந்த் இல்லை. சாதாரண மக்கள் நலனுக்காக அவமானங்களையும் வலியையும், பழிப்புரைகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடியவராக இல்லை. விலகி ஓடுபவராகவே இருக்கிறார்.*

*மக்கள் திலகம் மறைந்தும் மக்கள் மனங்களில் வாழ்பவராக இருக்கிறார். சூப்பர் ஸ்டார் இருந்தும் மக்களிடமிருந்து மறைந்து கொள்பவராக இருக்கிறார்.*



**★ 'அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா' என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, என்ன அது?**

சி.இமயவரம்பன், கண்டி.

*லொஜிக்கே இல்லாத பழமொழி. சித்தப்பா ஷேவிங் செய்து கொண்டால் அத்தையாகிவிடுவாரா?*

**★ சிந்தியா, 'இலட்சியமே வாழ்வின் உயிர்நாடி' என வாழும் இளைஞர்களுக்கு உங்கள் உபதேசம்?**

எஸ்.சரத்பாபு, அருப்பொல.

*இலட்சியம்.... உயிர்நாடி.... எல்லாம் சரிதான் பிறர் உயிரை எடுக்காமல் இருக்கிறீர்களா,பிறர் வாழ்வைப் பறிக்காமல் இருக்கிறீர்களா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.*

**★ 'குஷி' படத்தில் சிந்தியாவுக்குப் பிடித்த பாடல் எது?**

ஜே.லக்கி, பெரியகல்லாறு.

*'ஒரு பொன்னு ஒன்னு நான் பார்த்தேன் சென்டிமீட்டர் சிரிக்கச் சொல்லிக் கேட்டேன் அவ சிரிச்சா, சிரிப்பில நூறுபேரு செத்துப்போயிட்டா....' பாதாளபைரவி பாடல் மெட்டை இன்றைய இளசுகளும் ரசிக்கட்டும் என்று பெரிய மனது பண்ணி தேவா தந்திருக்கும் பாடல்.*

*பாடலுக்கு குழந்தைத்தனமாக ஜோதிகா செய்திருக்கும் சேட்டைகளும் பிடித்தது.*

**★ சிந்தனை வளர ஒரு வழி சொல்லுங்கள் சிந்தியா?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று 07.

*இடையில் வெட்டாதிருங்கள். அது பாட்டுக்கு வளர்ந்து கொண்டே போகும்.*

**★ ஹாய் சிந்தியா! பெண்களை பூவுக்கு ஒப்பிடுகிறார்களே... பூவில் வாசம் உண்டு, பெண்ணில்...?**

அஸ்.ஃபர்கான், சிலாபம்.

*நேசம்.*

**★ உலகில் விசித்திரமானது எது?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

*காதல்தான்! அடுத்த கேள்விக்கான பதிலையும் பாருங்கள்.*

**★ அன்புக்கும் அடிமைத்தனத்திற்கும் என்ன வித்தியாசம்?**

வாணி மார்க்கண்டு, கிரான்.

*அன்பு வந்துவிட்டால் அடிமைத்தனம் அருகில் எங்கோ வந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம். பி.முருகேசன் என்ற கவிஞர் அந்த அவஸ்தையை இப்படிச் சொல்கிறார்கள்!*

*"என்ன செய்தேனென்று என்னை உன் பார்வை நிழலிலிருந்தும் விரட்டுகிறாய்!*
*என்ன செய்தேனென்று என்னை உன் வெப்ப வார்த்தைகளால் பொசுக்குகிறாய்!*
*என்ன செய்தேனென்று என்னை உன் கொலுசால் அடித்துத் துரத்துகிறாய்!*
*என்ன செய்தேனென்று என்னை சுடுமணற் பாலையில் வெறும் காலில் ஓடச் சொல்கிறாய்!*
*என்ன செய்தால் என்னை*
*உன் பாதவிரல் நக அழுக்கெடுக்க அழைத்துக் கொள்வாய்?"*

**★ பிரச்சனையை பிரச்சனையா எடுக்கிறதால் தான் பிரச்சனை பிரச்சனையாகுது.... பிரச்சனையை பிரச்சனையா எடுக்காட்டில் பிரச்சனையை பிரச்சனையாத் தெரியாது தானே... உங்கள் கருத்து என்ன?**

கே.சந்திரலதா, பூண்டுலோயா.

*படமெடுக்கிற கமெரா படமெடுக்கிற பாம்பையும் படமெடுக்கும்... படமெடுக்காத பாம்பையும் படமெடுக்கும்! ஆனால், படமெடுக்காத கமெராவை படமெடுக்கிற பாம்பு படமெடுக்குமா...? இதுதானுங்கோ என் கருத்து!*

**★ நாட்டின் பிரதான கட்சிகள் இரண்டும், அரசியல் யாப்புத் திருத்தம் குறித்து ஓர் இணக்கத்திற்கு வந்து விட்டனவே. இனி அமைதி வந்துவிடுமா?**

ஜவாத், புத்தளம்.

*இவர்களின் இணக்கம் மகிழ்ச்சிக்குரியது தான் ஆனால், அமைதிக்கு இணங்கவேண்டியது அவர்களல்லவா!*

**★ அதிக பிரச்சனைக்கு முகம் கொடுப்பவர்கள் ஆண்களா, பெண்களா?**

ஜே.எஃப்.பர்வின், நிககொல்லை.

*முகத்துக்கு அதிக பிரச்சனை கொடுப்பவர்களும் பெண்கள்தான்.*

## ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

# அர்ஜுனவின் அரிய சாதனை

இலங்கை கிரிக்கெட் அணி அண்மையில் பாகிஸ்தானுடன் தனது 100வது டெஸ்ட் கிரிக்கெட்டை விளையாடியது. உலகிலேயே இலங்கை அணிதான் குறுகிய காலத்திற்குள் 100 டெஸ்ட் போட்டிகளை விளையாடிய அணி என்ற சாதனையைப் படைத்துள்ளது.



இலங்கை அணி தனது முதலாவது டெஸ்ட்டை இங்கிலாந்துக்கெதிராக 1982ல் விளையாடியது. 100வது டெஸ்ட்டை 18 வருடங்களில் தொட்டுவிட்டது. இதற்கு முன் இந்தச் சாதனையை பாகிஸ்தான் அணி செய்திருந்தது. பாகிஸ்தான் அணி 100வது டெஸ்ட் போட்டியைத் தொட 26 வருடங்கள் பிடித்தது.

100வது டெஸ்ட் போட்டியை நெருங்க தென்னாபிரிக்க அணி 60 வருடங்களும், நியூஸிலாந்து அணி 42 வருடங்களும் மேற்கிந்தியத்தீவுகள் அணி 37 வருடங்களும் அவுஸ்திரேலிய மற்றும் இந்திய அணிகள் 35 வருடங்களும், இங்கிலாந்து அணி 32 வருடங்களும் எடுத்துக் கொண்டன.

ஸிம்பாப்வே அணி 43 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே விளையாடியிருக்கிறது.

இந்நேரத்தில் இலங்கை அணியின் முன்னாள் கப்டன் அர்ஜுன ரணதுங்கவும் அரியதொரு சாதனையை நிலைநாட்டியிருக்கிறார். இலங்கை விளையாடிய முதல் டெஸ்ட்டிலும் 100வது டெஸ்ட்டிலும் கலந்து கொண்டு இதற்கிடைப்பட்ட அதிகளவான போட்டிகளில் விளையாடியவர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். இவர் மொத்தமாக 88 போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்துள்ளார்.

அர்ஜுனவுக்கு முன் இந்தச் சாதனைக்குச் சொந்தக்காரராக இருந்தவர் முன்னாள் இந்திய வீரர் பொலி உம்ரிகர். இவர் இந்திய அணி விளையாடிய முதலாவது டெஸ்ட்டில் இருந்து 59 போட்டிகள் வரை விளையாடியுள்ளார். இந்தியா விளையாடிய 82வது டெஸ்ட் போட்டி வரை கலந்து உம்ரிகர் இந்திய அணிக்காக விளையாடினார்.

அர்ஜுன ரணதுங்கவின் இந்தச் சாதனையை எவராலும் முறியடிக்கப்பட முடியாத ஓர் அரிய சாதனையாகக் கருதப்படுகிறது.

# பங்களாதேஷுக்கு டெஸ்ட் அந்தஸ்து

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்த்தை வழங்கியுள்ளது சர்வதேச கிரிக்கெட் சபை.

இதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் 10வது நாடாக விளங்குகிறது பங்களாதேஷ்.

இலண்டனில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபைக்கூட்டத்தில் பங்களாதேஷுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவர் சபீர் ஹுஸைன் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, தென்னாபிரிக்கா, ஸிம்பாவே ஆகியவை டெஸ்ட் அந்தஸ்தைப்பெற்ற நாடுகளாகும்.

தர்க்கசேசரன் விலைமாதர்களுடன் கொண்ட பெருவிருப்புக் காரணமாக தன் மனைவியையே கொன்றுவிட்டு அவளுடைய நகைகளை அபகரித்துக் கொண்டு, எவருக்கும் தெரியாமல் ஓடிவிட்டான். இதனால் தான் 'ஆண்களையே நம்பக் கூடாது' என்று பெண் கிளி இளவரசனான பராக்கிரமசிம்மனுக்குச் சொன்னது.

பெண்கிளியின் கதையைக் கேட்ட பராகிகரம சிம்மன், தான் வளர்த்த ஆண் கிளியிடம் சென்றான். "ஆண்களையே நம்பக் கூடாது என்று பெண் கிளி ஒரு கதை கூறி விளக்கியது. பெண்களையே நம்பக் கூடாது என்ற நீ சொன்னாயே! அதற்கான காரணத்தைக் கூறி உன்னால் நிரூபிக்க முடியுமா?" என்று கேட்டான்.

### ஆண் கிளி சொன்ன கதை

"நிச்சயமாகக் கூறுகிறேன்!

அரிட்டபுரம் என்ற நாட்டில் கணவர்த்தன் என்றொரு வணிகன் இருந்தான். அவன் கோமுட்டி மரபைச் சேர்ந்தவன். அவனுக்கிருந்த ஒரே மகளை தன் இனமான கோமுட்டி இனத்தவனுக்கு மணமுடித்து வைக்க வேண்டுமென விரும்பினான். அவ்வாறு ஒருவனைக் கண்டு பிடித்து தன் மகளை திருமணம்

மூக்கிலிருந்து வெளிப்பட்ட இரத்தத்தை தனது புடவையால் துடைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டு தன் வீட்டையடைந்தாள். அங்கிருந்த பாக்கு வெட்டி ஒன்றினை எடுத்து, தன் மூக்கிலிருந்து வந்த இரத்தத்தில் தோய்த்துக் கொண்டாள். தன் பெற்றாரை எழுப்பி தன் கணவனே தன் மூக்கை பாக்கு வெட்டியால் வெட்டித் துண்டாடி விட்டதாகக் கூறி, அழுது புலம்பினாள்.

### கணவனை வஞ்சித்த மனைவி

வீட்டிலிருந்தவர்கள் அவளுடைய கதையை நம்பி, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அவள் கணவனை தடிகளாலும் பொல்லுகளாலும் அடித்துத் துன்புறுத்தினர்.

"குய்யோ முறையோ!" என்று கத்திக் கொண்டு எழுந்து நின்றவனை, எதுவித விசாரணையுமில்லாமல் இழுத்துக் கொண்டு அரசரிடம் சென்றானர்.

கணவர்த்தன், அரசரிடம் தன் மகளின் கணவன் அவளுடைய மூக்கை அறுத்து விட்டான் என்று குற்றஞ் சாட்டினான். எதுவுமே தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தவன் மீது இத்தகைய வீண் பழி சுமத்தப்பட்டதைக் கண்டு அவன் துடித்தான்.

"அரசே! நான் நன்றாகத் தூங்கிக்

வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் கணவன் என்ன செய்தாலும் அதைத் தட்டிக் கேட்க மனைவிக்கு எதுவித உரிமையும் கிடையாது," என்று சொன்னார்.

விக்கிரமாதித்தனின் விடையைக் கேட்ட வேதாளம், விக்கிரமாதித்தனின் தோளிலிருந்து பாய்ந்து, தரையில் குதித்தது வேதாளம் ஒடிப் போய் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது.

விக்கிரமாதித்தனும் சற்றும் தளர்ந்து போகாமல் வேதாளத்தின் பின்னால் ஒடிச் சென்று அதனைப் பிடித்து தன் தோளில் சுமந்தவாறு தன் பயணத்தை மேற்கொண்டான்.

### வேதாளம் சொன்ன ஏழாவது கதை

சரபம் என்று ஒரு நகரத்தில் சுக்ரீவன் என்றொரு அரசன் ஆட்சி புரிந்து வந்தான். வீரத்தில் சிறந்தவர்களை அரசன் தன் அரண்மனைக்கு காவலாகத் தேர்ந்தெடுத்தான். அவர்களில் ஒருவன் வீரவர்த்தனன் என்றொருவன். அரசன் வைத்த வீரப்பரிசோதனைப்

# மன்னாதி மன்னன் 14

செய்து கொடுத்தான்.

தம்பதி இருவரும் சில நாட்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். பின்னர் வியாபார நிமித்தம் கணவன் வெளிநாடு புறப்பட்டுச் சென்றான். கணவன் சென்றபின்னர் வேறொரு வாலிபன் மீது இவளுக்குக் கள்ளக் காதல் ஏற்பட்டது.



போட்டிகளலெல்லாம் வெற்றி பெற்றான். இதனால் அவனையே தன் அரண்மனையின் இரவு நேரக் காவலனாக மன்னன் நியமித்தான்.

அன்றொரு நாள் அரசன் தூங்கிக் கொண்டிருந்த போது தொலைவில் ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது. தூக்கம் குழம்பிய நிலையில் அரசன் வீரவர்த்தனனை அழைத்து, "எங்கிருந்தோ ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. நீ போய்ப் பார்த்து அழுவது யார்? அதற்கான காரணம் என்ன என்பதையெல்லாம் விசாரித்துக் கொண்டு வா!" என்று கூறி அனுப்பினான்.

வீரவர்த்தனன் அரண்மனையை விட்டு வெளியே வந்து பார்த்தபோது அங்கு அவனால் எவரையும் காண முடியவில்லை. காது கொடுத்து உற்றுக் கேட்டதில் அந்நகரின் எல்லப்புறத்திலிருந்து ஒரு பெண்ணின் அழுகுரல் வந்து கொண்டிருப்பதைக் கேட்டான்.

சத்தம் வந்த திசையை நோக்கி வீரவர்த்தனன் நடந்தான். அங்கே அழகான ஒரு மங்கை நிலத்தில் கிடந்து அழுது கொண்டிருந்தாள்.

அப்பெண்ணை நெருங்கிய வீரவர்த்தனன் "பெண்ணே நீ யார்? ஏன் அழுது கொண்டிருக்கிறாய்?" என்று வினவினான்.

அந்தப் பெண் "நான்தான் பூமாதேவி. இந்த நாட்டின் அரசனுடைய வலது தோள்தான் என்னுடைய வசிப்பிடம். இன்னும் மூன்று நாட்களில் அரசன் இறந்து போவான். அவ்வாறு நேர்ந்தால் நான் எங்கே வசிப்பேன், என்பதை எண்ணிப் பார்த்தேன். தாங்கமுடியாத துக்கம் மேலிட்டதால் அழுது கொண்டிருக்கிறேன்!" என்று கூறினாள் அப்பெண்.

வீரவர்த்தனன், அப்பெண்ணிடம், "பூமாதேவியே, எங்கள் மன்னன் இறந்தால் இந்த

சில நாட்களில் கணவன் வந்து சேர்ந்தான். இருப்பினும் தன் கணவனுக்குத் தெரியாமல் இந்தப் பெண் தன் தோழியின் துணை கொண்டு, தன் கள்ளக் காதலனை இரவு வேளைகளில் தன் வீட்டுக்கு அழைத்து வரச் செய்வாள். கணவன் தூங்கியபின் கள்ளக் காதலனுடன் அவள் சல்லாபித்துக் கொண்டிருப்பாள்.

ஒருநாள் இரவு தன் கணவன் தூங்கியதும் கள்ளக் காதலனை அழைத்து வந்து, வீட்டின் மேற்குப் புறம் உள்ள வெளித் திண்ணையில் இருத்துமாறு தன் தோழியிடம் தூது அனுப்பினாள். அவனும் தோழி கூறியபடி வெளித் திண்ணையில் வந்து பதுங்கியிருந்தான்.

இந்த வேளையில் ஊர்காவற் பணியில் ஈடுபட்டிருந்த இரு காவலர்கள் அந்த வீட்டுத் திண்ணையில் பதுங்கியிருந்தவனைப் பார்த்து, அவனைப் பிடிக்கச் சென்றனர். அவன் ஓட்டமெடுத்தான். அவனை தடுத்து நிறுத்த இரு காவலர்களும் எடுத்த முயற்சி பலிக்கவில்லை. அவன் திருடனாகத்தான் இருக்கவேண்டும் என்று கருதிய காவலர்கள், அவன் மீது ஓரம்பைத் தொடுத்தனர். அந்த அம்பு துளைத்த காயத்திலிருந்து இரத்தம் பெருக குற்றுயிராக விழுந்து துடித்துக் கொண்டிருந்தான் அவன்.

இந்தக் கதை தெரியாத அந்தப் பெண்ணிடம் தோழி, அவளுடைய கள்ளக் காதலன் வந்து திண்ணையில் இருப்பதாகக் கூறிவிட்டாள். அவனைத் தேடிக் கொண்டு அவள் வெளியே வந்து பார்த்தாள். திண்ணையில் தன் காதலனைக் காணவில்லை. ஆகவே அவனைத் தேடிக் கொண்டு சிறிது தூரம் நடந்து சென்றாள்.அப்போது அவளுடைய பெயரை உச்சரித்த வண்ணம் அவன் மற்றொரு கட்டடத்தின் முன்பாக அமர்ந்திருப்பதைக் கண்டாள். ஆசையினால் உந்தப்பட்ட அவள் அவனருகே ஓடிச் சென்று, "இதோ நான் தான் வந்துவிட்டேனே!" என்று கூறிய வண்ணம் அவனை முத்தமிட்டாள்.

மரண வேதனையால் அவதிப்பட்ட அவனுடைய வாயிக்குள் அவளுடைய மூக்கு புகுந்ததும், அவன் உயிர் பிரியும் தறுவாயில் வையை மூடினான். அப்போது அவளுடைய மூக்கு முற்றாகத் துண்டாடப்பட்டு அவனுடைய வாய்க்குள் கிடந்தது. அப்போதுதான் தன் கள்ளக் காதலன் உயிர் பிரிந்து விட்டது என்ற உண்மை அவளுக்குத் தெரிந்தது.

கொண்டிருக்கும்போது பலர் சேர்ந்து என்னைத் தாக்கினார்கள். நான் எழுந்தபோது, என் மனைவியின் மூக்கிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது. எனக்கு என்ன நடந்தது என்றே தெரியாது. அவளுடைய மூக்கை நான் அறுக்கவில்லை. அதற்கான தேவையும் இருக்கவில்லை!" என்று தனது நிலையை விளக்கி, தான் நிரபராதி என்று வாதிட்டான்.

அரசன் அவனுடைய பேச்சைக் கேட்பதாய் இல்லை. அவனைக் கொண்டு போய்த் தூக்கிலிட்டுக் கொன்று போடுமாறு காவலர்களுக்கு கட்டளையிட்டான்.

இந்தத் தீர்ப்பு கூறப்படும் போது முதல் நாளிரவு வீதிக் காவல் சென்ற இரு காவலர்களும் அங்கு வந்து சேர்ந்தனர். தங்களுடைய பாணத்துக்குப் பலியான அந்த வாலிபனின் உடலை அவர்கள் பரீட்சித்துப் பார்த்துள்ளனர். பின்னர் அந்த உடலையும் தூக்கிக் கொண்டுவந்து அரண்மனைக்கு முன்புறமாகக் கிடத்தி இருந்தனர்.

அரசருடைய தீர்ப்பைக் கேட்டு அநீதியான தீர்ப்பை அரசர் வழங்கிவிட்டாரென்று அதிர்ந்து போன அவ்விருவரும் முதல்நாளிரவு நடைபெற்ற சம்பவத்தை அரசருக்கு எடுத்துக் கூறினார்கள். இறந்தவனின் வாய்க்குள் அவளுடைய மூக்கின் ஒரு பகுதி அப்படியே இருப்பதாகவும் தெரிவித்தனர்.

அரசர் தனது அமைச்சர் ஒருவரை அனுப்பி இறந்தவனின் பிணத்தைப் பரிசோதித்து விட்டு வரும்படி கட்டளையிட்டார். அமைச்சரும் அவனுடைய வாய்க்குள் அவளுடைய மூக்கின் ஒரு பகுதி இருப்பதாகச் சொன்னார்.

கடும் கோபம் கொண்ட அரசர் அந்தப் பெண்ணை உயிருடன் தீயில் போட்டு எரித்து விடுமாறு தண்டனை கொடுத்து, அவளுடைய கணவனை விடுதலை செய்தார்.

ஆகவேதான் பெண்களை நம்பக்கூடாது என்று ஆண்கிளி சொன்னது.

இக்கதையைக் கூறிய வேதாளம் விக்கிரமாதித்த மன்னனிடம், "மாமன்னரே! இரண்டு கிளிகளும் சொன்ன கதைகளைக் கேட்டீர்கள். இக்கிளிகள் கூறியதில் எந்தக் கிளி கூறியதில் நியாயம் இருக்கிறது?" என்று கேட்டது.

விக்கிரமாதித்தன் உடனடியாகவே பதில் சொன்னார். "ஒரு குடும்பத்தில் மனைவியை விட கணவனுக்குத்தான் அதிக உரிமை இருக்கிறது. கணவன் தன் மனைவியை என்ன

**இராஜகுமாரன்**

நாடு குட்டிச் சுவராகிவிடும். மக்கள் பசியாலும் துன்பத்தாலும் மடிவார்கள். ஆகவே, மன்னர் இறவாமல் இருப்பதற்கு ஏதாவது மார்க்கம் சொல்வாயா?" என்று கேட்டான்.

பூமாதேவி "மன்னன் மரணமடையாமல் பாதுகாக்க ஒரு வழி இருக்கிறது. ஆனால் அதனை நிறைவேற்ற எவருக்கும் தைரியம் கிடையாது!" என்று கூறினாள்.

"எத்தகைய வழிமுறை இருந்தாலும் நான் அவற்றைச் செய்து மன்னரைக் காப்பாற்ற என்னால் முடியும். ஆகவே என்னிடம் கூறு!" என்று திடமாக எடுத்துரைத்தான். வீரவர்த்தனனுக்கிருந்த பொறுப்புணர்ச்சியை மெச்சிய பூமாதேவி. "இங்கிருந்து சற்றுத் தொலைவில் துர்க்கையம்மன் கோயில் இருக்கிறது. அங்கு குடும்பத்தில் மூத்த ஆண்பிள்ளையாகப் பிறந்த பதினாறு வயதுடைய ஒருவரை துர்க்கையின் பீடத்தில் பலியிட்டால் மட்டுமே அரசன் மரணமடையாமல் இன்னும் சில காலம் உயிர் வாழ முடியும்!" என்று கூறியது.

பூமாதேவி கூறிய கதையைக் கேட்ட வீரவர்த்தனன் மகிழ்ச்சியடைந்தான். 'எப்பாடுபட்டாவது துர்க்கைக்கு இந்தப் பலியை நான் கொடுத்து மன்னனின் உயிர் காப்பேன்' என்று கூறிக் கொண்டு தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். *(மன்னன் வருவான்...)*

## பதிலடிகள் பலவிதம்



வசதியான வீட்டுப் பையன் ஒருவன் பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு ஊரைவிட்டு வேறு ஊருக்கு ஓடி வந்தான். ஒரு ஹொட்டலில் சிப்பந்தியாக வேலைக்குச் சேர்ந்தான்.

திடீரென்று ஒரு நாள் அவனது நண்பன் ஒருவன் அந்த ஹொட்டலுக்கு வந்தான். சிப்பந்தியாக இருப்பவனைப் பார்த்து விட்டு,

"ப்ச், நீ இந்த மாதிரி இடத்தில் வேலை செய்வதைப் பார்த்தால் வருத்தமாக இருக்கிறது." என்று கிண்டலாகச் சொன்னான்.

உடனே இவன்,

"நீ இந்த மாதிரி இடத்தில் வந்து சாப்பிடுவதைப் பார்த்தால், எனக்கு உன்னை விட மிகவும் வருத்தமாக இருக்கிறது!" என்றான்.

☺

விளையாட்டு மைதானத்தில் இரண்டு சிறுவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன்,

"டேய், எங்கப்பாவுக்குக் கோபம் வந்தா புலி மாதிரி. பசிச்சா கழுகு மாதிரி. தொப்பையைக் குறைக்க மாலையில் ஓடினால் குதிரை மாதிரி..." என்று சொல்லிக் கொண்டே போக மற்றச் சிறுவன் கேட்டான்,

"அப்படியென்றால் உனது அப்பாவைப் பார்க்க டிக்கெட் எவ்வளவு?" என்றான்.

☺



ஓர் ஓவியர் தெரு வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கே சுவரில் ஒருவன் விளம்பரத்திற்காக ஓர் உருவத்தை வரைந்து கொண்டிருந்தான். அவன் புதிதாகக் கூலிக்கு வரையும் ஓவியன். அதைப் பார்த்த ஓவியருக்கு எரிச்சல் தாங்கமுடியவில்லை.

"இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டார்.

"நான் மீன் படம் ஒன்று வரைந்து கொண்டிருக்கிறேன்!" என்றான்.

"மீனா? என்ன மீன்?" என்று கேட்டார் ஓவியர்.

"சுறாமீன்!" என்றான் அவன்.

"சுறா மீனா? சுறா மீனை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?" என்று ஓவியர் கேட்டார்.

"இல்லை!" என அவன் கூற, ஓவியர் கோபத்துடன்;

"பார்த்திராத ஒன்றை எப்படி உன்னால் வரையமுடியும்?" என்றார்.

"ஐயா, நீங்கள் கடவுள் படம் தேவதைகள் படம் என்று வரைகிறீர்கள். அவர்களையெல்லாம் பார்த்தா வரைகிறீர்கள்?" என்று கேட்டான்.

☺

ஓர் ஐயர் வீட்டு வாசலில் கழுதை ஒன்று இறந்து கிடந்தது.

உடனே ஐயர் மாநகரசபைக்கு ஃபோன் செய்து இறந்த கழுதையை அப்புறப்படுத்தும்படி கூறினார்.

சிறிது நேரத்தில் மாநகரசபை ஊழியர்கள் வந்தார்கள். வந்த ஊழியர்களில் ஒருவர் ஐயரிடம் கிண்டலாக,

"நீதான் இறந்தவர்களுக்கு ஈமக்கிரியைகள் செய்பவராயிற்றே. நீரே அந்த முறைப்படி கழுதையின் இறுதிச் சடங்கை நிறைவேற்றியிருக்கலாமே" என்றார்.

அதற்கு ஐயர்,

"செய்திருக்கலாம் தான். ஆனால் பிரேதத்தின் உறவினர்களுக்குத் தெரிவிக்காமல் எப்படிச் செய்வது என்று தான் உங்களுக்குத் தகவல் கொடுத்தேன்!" என்றார் அதே கிண்டலுடன்.

☺



ஒரு மருத்துவர் வீட்டில், தண்ணீர் வரும் குழாய் பழுதடைந்து விட்டது. அதைத் திருத்த வந்த குழாய் பொருத்துநர் வேலை முடிந்ததும் 200 ரூபாய் கூலி கேட்டார்.

"நானே ஒரு நோயாளியிடம் 100 ரூபாய் தானே கட்டணம் அறவிடுகிறேன். நீ இப்படிக் கேட்கிறாயே?" என்றார் மருத்துவர்.

"அது சரி, ஆனால் நான் என் வேலைக்கு இரண்டு வருடம் உத்தரவாதம் கொடுக்கிறேனே?" என்றார். அந்தக் குழாய் பொருத்துநர்.

☺

மூன்று சிறுவர்கள் கூடியிருந்தபோது, அவர்களில் ஒரு சிறுவன்,

"எங்கப்பா பெரிய பணக்காரர். என்னை இங்கிலாந்திலுள்ள ஈடன் பாடசாலையிலும், பிறகு ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்திலும் படிக்க வைக்கிறேன் என்று என்னிடம் சொல்லியிருக்கிறார்!" என்றான்.

உடனே இன்னொரு சிறுவன்,

"எங்கப்பா தான் பெரிய பணக்காரர். என்னை இலண்டனிலுள்ள ஹாரோ பாடசாலையிலும், பின் கேம்ப்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் படிக்க வைப்பதாகச் சொல்லியிருக்கிறார்!" என்றான்.

அதற்கு மூன்றாவது சிறுவன்,

"ம்ஹூம்... எல்லாரையும் விட எங்கப்பாதான் பெரிய பணக்காரர். நமக்கு இருக்கிற வசதிக்கு நீ படிக்கவே தேவையில்லை. முட்டாளாகவே இரு என்றார்!" என்று சொன்னான் அலட்சியமாக.






பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன

166, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331


## மும்பை சாதனை

→ 'அபோட்' என்ற இந்திப் படத்தில் அறிமுகமானாலும் 'தேஸாப்' படத்தில் வரும் 'ஏக் தோ தீன்..' பாடல் காட்சியில் ஆடிய நடனம் மாதுரி டிக்ஸித்தை இந்தித்திரையில் முன்னிறுத்தியது. அதன் பின் 'கல்நாயக்' படத்தில் வரும் 'சோளிக்கே பீச்சே....' பாடலுக்கு ஆடிய சிறப்பான நடனம் மாதுரியை உச்சாணிக் கொம்பில் வைத்தது.

அதன் பிறகு இவர் நடித்த படங்களெல்லாம் வெற்றிப்படங்களாக சக்கை போடு போட தனது சம்பளத்தை ஒரேயடியாக உயர்த்தி விட்டார். இந்தியத் திரையுலகில் அதிக ஊதியம் பெற்றதால் இந்த மும்பை நடிகையின் பெயர் கின்னஸிலும் இடம் பெற்றுள்ளது.







SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு


323657




## ஆஹா ஆஹா

← உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்தி விட்டு அவை உடனடியாக விற்றுத் தீர விதவிதமான விளம்பரங்களைச் செய்து வருகிறார்கள் உற்பத்தியாளர்கள். படத்தில் கறுப்புக் கண்ணாடிகளை அணிந்து கொண்டு ராஜபார்வை பார்க்கும் இந்தக்கோழிக் குஞ்சுகள் படம் விளம்பர ஒன்றிற்காக எடுக்கப்பட்டது.

'ஆஹா ஆஹா' என மறுபடி மறுபடி பார்க்கத்தூண்டும் இந்த விளம்பரப்படம் நவீன கம்பியூட்டர் வசதியால் வடிவமைக்கப்பட்டுள்ளது.



'U' 'R' INVITED

Date: 02.04.2000

PAY *Your presence and not in*

RUPEES *on the occasion of my marriage with*

Mr.M.Dharmalingam, M.A.,

VENUE

Time: 07.30 - 09.00 hrs.

Annapurna Thirumana Mahal,
Third Street,
Mannargudi - 614001.

K.PAVANRANI,

Ph.: 04367 - 25275

(Please see back for details)

## புதுமை

← பார்த்ததும் வங்கிக் காசோலை என்று எண்ண வைக்கும் இது காசோலையே அல்ல. ஒரு திருமண அழைப்பிதழ் என்றால் கீழே இருக்கும் பறவைகள் போல 'ஆவ்வ்' என ஆச்சரியத்தால் வாய்பிளந்து நிற்பீர்கள்.

இத்திருமண அழைப்பிதழ் வங்கியில் பணிபுரியும் மணமகளான பவன்ராணியால் அச்சிடப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அதிராமப்பட்டினத்தில் உள்ள வங்கியில் பணிபுரியும் பவன்ராணி, தனது திருமணத்திற்கு இந்தப் புதுமையான அழைப்பிதழை அச்சிட்டுத் தனது நண்பர்களுக்கும் நண்பிகளுக்கும் கொடுத்துள்ளார்.



## ஆவ்வ்வ்

→ வாயைப் பிளந்தபடி 'ஆவ்வ்' என அண்ணார்ந்து பார்த்தபடி இருக்கும் இந்தப்பறவையின் பெயர் பெலிக்கன் ஆகும். இதைக் கூழைக்கிடாக்கள் என்று அழைப்பார்கள்.

தண்ணீரில் நீந்திக் கொண்டிருந்தாலும் வெயில் வெப்பத்தால் இவை வாயைப் பிளந்தபடி மழை வராதா என்று ஏங்குகின்றன.

இவை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள மிருகக்காட்சிசாலையில் இருந்தபோது பிடிக்கப்பட்ட படம் தான் இது.

## நட்சத்திர மோதல்

↓ இரு வெவ்வேறு துறைகளில் பிரபலமான இருவரைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். இடதுபக்கம் காணப்படுபவர் உலகக்குத்துச்சண்டை வீரர் சுகர்ரே லெனார்ட். வலது புறம் இருப்பவர் சொல்லவே தேவையில்லை தெரிந்திருக்கும்.

ஆம் 'ரொக்கி', 'ரம்போ' பட நாயகனும் ஹொலிவூட் சூப்பர் ஸ்டார்களில் ஒருவருமான சில்வெஸ்டர் ஸ்ரலோன்.

குத்துச்சண்டை நட்சத்திரமும் இந்தத் திரையுலக நட்சத்திரமும் இணைந்தபடி செல்வது சிறப்புப் போட்டியொன்றில் மோதிக் கொள்வதற்காக. போட்டி என்றவுடன் குத்துச்சண்டை போட்டி என்று நினைக்க வேண்டாம்.

இருவரும் 'கொல்ஃப்' என்ற விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளவே செல்கிறார்கள். அண்மையில் நடந்த விருது வழங்கும் விழா ஒன்றிற்கு முன் இந்த நட்சத்திர 'கொல்ஃப்' மோதல் இடம் பெற்றது.




## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து | 10.07.2000



### செல்வி ராஜ்குமார் அஜீவனா (அஜ்)

சுவிஸில் வசிக்கும் சின்னக்குளம் சுந்தரோடையைச் சேர்ந்த ராஜ்குமார் ஆவரங்காலைச் சேர்ந்த ... தம்பதிகளின் செல்வப் புதல்வி அஜீவனா தனது முதலாவது பிறந்த தினத்தை 15.07.2000ல் Swiss Effretikon-ல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். அஜீவனாவை அன்பு அப்பா, அம்மா [illegible]

தகவல்: ராஜ்குமார் Swiss, Effretikon, Tel: 052,343,07,11